விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினெட்டு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 12 சனிக்கிழமை (28.08.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 252

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## இந்திய வெளியுறவுச் செயலர் யாழ்ப்பாணத்துக்கு வருகிறார்

(யாழ்ப்பாணம்)

இந்திய வெளியுறவுச் செயலாளர் நிருபமா ராவ் எதிர்வரும் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகிறார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

இந்திய வெளியுறவுச் செயலாளர் நிருபமா ராவ் எதிர்வரும் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து, யாழ்.பொது நூலகம் மற்றும் யாழ். மாநகர சபையின் கீழ் இந்திய அரசின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் நேரில் சென்று பார்வையிடுவதுடன் அதிகாரிகளுடனும் பேச்சு நடத்தவுள்ளார். (ச-5)

### யாழ்ப்பாணத்துக்கு வரலாமா?

## வெளிநாட்டிலிருந்து குவியும் தொலைபேசி அழைப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கு வரும் வெளிநாட்டவர்களிடம் கப்பம் கோரும் சம்பவங்கள் அதிகரித்துள்ள நிலையில் வெளிநாட்டிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருவதற்கு மக்கள் பின்னடிப்பதாக வெளிநாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக யாழ்ப்பாணத்தில் உள்ள தமது உறவுகளுக்குத் தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டு தகவல்களைப் பெறுவதாகவும் தெரிய வருகின்றது.

விமான ரிக்கெட் பெறப்பட்டு விட்டது. பயண ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்து விட்டன. ஆனால் யாழ்ப்பாணத்தில் கப்பம் பெறும் சம்பவங்கள் அதிகரித்திருப்பதாக அறிகிறோம். நாம் அங்கு வரலாமா? என்ற கேள்விக் கணைகளையே வெளிநாட்டிலிருந்து கேட்பதாகக் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ள வெளிநாட்டு உறவுகள் அச்சம் காரணமாக உடனடியாகத் திரும்புவதற்கு எண்ணியுள்ளதாகவும் அறியப்பட்டுள்ளது.

இதேவேளை வெளிநாட்டிலிருந்து வந்து வடமராட்சியில் (18 ஆம் பக்கம் பார்க்க)

# அசைக்க முடியாத பலத்துடன் அரசு;

# ஆதரவு வழங்கிய முஸ்லிம் காங்கிரஸ்


## தேவைக்கு மேலதிகமாக ஒரு ஆசனம்

(கொழும்பு)

அரசியலமைப்பு மாற்றத்திற்கு 5 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே பற்றாக்குறையாக இருந்த நிலையில் 6 ஆசனங்களை நாடாளுமன்றத்தில் கொண்டுள்ள சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்திற்கு வழங்கும் ஆதரவுடன் அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அசைக்க முடியாத பலத்தைப் பெற்றுள்ளது. (18 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் அமைப்புத் திருத்தத்திற்கு முஸ்லிம் காங்கிரஸ் பூரண ஆதரவு

### கட்சியின் உயர்பீடம் கூடி முடிவு



(கொழும்பு)

அரசியல் அமைப்பு திருத்தத்திற்காக அரசாங்கத்திற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவளிக்கும் என அக் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கட்சியின் தலைமையகமான தாருஸ்ஸலாமில் நேற்று மாலை நடைபெற்ற கட்சியின் அதியுயர் பீட குழுக் கூட்டத்தில் இத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

இக் கூட்டத்தின் பின்னர் நடைபெற்ற (18 ஆம் பக்கம் பார்க்க)

## இந்.பாதுகாப்புச் செயலர் இலங்கைக்கு வருகிறார்

(கொழும்பு)

இந்தியப் பாதுகாப்புச் செயலாளர் பிரதீப் குமார் விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இரு நாடுகளுக்குமிடையிலான பாதுகாப்பு விவகாரங்கள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தும் நோக்கில் இந்தியப் பாதுகாப்புச் செயலாளர் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

நீண்ட காலமாக நிலவி வந்த யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ள நிலையில் இரு நாடுகளுக்குமிடையிலான பாதுகாப்பு உறவுகளில் சில மாற்றங்கள் ஏற்படவுள்ளது. அதற்கான கலந்துரையாடலில் ஈடுபடவே பாதுகாப்புச் செயலாளர் இலங்கைக்கு வரவுள்ளார். (ச-5)

## அமைச்சர்கள் பலர் அடுத்த மாதம் யாழ்ப்பாணத்துக்கு படையெடுப்பு!

### யாழ்.மாவட்ட அபிவிருத்தி குறித்து ஆராய

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அபிவிருத்திப் பணிகள் மற்றும் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் ஆராய்வதற்கு முக்கிய அமைச்சர்கள் அடுத்த வாரம் முதல் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளனர்.


இதில் வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் விமல் வீரவன்ச எதிர்வரும் 31 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் வருகை தந்து யாழ்.நிலைமைகள் தொடர்பில் ஆராயவுள்ளார்.

அத்துடன் எதிர்வரும் 3 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமையிலான அமைச்சர்கள் குழு யாழ். மாவட்ட அபிவிருத்தி மீளாய்வுக் கூட்டத்தை நடத்தவுள்ளனர்.

தொடர்ந்து எதிர்வரும் 12 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ள அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி யாழ்.மாவட்ட (18 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் நலன்புரித் திட்ட முன்னெடுப்புக்கு கூட்டமைப்பையும் இணைக்க வேண்டும்

### விநாயகமூர்த்தி எம்.பி. கோரிக்கை



(கொழும்பு)

தம்மையும் இணைத்துக் கொண்டு வட மாகாண மக்களுக்கான நலன்புரித் திட்டங்களை முன்னெடுக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கான குடி யேற்ற நடவடிக்கைகள் தற்போது (18 ஆம் பக்கம் பார்க்க)

## மர்மப் பொருள் வெடித்து குடும்பப் பெண் படுகாயம்

### கொட்டடிப் பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

எரிந்து கொண்டிருந்த அடுப்புக்குள் போட்ட மர்மப் பொருள் வெடித்துச் சிதறியதில் குடும்பப் பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் கொட்டடிப் பகுதியில் இடம்பெற்றது. இதில் அதேயிடத்தைச் சேர்ந்த சி.ரட்ணாம்பிகை (வயது-42) என்ற குடும்பப் பெண்ணே படுகாயமடைந்தவராவார்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது, வீட்டில் பிரஸ்தாபப் பெண் சமைத்துக் கொண்டிருந்தபோது அங்கு வந்த அவரின் சிறிய மகள் அடுப்புக்குள் மர்மப் பொருள் ஒன்றை போட்டுள்ளார்.

அப்போது அவ் மர்மப் பொருள் பாரிய சத்தத்துடன் வெடித் (18 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தாக்கப்பட்ட காவலாளி சிகிச்சை பலனின்றி மரணம்

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாத நபரால் தாக்கப்பட்ட நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த மருதனார்மடம் பெண்கள் விடுதி ஒன்றைச் சேர்ந்த காவலாளி சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்று அதிகாலை வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் நள்ளிரவு மருதனார்மடம், உரும்பிராய் வீதியில் அமைந்துள்ள குறித்த விடுதியினுள் நுழைந்த இனந்தெரியாத நபர் பெண்கள் தங்கியிருந்த அறையின் கதவை தட்டியதாகவும் இந்த சத்தத்தைக் கேட்டு காவலாளியாக கடமையாற்றிய முத்து லட்சுமணன் (வயது 65) என்பவர் சென்று பார்க்க முற்பட்டவேளையில் ஒருவர் வந்து தாக்கியதுடன் கத்தியால் குத்திவிட்டு தப்பி ஓடியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

படுகாயமுற்ற நிலையில் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு இவர் கொண்டு செல்லப்பட்ட போதும் சிகிச்சை பலனளிக்காத நிலையில் அவர் மரணமானார்.

சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ச-5)

# இலங்கை இனப்பிரச்சினைக்கு இந்தியா தீர்வை முன்வைக்க வேண்டும்

## ஐ.தே.க. கோரிக்கை

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வுக்கு இந்திய அரசாங்கம் யோசனை ஒன்றை முன்வைக்க வேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சி கோரியுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.சுவாமிநாதன் நேற்று கொழும்பில் கூட்டிய பத்திரிகையாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றை முன்வைக்காமல் இருந்து வருகிறது. எனவே இந்திய அரசாங்கம் இந்த விடயத்தில் தலையிட்டு யோசனை ஒன்றை முன் வைக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். இலங்கையில் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணப்படாதவரையில் வெளிநாடுகளிலுள்ள புலம்பெயர்ந்த தமிழர்கள் வடக்கின் புனரமைப்புகளுக்கு நிதியுதவிகள் அளிக்கமாட்டார்கள் என சுவாமிநாதன் குறிப்பிட்டார்.

வன்னியில் மீள்குடியமர்ந்தோருக்கு பருப்பு போன்ற நிவாரணங்கள் 6 மாதக் காலங்களுக்கு வழங்கப்படு வருகின்றன. எனினும் போசணையான உணவுகள் வழக்கப்படுவதில்லை இந்நிலையில் எவ்வித வருமானங்களும் அற்ற அவர்களுக்கு ஆறு மாதகாலத்தின் பின்னர் அரசாங்கம் எதனை வழங்கப் போகிறது என சுவாமிநாதன் கேள்வி எழுப்பினார். (ச-5)

# மென்பந்து கிரிக்கெட் இறுதிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மனித உரிமைகள் இல்லத்தினால் வாக்குப்பதிவினையும் வாக்களிப்பின் முக்கியத்துவத்தினையும் ஊக்கப்படுத்தும் முகமாக கிராம மட்டத்தில் நடத்தப்பட்டு தெரிவு செய்யப்பட்ட அணிகளுக்கு இடையிலான மென்பந்து துடுப்பாட்ட போட்டியின் இறுதி ஆட்டம் இன்று காலை 9.00 மணிதொடக்கம் மாலை 5 மணி வரை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம் பெறும்.

இச் சுற்றுப்போட்டியில் வெற்றிபெறும் அணி ஏனைய மாவட்டங்களில் வெற்றிபெற்ற அணிகளுடன் எதிர்வரும் 31ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு வவுனியாவில் நடைபெற இருக்கும் போட்டியில் கலந்துகொள்ள உள்ளது. (ச)

# வன்னியில் இறுதிப் போரில் உயிரிழந்தவர்களுக்கு இறப்பதற்கு இரு மாதங்களுக்கு முன்னான திகதியிட்டுப் பதியப்படும் மரணச் சான்றிதழ்

(கொழும்பு)

வன்னியில் இறுதிப் போரின் போது கொல்லப்பட்டவர்களின் மரணச் சான்றிதழ்கள் அவர்கள் மரணமான திகதிக்கு ஓரிரு மாதங்களுக்கு முன்னால் உள்ள திகதியில் பதியப்படுவதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

வன்னியில் இறுதிக்கட்டபோர் நடைபெற்ற கடந்த ஆண்டு மே மாதப் பகுதியில் அதிகளவான தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

எனினும் இவர்களுக்கானமரணச்சான்றிதழ்கள்மார்ச்மாதம்புலிகளின்கட்டுப்பாட்டில் இருந்த காலத்தில் நடைபெற்றதாகப் பதியப்படுகின்றன.

இது போன்ற சம்பவம் கிளிநொச்சி கணேசபுரம் பகுதியில் உள்ள ஒருவருக்கு நடைபெற்றுள்ளது. இவருடைய கணவர் உட்பட ஐவர் கடந்த மே மாதம் 15ஆம் திகதி செல்வீச்சில் கொல்லப்பட்டுள்ளனர்.

எனினும் மரணச்சான்றிதழ்கள் மார்ச் மாதத்தில் கொல்லப்பட்டதாக எழுதப்பட்டுள்ளது. இது குறித்துக் கேட்டபோது தமக்கு அப்படித்தான் பதியும்படி மேலிடம் கூறியுள்ளதாக மரண விசாரணை அதிகாரியும், கிராம சேவர்களும் கூறியுள்ளனர்.

இறுதிக்கட்ட போரின்போது கொல்லப்பட்ட தமிழ் பொதுமக்களின் தொகையை குறைத்துக் காட்டும் நோக்கிலும் சர்வதேசத்தினால் முன்வைக்கப்படும்போர்க் குற்றங்களிலும் இருந்து தப்பிக்கவுமே இலங்கை அரசாங்கம் திட்டமிட்டு இந்த நடவடிக்கையை மேற்கொள்வதாக மக்கள் பலரும் கூறுகின்றனர். (ச-5)

# ஆசிரியர் இடமாற்றம் தொடர்பான மீளாய்வுக்குழுக் கூட்டம் யாழில் செவ்வாயன்று நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள 5 கல்விவலயங்களுக்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றிய வன்னிக்கல்விவலயங்களுக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு அண்மையில் இடம் மாற்றம் பெற்ற ஆசிரியர்கள் தொடர்பிலான மீளாய்வுக்குழுக் கூட்டம் எதிர்வரும் 31ஆம் திகதி யாழ். மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் நடைபெரும் இக் கூட்டத்தில் வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் வீ. இராசையா உட்பட கல்வி அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

வடக்கு மாகாண கல்வித்திணைக்களத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு மாவட்டங்களுக்கு இடையிலான இடமாற்றம் வழங்கப்பட்டது.

எனினும் இவ் இடமாற்றம் தொடர்பில் ஆசிரியர் சங்கங்களினால் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டது.

இந் நிலையில் இவ் ஆசிரியர்கள் இடமாற்றத்தினை இடை நிறுத்தி கல்வி வலய ரீதியாக மீள் பரிசீலனை செய்யுமாறு வடக்கு மாகாண ஆளுநரால் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கும் பணிப்புரை வழங்கப்பட்டது.

இந் நிலையில் யாழ். மாவட்டத்திற்குள் 5 வலயக் கல்வி அலுவலகங்களுக்குட்பட்ட பாடசாலைகளின் கடமையாற்றும் ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பில் ஆராயும் கூட்டமே எதிர்வரும் 31ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்.மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் பணிமனையில் இடம் பெறவுள்ளது. (ச-5)

# ஜனாதிபதி கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

பொது நிர்வாக அமைச்சின் ஏற்பாட்டுக்கு அமைவாக வலி தெற்கு பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையேயான ஆண்கள், பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகள் இன்று சனிக்கிழமை 28ஆம் திகதி காலை 8.30 மணிக்கு உடுவில் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பொது நிர்வாக அமைச்சின் 40 வருட பூர்த்தியை முன்னிட்டு நடத்தப்படும் இந்தப் போட்டியில் தேசிய மட்டத்தில் வெற்றி பெறும் அணிக்கு ஜனாதிபதியின் தங்கக் கிண்ணம் பரிசாக வழங்கப்படவுள்ளது.

பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே முதற்கட்டமாக இடம் பெறும் இப் போட்டிகளைத் தொடர்ந்து இரண்டாம் கட்டமாக மாவட்ட மட்டத்தில் போட்டிகள் நடைபெற்று அகில இலங்கை ரீதியில் இறுதிக்கட்டமான போட்டிகள் நடைபெறவுள்ளன. (ச-5)


மாபெரும் புத்தகக் கண்காட்சி

இன்று சனிக்கிழமை முதல் செப்டெம்பர் 7ஆந் திகதி வரை நல்லூர் பின்வீதியில் அமைந்துள்ள மங்கையர்க்கரசி வித்தியாலய மெஜிக் கூடத்தில்

எமது வெளியீடுகளுக்கு 10% கழிவு

பி.ப. 1.00 மணி தொடக்கம் இரவு 8.00 மணிவரை

சிறுவர் நூல்கள், புலமைப்பரிசில் நூல்கள், பொது நூல்கள், பயிற்சி நூல்கள், கணினி நூல்கள், பாடசாலை உபகரணங்கள், இலக்கிய நூல்கள் மலிவுவிலையில்...

பாடசாலை மாணவர்களுக்கு, நூலகங்களுக்கு விசேட விலைக்கழிவு

காயத்திரி பப்ளிகேஷன் கொழும்பு

011 - 2727621, 0777892028 (C-946)


# நல்லூர்ச் சூழலில் போசாக்கு விழிப்புணர்வு

(யாழ்ப்பாணம்)

UNICEF இன் அனுசரணையுடன் யாழ். மாவட்ட போசனை சமூகம் நடத்தும் போசாக்கு விழிப்புணர்வு நிகழ்வு நல்லூர்கந்தசுவாமி கோவிலின் பின் வீதியில் (திருஞான சம்பந்தர் ஆதீனம் முன்பாக) கடந்த 24ஆம் திகதி முதல் காலை 5.00-8.00 மணிவரை நடைபெற்றுவருகின்றது.

இங்கு தாய்சேய் போசாக்கு ஆரோக்கியவாழ்விற்கான உணவுப் பழக்கவழக்கங்கள், நோய் நிலைகளில் உணவுப்பழக்கங்கள் போன்ற பல விடயங்கள் தொடர்பாக விளக்கம் அளிக்கப்படுவதோடு சில மருத்துவ பரிசோதனைகளும் இலவசமாக மேற்கொள்ளப்படுகின்றது.

இந் நிகழ்வு கடந்த வருடமும் நடைபெற்று பலருடைய வரவேற்பைப் பெற்றதோடு இவ்வருடம் மேலதிக பல விடயங்களையும் உள்ளடக்கியுள்ளது. இந் நிகழ்வில் பங்குபற்றி பயன்பெற்றுச் செல்லுமாறு யாழ். போசனை சமூகம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றது. (ச)

# ஸ்ரீ அம்மா பகவான் ஐஸ்வரிய பூசை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ அம்மா பகவான் ஐஸ்வரிய பூசை இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீக பிரார்த்தனை மையத்தில் இடம் பெறும். பக்தர்களை கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுவிக்கப்பட்டுள்ளது. (ச-3)




# இன்று ஒரு தகவல்

## தாவும் மனிதர்கள்

உண்மையும் நேர்மையும் உயர்வதற்கு வழிகள். அதை விட்டுட்டு உட்கார்ந்த இடத்தில் இருந்து கொண்டே உயரப் போக வேண்டுமென்று கற்பனை பண்ணிக் கொண்டிருக்கக் கூடாது.

இரண்டாவது செய்யும் தொழிலே தெய்வம். எந்தத் தொழிலை நாம் செய்தாலும் அந்தத் தொழிலுக்குரிய பெருமையைப் புரிந்து கொண்டு அதில் ஈடுபடவேண்டும். அதை விட்டுட்டு ... "என்ன சேர் பிழைப்பு இது. இந்தத் தொழிலை மனுஷன் செய்வானா"என்று சொல்லிக் கொண்டு அந்தத் தொழிலையே தொடர்ந்து செய்து கொண்டிருப்பவர்கள் நம்மில் பலபேர் உண்டு.

எனக்கு வேண்டப்பட்ட நண்பர் ஒருத்தரை சந்தித்தேன்.

திரைப்படத்துறைக் கலைஞர் அவர். (நடிகர் கே.கே. சௌந்தர்) அவர் ஒரு கதை சொன்னார். இப்பொழுது நாம் பேசிக் கொண்டிருந்தோமே இந்தக் கருத்துக்கு அந்தக் கதை பொருத்தமாகத் தெரிந்தது.

அதாவது ஒரு பெரிய மலைப் பகுதியின் அடிவாரத்தில் ஒரு சிற்பி உட்கார்ந்து சிலை வடித்துக் கொண்டிருந்தான்.

கையில் ஒரு சின்ன உளியை வைத்துக் கொண்டு ஒரு பெரிய கருங்கல் பாறையை கொஞ்சம் கொஞ்சமாக உடைத்துக் கொண்டிருந்தான். சிற்பம் செய்வது எப்படிப்பட்ட தொழில். எல்லோராலும் முடியுமா அது?

அப்படி இருந்தும் அந்த சிற்பிக்கு மனநிறைவு இல்லை.

வெயிலில் உட்கார்ந்து வேலை செய்வது ரொம்ப கஷ்டமாக இருந்தது. சிற்பியாக இருப்பதனால் தானே சூரியன் கடுமையான வெயிலை நம்மீது வீசுகிறான். நாமே அந்த சூரியனாக இருந்து விட்டால் இந்தக் கஷ்டம் இருக்காதே.

நம்மைக் கஷ்டப்படுத்துபவன் நம்மைவிட வலிமையுள்ளவன். அதனால் நாமே அவனாக மாறி விடுவது நல்லது என்று நினைத்தான்.

உடனே அவனுடைய எண்ணம் நிறைவேறிவிட்டது.

இயற்கை அந்த சிற்பியை ஒரு சூரியனாக மாற்றிவிட்டது. சிற்பி சூரியனாக மாறிவிட்டான். இனிமேல் இந்த உலகத்தில் நம்மைவிட வலிமையுள்ளவன் யாரும் கிடையாது என்று நினைத்தான். சந்தோஷமாக இருந்தான். இந்த நேரத்தில் மேகங்கள் அந்தப்பக்கமாக நகர்ந்து வந்தது. கருமேகம் கூட்டமாக வந்து சூரியனை மறைத்து விட்டது. இப்பொழுது சூரியனாக இருந்த சிற்பி நினைத்தான்.

"என்ன இது... என்னையே மேகம் மறைக்கிறது. என்றால் அது என்னைவிடப் பெரிய ஆளாகத் தான் இருக்க வேண்டும். அதனால் இனிமேல் சூரியனாக இருப்பதை விட மேகமாகத்தான் இருக்க வேண்டும் என்று நினைத்தான்.

இயற்கை அவனை மேகமாக மாற்றிவிட்டது. மேகமாக மாறி வான வீதியில் உலா வந்து கொண்டிருந்தான்.

எதிரில் பெரிய பெரிய மலைகள் உயர உயரமாக வழியை அடைத்துக்-கொண்டு நின்றது.

மேகம் வேகமாகப் போய் மலையில் மோதியது. அந்த மலையைத் தாண்டி அப்பால் போக முடியவில்லை.

இப்ப அந்த மேகம் நினைத்தது. நாம் எந்தத்தடையுமில்லாமல் அந்தரத்தில் மிதந்து வருகிறோம். நம்மையே போக விடாமல் தடுக்கிறது என்றால் அந்த மலைக்கு எப்படிப்பட்ட வலிமை இருக்க வேண்டும். இனிமேல் நாம் மேகமாக இருந்து பயனில்லை. மலையாக இருக்க வேண்டும். அதுதான் பெருமை என்று நினைத்தது.

உடனே மேகமாக இருந்த சிற்பி மலையாக மாறிவிட்டான். பெரியமலை பூமிக்கும் வானத்திற்குமாக நின்றது.

இனிமேல் எந்தக் கஷ்டமும் இல்லை என்று நினைத்தது மலை.

இப்படி நினைத்துக் கொண்டிருக்கும் போதே கீழே ஏதோ சத்தம் கேட்டது. மலை குனிந்து பார்த்தது.

ஒருத்தன் மலைக்கு கீழே கொத்திக் கொண்டிருந்தான். ஏதோ ஒரு சிற்பம் செய்து கொண்டிருந்தான்.

இப்பொழுது அந்த மலை நினைத்தது. மலையையே ஒருத்தன் உடைக்கிறான் என்றால் அவன் எப்படிப்பட்ட வலிமை உடையவனாக இருக்க வேண்டும். இனிமேல் மலையாக இருந்து பிரயோசனமில்லை. மனிதனாக மாறவேண்டும் என்று நினைத்தது மலை.

உடனே மலை மனிதனாக மாறியது. மறுபடியும் ஒரு உளியை வைத்துக் கொண்டு பழைய படியே கருங்கல் பாறையை உடைத்துக் கொண்டிருந்தான் அந்த ஆள்.

இந்தக் கதையிலிருந்து என்ன தெரிகிறதென்றால், "தன்னுடைய உண்மையான பலம் என்னவென்று தெரியாமலே தாவித்தாவி தடுமாறிக் கொண்டிருக்கிறான் மனிதன்"என்பது தான். இனிமேலாவது அதைப் புரிந்து கொள்வோம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழிலிருந்து 36 பெண் சாரணர்கள் மலேசியாவுக்குப் பயணமாகியுள்ளனர்

உலக பெண் சாரணிய அமைப்பின் நூற்றாண்டு விழாவை கொண்டாடும் முகமாக மலேசியாவில் நடைபெற இருக்கும் ஒன்று கூடலில் பங்குபற்றுவதற்காக யாழ். மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 36 பெண் சாரணர்கள் நேற்று யாழிலிருந்து புறப்பட்டனர்.

யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெற்ற பெண் சாரணர்களை வழியனுப்பும் வைபவத்தில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சார்பில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் கலந்து கொண்டார்.

இக்குழுவினர் இன்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து கோலாலம்பூர் புறப்படுவர் என்றும் இவர்களுக்கான பயண ஏற்பாடுகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# கலந்துரையாடல்

தென்மராட்சிப் பிரதேச மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம் தமது எல்லைக்குட்பட்ட கிராம அபிவிருத்திச் சங்க தலைவர், செயலாளர், பொருளார் ஆகியோருடனான விசேட கலந்துரையாடல் ஒன்றை இன்று சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடத்தவுள்ளது. (6-4-29)

# கண்டெடுக்கப்பட்ட ஆவணங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனாவைத்தியசாலை 15 ஆம் விடுதியில் நடராசா கந்தையா என்பவருடைய (இல. 3213 33486V) தேசிய அடையாள அட்டையும் நடராசா பாக்கியம் என்பவருடைய 11145 இலக்கம் கொண்ட கடற்படையினரால் வழங்கப்பட்ட அடையாள அட்டையும் கண்டெடுக்கப்பட்டு வைத்தியசாலை காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் நேரில் வந்து பெற்றுக் கொள்ளமுடியும் என யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (6)

# கணனிப் பயிற்சி நெறிகள்

(அல்வாய்)

வடமராட்சி வலயக் கணனி வள நிலையத்தினால் 5 புதிய கணனிக் கற்கைநெறிகள் ஆரம்பிக்கப் படவுள்ளது.

இதில் க.பொ.த (உ/த) பரீட்சை எழுதிய மாணவர்களும் க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தி அடைந்த மாணவர்களும் பங்குபற்ற முடியும் எனவும் கற்க விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை பதிவுகளை மேற்கொள்ள முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இக்கற்கை நெறியின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும் என வடமராட்சி வலய கணணி வள நிலைய முகாமையாளர் இ.ஸ்ரீதரன் அறிவித்துள்ளார். (6-4-19)

# இராசி பலன்

*28.08.2010*
*(ஆவணி 12, சனிக்கிழமை)*
*சதுர்த்தி பின்னிரவு 5.40 மணி வரை*
*ரேவதி முழுவதும்*
*இராகுகாலம் 9.05-10.35 மணி வரை*
*சுபநேரம் 3.05-4.35 மணி வரை*
*சங்கடகர கணபதி விரதம்*

**மேடம்** விரயங்கள் ஏற்படாதிருக்க விழிப்புணர்ச்சியுடன் செயல்படுவது நல்லது, உத்தியோகத்தில் எதிர்பார்த்த மாற்றங்கள் வந்து சேரலாம், சிலகாரியங்கள் அலைச்சலாக அமையலாம்.

**இடபம்** வியக்கும் செய்தி வீடு வந்து சேரும் நாள், சான்றோர்களின் சந்திப்பு கிடைக்கும், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும்.

**மிதுனம்** நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள், வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் ஏற்படும்.

**கடகம்** போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காணும் நாள், உறவினர் பகை மாறும், நேற்று செய்யாமல் விட்ட வேலை ஒன்றை இன்று செய்து முடிப்பீர்கள்.

**சிங்கம்** துயரங்கள் தீர துர்க்கையை வழிபட வேண்டிய நாள், திடீர் செலவுகளைச் சமாளிக்க பிறரிடம் கைமாற்று வாங்கும் சூழ்நிலை உருவாகும், தேகநலனில் அக்கறை தேவை.

**கன்னி** உறவினர் வழியில் உள்ளம் மகிழும் செய்தி வந்து சேரும் நாள், எடுத்த காரியத்தை எளிதில் முடிக்க இல்லத் தாரின் ஒத்துழைப்பு கிடைக்கும், திருமணப் பேச்சுக்கள் சுமூகமாக அமையலாம்.

**துலாம்** நன்மைகள் நடைபெறும் நாள், பிறர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசித் தகவல் தனவரவிற்கு வழிவகுக்கும், அயலவர்களின் ஒத்துழைப்பு கிட்டும்.

**விருச்சிகம்** காரியங்கள் நிறைவேறும் நாள், இறை சிந்தனை மேலோங்கும், வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், பணவரவு திருப்தி தரும்.

**தனுசு** பெற்றோர் வழியில் ஏற்பட்ட மனஸ்தாபம் அகலும், அஞ்சல் வழிச் செய்தி மனதிற்கு ஆறுதலாக அமையலாம், புதிய சொத்து வாங்கும் எண்ணம் நிறைவேறலாம்.

**மகரம்** வெற்றிச்செய்திகள் வீடு வந்து சேரும் நாள், புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்து மகிழ்வீர்கள், சொத்துக்களால் வருமானம் கிடைக்கலாம்.

**கும்பம்** சந்தித்த நபர்களால் சந்தோசம் அதிகரிக்கும், வீடு மனை வாங்க போட்ட திட்டம் நிறைவேறலாம், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், காரியங்கள் எளிதில் நிறைவேறும்.

**மீனம்** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், சோம்பல் காரணமாக சில காரியங்களை தள்ளிப் போடுவீர்கள், இறை நம்பிக்கை மேலோங்கும், உறவினர் வருகையுண்டு.

வளவன்


# பேசும் படம்




காட்சி-யாழ்.நகர்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 100 | 90 |
| தக்காளி | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 60 |
| கோவா | 90 | 80 |
| கரட் | 100 | 90 |
| பூசணி | 50 | 40 |
| புடோல் | 50 | 40 |
| வாழைக்காய் | 70 | 60 |
| சின்ன வெங்காயம் | 60 | 60 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 |
| பாகற்காய் | 100 | 100 |
| வெண்டிக்காய் | 50 | 40 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 |
| பயற்றங்காய் | 140 | 100 |
| லீக்ஸ் | 140 | 140 |
| பீற்றூட் | 60 | 50 |
| கறிமிளகாய் | 80 | 80 |
| முருங்கைக்காய் | 140 | 100 |
| போஞ்சி | 170 | -- |
| கத்தரிதம்புள்ள | 50 | 50 |
| கீரை - 1 பிடி | 25 | 30 |
| தேசிக்காய் | 100 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 |






உலக புத்தக தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி பொதுநூலகத்தில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சியை இந்து அரச ஊழியர் இணையத் தலைவரும் முன்னாள் ஆசிரியருமான வே.கே.தனபாலன் நாடாவெட்டித் திறந்துவைப்பதனையும் அருகில் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த சாவகச்சேரி நகரசபை செயலாளர் செல்வி வி.சிவக்கொழுந்து, நூலக வாசகர் வட்ட உறுப்பினர் மோகனராஜலிங்கம் மற்றும் மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோர் நிற்பதையும் புத்தகக் கண்காட்சியை மாணவர்களும் பொதுமக்களும் பார்வையிடுவதனையும் உலக புத்தக தினத்தை முன்னிட்டு நடைபெற்ற போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுடன் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-சாவகச்சேரி செய்தியாளர்)

# கே.பி யிடம் பணம் உள்ளவரை அவருக்கு உயிராபத்து இல்லை

## அநுரகுமாரதிஸாநாயக்க தெரிவிப்பு



(கொழும்பு)

கே.பி.யிடம் கப்பல்களும் பணமும் இருக்கும் வரை அவரது உயிருக்கு அரசால் எதுவித ஆபத்தும் ஏற்படாது என்று ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. அநுரகுமார திஸாநாயக்க நேற்று முன்தினம் கூறினார்.

பத்தரமுல்லையில் உள்ள ஜே.வி.பி.யின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போது இதனை தெரிவித்தார்.

அவர் இது குறித்து கூறுகையில்,

அரசின் ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு எதிராகக் குரல் கொடுக்க முடியாத நிலையில் அரசுடன் இணைந்துள்ள கட்சிகள் உள்ளன.

ஜாதிக ஹெல உறுமய கட்சி அரசு செய்யும் செயல்களுக்கு ஆதரவு தெரிவித்துப் பேசுகிறது.

கே.பி. அரசின் பிடியில் இருக்கிறார். அவரைத் தடுத்து வைப்பதற்கான நீதிமன்ற உத்தரவும் பெறப்படவில்லை. அவ்வாறாயின் அவர் எந்தச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார் என்று அரசு நாட்டு மக்களுக்குக் கூறவேண்டும்.

இந்த விடயம் தொடர்பாக நான் நாடாளுமன்றில் கேள்வி எழுப்பியபோதும் அரசால் எதுவித பதிலும் வழங்கப்படவில்லையெனவும் இருப்பினும் கே.பி.யிடம் கப்பல்களும் நிதியும் இருக்கும் வரை அவரது உயிருக்கு எதுவித ஆபத்தும் ஏற்படாது என்பது எமக்குத் தெரியும் என்றார். (6-2)

# புற்றுநோய் கண்காட்சி

நல்லைக்கந்தன் ஆலயப் பெருந் திருவிழாவை முன்னிட்டு யாழ் போதனா வைத்தியசாலைப் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவின் யாழ்.மருத்துவபீட மாணவர்களால், புற்றுநோய் பற்றிய கண்காட்சியும் விபரணத் திரைப்படக் கண்காட்சியும் நேற்றுமுன்தினம் தொடக்கம் தினமும் மாலை 5.00 மணியிலிருந்து இரவு 7.30 மணி வரை நல்லூர் ஆலய மேற்கு வீதியில அமைந்துள்ள மூத்த விநாயகர் ஆலயத்திற்கு அண்மையில் 'பாட்லீட் பினான்ஸ்' நிறுவன அனுசரணையுடன் நடாத்தப்படுகிறது.

மேற்படி நிகழ்வு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 9 ஆம் திகதி வியாழக்கிழமை வரை நடைபெறுவதால் ஆர்வலர்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து பயன்பெறுமாறு வேண்டப்படுகின்றனர். (6-2)

# சங்கிலியை அபகரிக்கும் முயற்சி தடுக்கப்பட்டது

(இருபாலை)

கட்டப்பிராய் கலைமணி வீதியால் துவிச்சக்கரவண்டியில் சென்று கொண்டிருந்த இளம் பெண் ஒருவரின் சங்கிலியை அபகரிக்க முயன்றபொழுது அப் பெண்ணின் புத்திசாதுரியத்தால் முறியடிக்கப்பட்டது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, கடந்த 22ஆம் திகதி மாலை 6.30 மணியளவில் குறித்த பெண் துவிச்சக்கர வண்டியில் சென்றுகொண்டிருந்த போது அவ் வீதியால் வந்துகொண்டிருந்த இளைஞன் ஒருவன் கழுத்தில் இருந்த சங்கிலியை அறுக்க முற்பட்ட சமயம் அப்பெண்ணின் புத்திசாது ரிய நடவடிக்கையில் தடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. (6-4-2-136)

# மலையகத்தில் புதிய தேர்தல் தொகுதிகள் உருவாக்கப்பட வேண்டும்

## அரசாங்கத்திடம் இ.தொ.கா.வலியுறுத்தல்

(கொழும்பு)

மலையகத்தில் புதிய தேர்தல் தொகுதிகள் உருவாக்கப்பட வேண்டுமென்று அரசாங்கத்திடம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.

சிறுபான்மையினருக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலேயே தேர்தல் முறையில் மாற்றம் கொண்டுவரப்படும் என அரசாங்கம் உறுதியளித்துள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் பொருளாதார பிரதியமைச்சருமான முத்துசிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத் தேர்தல் முறையில் மாற்றம் ஏற்படுத்தும் பொழுது பேச்சுவார்த்தை நடத்தி இணக்கம் பெற்றுக்கொள்ளப்படுமென அரசாங்க தரப்பில் உறுதியளிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்துடன் அண்மையில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையின்போது, இந்த உத்தரவாதம் அளிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

உத்தேசிக்கப்பட்டுள்ள தேர்தல்முறை மாற்றத்தின்படி விகிதாசார முறைமை மாற்றப்பட்டுத் தொகுதி வாரிமுறையுடன் விகிதாசார முறையும் கலந்த ஒரு முறைமை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

எனவே, இந்த முறையில் சிறுபான்மையினர் பாதிக்கப்படாதிருக்க வேண்டுமென்று காங்கிரஸ் அரசாங்கத்திடம் கேட்டுக்கொண்டுள்ளது. மலையக மக்கள் பரந்துபட்டு வாழ்கிறார்கள். எனவே விகிதாசார முறையில் அவர்களடைந்த நன்மை பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் என்பன பாதித்துவிடக் கூடாது.

மலையக மக்கள் பரந்து வாழும் சூழலுக்கு ஏற்ப புதிய தொகுதி உருவாக்கப்பட வேண்டுமென்றும் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளதாக பிரதியமைச்சர் தெரிவித்தார். புதிய தொகுதிகள் உருவாக்கப்பட வேண்டிய பிரதேசங்களை அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முறையால் மலையகப் பெருந் தோட்டப் புறங்களுக்குப் பாதகமான நிலை கிடையாது என்றும் ஒவ்வொரு தோட்டத்திலும் மக்கள் செறிந்து வாழ்வதால் அதற்கு ஏற்றவாறு தொகுதிகளை ஏற்படுத்துவதன் மூலம் மலையக மக்களின் பிரதிநிதித்துவம் பாதிக்கப்படாமல் தொகுதிகளை நிர்ணயம் செய்ய வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

உள்ளூராட்சித் தேர்தல் மறுசீரமைப்பு தொடர்பாக தம்முடன் பேச்சுவார்த்தை நடத்திய போது அது பற்றித் தெளிவுபடுத்தப்பட்டதாகக் குறிப்பிட்ட பிரதியமைச்சர் பெரும்பாலும் உள்ளூராட்சித் தேர்தல் முறை சிறுபான்மை மக்களுக்குப் பாதிப்பு அல்லவென்றும் சுட்டிக்காட்டியுள்ளார். (6-2)

# குடும்பப் பெண்ணொருவர் சுருக்கிட்டு தற்கொலை

(வட்டக்கச்சி)

குடும்பத்தில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக இளம் குடும்பப் பெண் ஒருவர் தற்கொலை செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, வட்டக்கச்சி மாயவனூரைச் சேர்ந்த ஜெயதீபன் ஜெயந்தினி (சுஜி-21 வயது) என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

ஒரு பிள்ளையின் தாயான இவர் கடந்த 21 ஆம் திகதி வீட்டில் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (6)

# துணைத் தலைவர் பதவியை ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை

## சஜித் பிரேமதாஸ அறிவிப்பு



(கொழும்பு)

துணைத் தலைவர் பதவியை ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கட்சியின் துணைத்தலைவர் பதவியை வழங்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இதனை தாம் ஒருபோதும் எற்றுக்கொள்ளப் போவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பதவி சூதாட்டத்திற்கோ அல்லது பதவி ஏலத்திற்கோ தான் தயாரில்லை எனவும் எந்தவித வரப்பிரசாதங்களையும் தான் விரும்பவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


மக்களின் மேம்பாட்டையும் கட்சியின் வெற்றியையும் இலக்காகக் கொண்டு தான் செயற்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். (6-2)

# கட்டுநாயக்காவுக்கும் பலாலிக்குமிடையிலான விமான சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து பலாலிக்கான விமான சேவை ஒன்றை ஆரம்பிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இவ் விமான சேவை இவ்வருடத்துக்குள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பிரதியமைச்சர் தயாஸ்ரீ திசேரா தெரிவித்துள்ளார்.

மேலும் இவ்விமானசேவைக்கு மிகின் எயார் விமானங்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் வடபகுதிக்கு செல்லச் செலவாகும் காலதாமதத்தைக் கருத்திற் கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பிரதியமைச்சர் தெரிவித்தார். (6)



பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்ட தகவல் தொழில்நுட்பம் வலுவூட்டலுக்கான செயலமர்வு நேற்று முன்தினம் யாழ்.கல்வி வலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை மட்ட முகாமைத்துவ முகாமையாளர் எஸ்.பி.மகேந்திரன் உரையாற்றுவதையும் அருகில் கல்வி அமைச்சின் தேசிய மட்ட நிபுணத்துவ ஆலோசகர் பி.ஏ.வன்னியசேகர, சப்ரகமுவ கல்வி வலய முகாமையாளர் ஸ்ரீபால குருபாராய்ச்சி, வடமாகாண் தேசிய மட்ட நிபுணத்துவ ஆலோசகர் என்.ஆனந்தராஜா மற்றும் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் கலந்துகொண்ட 5 வலயங்களைச் சேர்ந்த பிரதிக் கல்விப் பணிப்பாளர், இணைப்பாளர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

## அமைச்சர் விமல் வீரவன்ச யாழ்.விஜயம் செய்யவுள்ளார்

(பருத்தித்துறை)

வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் பொது வசதிகள் துறை அமைச்சர் விமல் வீரவன்ச எதிர்வரும் 30 ஆம் திகதி யாழ்ப் பாணத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொள் ளவுள்ளார்.

இவரது விஜயத்தின் போது, யாழ் மாவட் டத்தில் உள்ள வறுமைக்கோட்டின் கீழ் சொந்தக்காணிகளில் குடிசை வீடுகளில் உள்ளவர்களுக்கு வீடு கட்டுவதற்கு ஊக்கு விப்புப் பணமாக ஒரு இலட்சம் ரூபா காசோ லையாக வழங்கப்படவுள்ளதாக வீடமைப்பு அதிகாரசபை வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

இதற்கமைவாக யாழ்.மாவட்ட ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவிலும் இருந்து ஓரிரு குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு, மொத் தமாக 15 குடும்பங்களுக்கான இவ் உதவித் தொகை வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

அத்துடன் படிப்படியாக இவ்வாறு பல குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு நன்கொடை நிதி வழங்கப்பட உள்ளதாக இவ்வீதி அதிகார சபை தெரிவித்துள்ளது. (6-2-10)

## பதிவு செய்யப்படாத நிறுவனத்திற்கு மதுவிற்பனை அனுமதி வழங்கப்படவில்லை

(கொழும்பு)

சுற்றுலா சபையில் பதிவு செய்யப்படாத எந்த நிறுவனத்திற்கும் 2009 ஆம் ஆண் டில் மது விற்பனை அனுமதிப்பத்திரம் வழங் கப்படவில்லை என்று கலால் திணைக் களம் தெரிவித்துள்ளது.

சுற்றுலா சபையில் புதிதாக பதிவு செய் யப்பட்ட உல்லாச விடுதிகளுக்கு மட்டுமே மதுபானம் விற்பனை செய்ய 2009 ஆம் ஆண்டில் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டதாக கலால் திணைக்கள ஆணையாளர் நாயகம் டி.ஜி.எம். வி.ஹப்பு ஆராய்ச்சி தெரி வித்தார்.

2009 ஆம் ஆண்டில் மதுபான விற்ப னைக்கென புதிதாக 2ஆயிரத்து 800 அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள தாக ஐ.தே.க. எம்.பி திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ள குற்றச்சாட்டை அவர் முற்றாக மறுத்தார். இதுதொடர்பாக, அவர் மேலும் குறிப் பிடுகையில், சுற்றுலா சபையில் பதிவு செய் யப்படுகின்ற புதிய விடுதிகளுக்கு மாத்தி ரமே மதுபானம் விற்பனை செய்யவென அனு மதிப்பத்திரம் வழங்கப்படும். இது அரசாங் கத்தின் கொள்கையாகும்.

சுற்றுலாச்சபையில் புதிதாக பதிவுசெய்யப் பட்ட 40 உல்லாச விடுதிகளுக்கு மாத்திரமே மதுபான விற்பனை அனுமதிப்பத்திரம் 2009 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது என்று குறிப்பிட்டார். (6-2)

## யுவதிகளிடம் அங்கசேட்டை புரிந்த இளைஞர் நையப்புடைக்கப்பட்டு விடுதலை

(கொழும்புத்துறை)

நல்லூர் திருவிழாவிற்கு வருகை தந்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த யுவதிகள் இருவருடன் அங்கசேட்டை புரிந்து தொல்லை கொடுத்த இளைஞர் ஒருவர் இராணுவத்தின ரால் மடக்கிப் பிடிக்கப்பட்டு நையப்புடைக் கப்பட்டார்.

இச்சம்பவம் கடந்த புதன்கிழமை இடம் பெற்றது. இதுகுறித்து தெரியவருவதாவது, நல்லூர் ஆலய வழிபாட்டை முடித்துக் கொண்டு மாலை 6 மணியளவில் நல்லூர் இரண்டாம் கட்டைவீதி வழியாக வீடு திரும்பிக் கொண்டிருந்த இரு யுவதிகளை பின்தொடர் ந்து வந்த இளைஞர் ஒருவர் அவர்களுடன் அங்க சேட்டை புரிந்துள்ளார். இதனையடுத்து அவ் யுவதிகள் இருவரும் அவ்வீதியால் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத்தினரிடம் முறையிட்டதைத் தொடர்ந்து குறிப்பிட்ட நபரைப் பிடித்த இராணுவத்தினர் அவரை மதிலுடன் நிற்க வைத்து நையப்புடைத்தனர்.

அத்துடன் குறித்த யுவதிகளிடம் மன் னிப்புக் கேட்க வைத்து விடுவிக்கப்பட்டதாக நேரில் கண்ட அப்பகுதி மக்கள் தெரிவிக்கின் றனர். (5)

## ஜனாதிபதி நிதியத்துக்கு அபிவிருத்தி லொத்தரால் பெரும் தொகை ஒதுக்கீடு

(கொழும்பு)

ஜனாதிபதி நிதியத்துக்கு கடந்த மூன்று மாதத்தில் அபிவிருத்தி லொத்தர் சபை 254 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

அபிவிருத்தி லொத்தர் சபையின் வரலாற் றில் அதிகளவு தொகையான பணத்தை மூன்று மாதத்தில் பெற்றுக் கொடுத்தது இதுவே முதற்தடவையென சபையின் தலைவர் ஜே.ஆர்.டபிள்யூ.திஸாநாயக்க தெரிவித்துள் ளார். கடந்த மே மாதம் 43 மில்லியன் ரூபாவும் ஜூன் மாதம் 107 மில்லியன் ரூபாவும் ஜூலை மாதத்தில் 104 மில்லியன் ரூபாவும் என்ற அடிப் படையில் ஜனாதிபதி நிதியத்துக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. (6-2)

## முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு விசேட கல்வித் திட்டங்கள்

### அரசாங்கம் அறிமுகம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முன் னாள் உறுப்பினர்கள் தமது கல்வி நடவடிக் கைகளை தொடர்வதற்காக விசேட கல்வித் திட்டங்களை அரசாங்கம் அறிமுகப்படுத் தியுள்ளது.

க.பொ.த (சா/த) மற்றும் உயர்தரப் பரீட் சைகளுக்கு தங்களை தயார்படுத்துவதற்காக வவுனியா வலயக்கல்வி அலுவலகம் ஊடாக இவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் பெண் உறுப்பினர்களுக்காக பூந்தோட்டம் பயிற்சி நிலையத்திலும் ஆண்களுக்கு வவு னியா தமிழ் ஆரம்பப் பாடசாலையிலும் இத் திட்டம் ஏற்கனவே நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில் 120 ஆண்களும் 48 பெண்களும் எதிர்வரும் க.பொ.த (சா/த) பரீட் சைக்கு தோற்றுவதற்கு தயாராகி வருகின் றனர் என புனர்வாழ்வு ஆணையாளர் அலு வலக அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை விசேடமாக வடிவமைக் கப்பட்ட கல்வித் திட்டங்களுக்கமைய இம் முறை 228 ஆண்களும் 98 பெண்களும் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றியுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (6-4)

## வீட்டுப் பணிப்பெண்ணின் உடலில் இருந்த ஆணிகள் அகற்றப்பட்டன

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் துன்புறுத்தல் களுக்கு இலக்காகி நாடு திரும்பிய பெண் ணின் உடலில் இருந்த ஆணிகளை அகற்று வதற்காக நேற்று மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சை வெற்றியளித்துள்ளது.

சத்திரசிகிச்சை மூலம் 13 ஆணிகளும் 4 ஊசிகளும் அவரின் உடலில் இருந்து அகற் றப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக்காலை 9 மணியளவில் கங்குரப் பிட்டி ஆதார வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை நிபுணர் கமல் வீரதுங்க தலை மையில் இந்த சத்திரசிகிச்சை மேற்கொள் ளப்பட்டது.

சத்திரசிகிச்சை குழுவில் 3 வைத்திய நிபுணர்களும் மயக்கமருந்தேற்றும் வைத்தி யர்களும் அடங்கியிருந்தனர்.

கடந்த 21 ஆம் திகதி நாடு திரும்பிய ஆரியவதி என்ற பெண் 22 ஆம் திகதி குறித்த வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டார்.

அவரின் உடலில் 24 ஆணிகள் இருப் பதாக எக்ஸ்ரே பரிசோதனையின் பின்னர் உறுதிசெய்யப்பட்டது. (6-4)

## உரமானியத்திற்கான பதிவுகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை

(சாவகச்சேரி)

கல்வயல் விவசாய சம்மேளனத்திற்குட் பட்ட விவசாயிகள் 2010/2011 இற்கான உர மானியத்திற்கான பதிவுகளை இன்றும் நாளையும் காலை 8 மணிமுதல் 4 மணி வரை சம்மேளன செயலாளர் கா.வேதநாய கத்தின் இல்லத்தில் மேற்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தென்னங் கன்றுக்கான உரமானி யத்தை பெறவிரும்புவோர் காணி உறுதியின் பிரதியுடன் குறிப்பிட்ட தினங்களில் செயலாள ருடன் தொடர்புகொள்ளலாம் என அறிவிக் கப்பட்டுள்ளது.

அத்துடன் ஜே/315 சந்திரபுரம் கிராம அலுவலர் எல்லைக்குட்பட்ட விவசாயிகள் கடந்த 2005 ஆம் ஆண்டு தொடக்கம் காணி உரிமையாளரின் கடிதத்துடனும் கிராமசேவை யாளரின் உறுதிப்பாட்டுடனும் உரத்தை பெற்று வந்தனர்.

எனினும் இம்முறை காணி உறுதி கட்டாயம் அவசியம் எனவும் உறுதி இல்லாத வர்கள் உரத்தை பெற்றுக்கொள்ள முடியாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (6-4-29)

## நேர்முகப் பரீட்சை

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத் தால் இவ்வாண்டு ஜூலை மாதம் கோரப்பட்ட இளைஞர் சேவை உத்தியோகத்தர், லிகிதர், காவலாளி மற்றும் தொழிலாளி ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தேசிய இளைஞர் சேவை கள் மன்றம், வடமாகாண காரியாலயம், கண்டி வீதி, வவுனியா என்ற முகவரியில் அமைந் துள்ள மாகாணக் காரியாலயத்தில் நடை பெறுமென யாழ்.மாவட்ட இளைஞர் சேவை அலுவலர் அறிவித்துள்ளார். (6-2)



இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்துப்பூசர்களுக்கான இருவார கால வதிவிடப் பயிற்சிநெறி கடந்த 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் விரிவுரை மண்டபத்தில் நடைபெற்றது. இதில் மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி சர்வரூபானந்தா மகராஜ் ஆசியுரை வழங்குவதையும் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் தலைமையுரையாற்றுவதையும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.யோகேஸ்வரன் மற்றும் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பொ.பியசேனா ஆகியோர் உரையாற்றுவதையும் பயிற்சிபெற்ற பூசகர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

## ஆன்மீக சொற்பொழிவு

(கொழும்புத்துறை)


இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்தும் ஆன்மீக சொற்பொழிவு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு இந்திய தமிழ்நாடு தர்மபுர ஆதீனத்தில் இருந்து வருகை தந்துள்ள இளைய சந்நிதான சித்தானந்த இரத்தினம் ஸ்ரீமத் சுவாமி குமாரசுவாமி தம்பிரான் தெய்வீகவுரையை நிகழ்த்தவுள்ளார் என இந்து சமய அபிவிருத்தி அலுவலக உத்தியோகத்தர் எஸ்.உதயபாலன் தெரிவித்துள்ளார். (6-2-51)

✠✠✠

(மருதங்கேணி)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் நாளை ஞாயிற்றுக்கிழமை பகல் 10மணி பூசை முடிவுற்றதும் வல்லை சிவகுரு வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன் "கண்ணன் பெருமை" என்னும் விடயம் பற்றி ஆன்மீக சொற்பொழிவொன்றை நிகழ்த்தவுள்ளார். (6-2-35)




# நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்ட நிகழ்வுகள்

(நல்லூர்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினால் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்காமணி மண்டபத்தில் நடைபெற்று வரும் தெய்வீக இசையரங்கில் 14ஆம் நாளான இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணி முதல் 7.30 மணிவரை திருமதி பங்கயற்செல்வி முகுந்தன் (பாட்டு), ஏ.ஜெயராமன் (வயலின்), திருமதி ஜெ.கானகோகிலம் (மிருதங்கம்), ரி.சண்முகசுந்தரம் (கெஞ்சிரா) ஆகியோர் வழங்கும் திருமுறைக் கச்சேரி இடம்பெறவுள்ளது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ காலத்தில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் ஆத்மீக சிந்தனையுடன் நடைபெற்றுவரும் சமயச்சொற்பொழிவு மற்றும் கலைநிகழ்வுகளில் இன்று பிற்பகல் 3 மணி முதல் 6 மணிவரை நடைபெறவுள்ளது. இதில் ''உள்ளம் பெருங்கோயில்'' என்னும் விடயம் பற்றி சிவ. உமாசுதன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

தொடர்ந்து காரைநகர் சிவகாமி அம்பாள் அறநெறிப் பாடசாலை, நாரந்தனை தான்தோன்றி மனோன்மணி அம்பாள் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது.

✠✠✠

நல்லூர்க் கந்தன் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகா சபையினால் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன குருமூர்த்த மண்டபத்தில் நடைபெற்று வரும் "வில்லிபாரதம்" என்னும் தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் இன்று மாலை 6.30 மணிக்கு ''ஏகலைவன்'' என்னும் பொருளில் பிரம்மஸ்ரீ சிவ.வை நித்தியானந்த சர்மா தொடர் இசைப் பேருரை நிகழ்த்தவுள்ளார். (6-4)

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடத்தும் க.பொ.த. சாதாரண தரத்தில் ஆங்கில மொழிமூலம் GIT பாடம் கற்றும் மாணவர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 2ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (4)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கைதடி மேற்கில் அமைந்துள்ள அருள்மிகு ஞானவைரவர் தேவஸ்தானத்தின் விசேட பொதுக்கூட்டம் இன்று இரவு 7 மணிக்கு தேவஸ்தான மண்டபத்தில் பரிபாலன சபைத் தலைவர் க.ஞானமுத்து தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு சகல அங்கத்தவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு தலைவர் அறிவித்துள்ளார். (6-2)

## மக்கள் வங்கியின் நடமாடும் வங்கிச்சேவை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு மக்கள் வங்கியின் நடமாடும் வங்கிச் சேவை இன்று சனிக்கிழமை தொடக்கம் யாழ்.மாநகர சபைக்கு முன்பாக பிற்பகல் 1 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை வாடிக்கையாளர்களுக்கு வழங்கவுள்ளது.

அத்தோடு பொது இடங்களிலும் மக்கள் வங்கியின் இந்நடமாடும் சேவை இடம்பெறும் எனவும் இலங்கையின் எப்பாகத்தில் இருப்பவர்களும் பணத்தை மீளப்பெறுவதற்கும் வைப்பிலிடுவதற்கும் வசதியாக இச்சேவை வழங்கப்படுகின்றதெனவும் யாழ். மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார். (6-2)

# குடிநீர், சுகாதார வசதிகளை மேம்படுத்த வடமாகாண பாடசாலைகளுக்கு நிதி ஒதுக்கீடு

(அல்வாய்)

வடமாகாண பாடசாலைகளுக்கான குடிநீர், சுகாதார வசதிகளைப் பூர்த்தி செய்வதற்கு அரசாங்கத்தினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் ஒவ்வொரு பாடசாலைக்கும் மலசலகூடம் மற்றும் அதற்கான நீர் வசதிகளை ஏற்படுத்த ஒரு இலட்சம் ரூபாவும் குடிநீர்த் திட்டத்திற்கு 2 இலட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இந்த நிதியில் கிணறு, மேல் தாங்கி, நீர்ப்பம்பி, நீர்விநியோகம் என்பவற்றையும் பூர்த்திசெய்ய வேண்டும் எனவும் குறிப்பிடப்படுகிறது.

இதில் வடமராட்சி வலயத்திலுள்ள பாடசாலைகளுக்காக குடிநீர்த் திட்டத்திற்கென 14 இலட்சம் ரூபாவும் சுகாதாரத் திட்டத்திற்கென 10 இலட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாக வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார்.

மேலும் குறித்த வலயப் பாடசாலைகளில் மின்சார வசதியுள்ள பாடசாலைகள் மின் மோட்டரையும் ஏனையபாடசாலைகள் மண்ணெண்ணெயில் இயங்கும் நீர்ப்பம்பிகளையும் பொருத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குடிநீர் வசதியில்லாத பாடசாலைகள் அவற்றை எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம்? அதற்காக செலவாகும் தொகை மற்றும் இதர தகவல்கள் உள்ளிட்ட விபரத்தை தயாரித்து எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் வ.ஸ்ரீஸ்கந்தராஜா ,பிரதிக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்வித் திணைக்களம் ,வடமாகாணம், திருகோணமலை என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறும் குறிப்பிடப்படுகிறது.

மேலும் மழைக் காலத்திற்கு முன்னர் இச்செயற்பாடுகளை ஆரம்பித்து வருட இறுதிக்குள் நிறைவுசெய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் இத்திட்டத்திற்கு மேலதிகமாக நிதி தேவைப்படுமாயின் கல்வி வலயத்தினூடாக தொடர்பு கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (6-4-19)

# கலந்துரையாடலும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

அவை (Forum) ஏற்பாட்டில் கலந்துரையாடலும் நூல்வெளியீடும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அல்வாய் சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதியில் அமைந்துள்ள கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் "உள ஆற்றுப்படுத்தலின் வாழ்வியற் பயன்பாடு'' என்னும் விடயம் பற்றி கலந்துரையாடப்படுவதுடன் இதில் யாழ்.பல்கலைக்கழக வருகை விரிவுரையாளர் அருட்தந்தை இராசேந்திரம் ஸ்ரலின் கலந்துகொள்ளவுள்ளார்.

தொடர்ந்து தெணியான் தலைமையில் நடைபெறும் "எண்ணிலாக் குணமுடையோர்" உரைச் சித்திரங்களின் தொகுப்பு நூல் வெளியீட்டு நிகழ்வில் கருத்துரையை யாழ். பல்கலைக்கழக சமூகவியற்றுறை விரிவுரையாளர் இ.இராஜேஷ்கண்ணன், யாழ். கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் பா. தனபாலன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

இதில் நூலின் முதற் பிரதியை நெல்லியடி சம்பத் வங்கி முகாமையாளர் கே. சற்குணபாலன் பெற்றுக்கொள்வார். ஏற்புரையை நூலாசிரியர் திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் நிகழ்த்தவுள்ளார். (6-4)

## தாச்சி சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டு சங்கத்தினால் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கொக்குவில் காந்திஜி அணியை எதிர்த்து கொக்குவில் வராகி அணியும் பிற்பகல் 4.30 மணிக்கு சுதுமலை யுவசக்தி அணியை எதிர்த்து நவாலி சென்றோக் அணியும் மோதவுள்ளன.

மேலும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் உடுவில் வைகறை அணியை எதிர்த்து அளவெட்டி பாரதி அணி மோதவுள்ளதுடன் மயிலிட்டி இளைஞர் ஒன்றியம் அணியை எதிர்த்து கோண்டாவில் மறுமலர்ச்சி அணி மோதவுள்ளது. (6-4)

## அதிபர்களுக்கான அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

நிதி ஆணைக் குழுவிற்கு சமர்ப்பிப்பதற்காக எதிர்வரும் 31 ஆம் திகதி வரையிலான தர உள்ளீட்டு கணக்கு மீதிகளை எதிர்வரும் 3 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை அதிபர்களை யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (6)

# மனைவியை கொலை செய்ய முயற்சி! இத்தாலியில் இலங்கையர் கைது

மனைவியையும் இருமாதப் பெண் குழந்தையையும் தாக்கினார் என்பதற்காக குடும்ப வன்முறைச் சட்டத்தின் கீழ் இலங்கையர் ஒருவர் இத்தாலியில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

Porto San Giorgio நகரத்தில் உள்ள இலங்கையரின் வீடு ஒன்றில் குடும்ப வன்முறை இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது என இத்தாலிய பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அவர்கள் அவ் வீட்டை முற்றுகையிட்டனர்.

அப்போது மனைவியின் கழுத்தை நெரித்து கணவன் கொலை செய்ய முற்பட்டமையையும் நையப்புடைத்தமையையும் காயப்படுத்தியமையையும் அவர்கள் நேரில் கண்டுள்ளனர். தாய் குழந்தையை தூக்கி வைத்திருந்த நிலையில் தகப்பனின் தாக்குதலில் குழந்தைக்கும் காயம் ஏற்பட்டுள்ளது.

தாயையும் சேயையும் பொலிஸார் பாதுகாப்பான இடத்துக்கு அழைத்துச் சென்று தங்கவைத்துள்ளார்கள். இத் தம்பதிகளுக்கு இடையில் மிக நீண்ட காலமாகவே சண்டை இடம்பெற்று வருகின்றது என்றும் கணவனால் தாக்கப்படுகின்றார் என்று மனைவி முன்பு பல தடவைகள் பொலிஸில் முறைப்பாடு செய்திருக்கின்றார் என்றும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. (6-2)

# சோமாலிய கடற்கொள்ளையர்களை கட்டுப்படுத்த உதவிகளை வழங்கத்தயார்



## பாலித கோஹண ஐ.நா.விடம் தெரிவிப்பு

சோமாலிய கடற்கொள்ளையர்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கத்தயார் என இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகள் அமைப்பிடம் தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் இலங்கையின் கடல் பாதுகாப்பு நடவடிக்கைகள் மிகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டதாகவும் இந்த அனுபவங்களையும் திறமைகளையும் உலக நாடுகளுடன் பகிர்ந்துகொள்ளத் தயார் எனவும் ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி பாலித கோஹண தெரிவித்துள்ளார்.

கடற்கொள்ளையர்கள் மற்றும் பயங்கரவாதிகளிடமிருந்து இலங்கையின் கடற்பரப்பு பாதுகாக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவை அமர்வுகளில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாடுகளின் கூட்டு முயற்சியினால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (6-2)

# உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு கிளிநொச்சியில் விசாரணைகளை நடத்தவுள்ளது

(கொழும்பு)

முன்னாள் சட்டமா அதிபர் சீ. ஆர்.டி. சில்வா தலைமையிலான உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு எதிர்வரும் செப்ரம்பர் மாதத்தில் கிளிநொச்சியில் விசாரணைகளை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

செப்ரெம்பர் மாதம் 17, 18 மற்றும் 19ஆம் திகதிகளில் கிளிநொச்சியில் மீள்குடியேற்றப்பட்ட கிராமங்களில் விசாரணைகள் நடத்தப்படவுள்ளதாக ஆணைக்குழுவின் செயலாளர் எஸ்.எம். சமரக்கோன் தெரிவித்துள்ளார்.

ஒன்றுகூடலைப் போன்று தகவல்கள் திரட்டப்படவுள்ளதாகவும் மீள்குடியேற்றப்பட்ட மக்கள் சுதந்திரமான முறையில் தங்களது கருத்துக்களை தெரிவிப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது முதல் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்தும் நோக்கில் ஜனாதிபதியினால் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு நிறுவப்பட்டுள்ளது. (6-2)

# ஆளும்கட்சி உறுப்பினர்கள் நாட்டை விட்டு வெளியேறத் தடை

(கொழும்பு)

எதிர்வரும் செம்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி வரையில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் நாட்டை விட்டு வெளியேறக் கூடாது என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. உத்தேச அரசில் சாசனத்திருத்தம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் இதனால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த யோசனைத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் தருணத்தில் ஆளும் கட்சியின் சகல உறுப்பினர்களும் பாராளுமன்றில் பிரசன்னமாகியிருக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு ஏற்கனவே அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளின் உறுப்பினர்களுக்கு விரைவில் இந்த அறிவிப்பு விடுக்கப்படும் எனவும் குறிப்பிடப்படுகிறது.

உத்தேசிக்கப்பட்ட அரசியல் சாசனத் திருத்தம் தொடர்பான யோசனைத் திட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ஜனாதிபதியாக ஆட்சி செய்யக் கூடிய தவணைக் காலம் சுயாதீன ஆணைக்குழுக்களை உருவாக்குதல், 13 ஆவது திருத்தச் சட்டமூலத்தின் ஊடாக மாகாணசபைகளை வலுப்படுத்தல் உள்ளிட்ட சில விடயங்கள் அரசியல் சாசனத் திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசியல் சாசனத்திருத்தத்தை சமர்ப்பித்து மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அதனை நிறைவேற்ற அரசாங்கம் எதிர்பார்ப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. (6-2)

# நல்லூரான் திருவடிக்கு இன்று 14 ஆம் திருவிழா




படங்கள் –அரவிந்

## நாயகனே வா! வா!

எல்லோரும் எல்லாமும்
பெற வேண்டும் முருகா- இங்கு
இல்லாமை இல்லாத
நிலைவேண்டும் கந்தா - இப்போதே
எமை எல்லாம் முருகா
ஆட்கொண்டு அருள
நீ வர வேண்டும்
நல்லையம் பதிவாழும்
நாயகனே வா! வா!

தென்கோவையூர், ம.கஜேந்தினி

## மீட்டருள் வேலா

செந்தமிழ்ச் செல்வா
சேவற் கொடியோனே
எம் துயர்களையும்
கந்தனே! வேலவா !!
நல்லையம்பதி மேவும்
வள்ளியின் நாயகா
அசுரர்கள் சிறையுடைத்து
தேவர்களை மீட்ட வேலா -உன்
தரிசனம் காண ஏங்கும்
எமை என்று மீட்டருள்வாய் ?

எஸ்.வினோவர்மன், வவுனியா

## நல் வாழ்வு தாருமப்பா...

நல்லையம் பதியுறை வேலவனே
நாற்திசை போற்றும் சோதியனே
கள்ளமில்லாக் குணம் கொண்டவனே
என்றும் கருணை முகம் காட்டுபவனே...

இல்லையென்று உனைநாடும் அடியவர்க்கு
இல்லையென்று கூறாது அள்ளி வழங்கிப்
பிள்ளை வரம்கொடுத்திடும் பிரம்மனே...
நம் தொல்லைகள் நீங்கிடத் தினமுனைப்
போற்றிடுவோம் மனதால் என்றும் வாழ்த்திடுவோம்

கொற்றையூர், மகே -மேனன்

## நல்லையூர் நாயகனே!

நல்லையம் பதியுறைந்த
நல்லூரானே!
நின்னடி வணங்கி
நலம் வேண்டுகின்றோம்
அடியவரின் துன்பமதை
போக்கி விடும் சுந்தரனே!
ஆறு முகம் கொண்டு அடியவரை
ஆட்கொண்டருளும் ஆறுமுகா ...

ரி.விஜிதா, மயிலிட்டி

நல்லைக் கந்தா நலன்கள் யாவும் தந்தருள்வாய்!

ஆர்.வி.ஜி மருந்தகம்
504, ஆஸ்பத்திரி வீதி,
( O.P.D முன்பாக)
யாழ்ப்பாணம்
T.P- 021 222 2129



R.V.G ஸ்தாபனம்
58, நல்லூர் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
T.P- 021 222 6808

# ஈழத்தவர் வரலாறு

18

## 3. ஈழராஜா எல்லாளன்

### (கி.மு 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621 ஆம் ஆண்டு வரை)

கலாநிதி க.குணராசா
செங்கை ஆழியான்

### 3.4 எல்லாளனிற்குப் பின்னர்

மாமன்னன் எல்லாளனின் 44 வருட நீதிநெறிதவறாத ஆட்சி, கி.மு.101 இல் முற்றுப் பெற, சிங்கள ஆட்சி அனுராத புரத்தில் அரசோச்சத் தொடங்கியது. மன்னர்கள் அமர்ந்திருந்தனர். வட்டகாமினி என்ற மன்னன் காலத்தில அனுராதபுரத்தின் மீது மீண்டுமொரு தமிழர் படையெடுப்பு நிகழ்ந் தது. வட்டகாமினி அனுராபுரத்தில் ஆட்சி செய்த போது உருகுணையில் தீசன் என்ற குறு நில மன்னன்ஆதிக்கம் பெற்றிருந்தான் எனத் தெரிகிறது. அவன் அனுராதபுர மன்னனுக்கு எதிராக ஆட்சியுரிமை வேண்டி கலகம் செய்ததாகத் தெரிகின்றது. அதேவேளை உத்தரதேசத்தைச் சேர்ந்த ஏழு தமிழ்க் குறுநில மன்னர்கள் மாந்தைவழியாக அனுராதபுரத்தை நோக்கிப் படையெடுத்தனர். இந்த ஏழு தமிழர்களைப் பாண்டியர்களாக வரலாற்றாசிரியர் சிலர் குறிப்பர். மகாவம்சத்தில் எவ்விடத்திலும் இவர்களைப் பாண்டியர்களாகக் குறிக்கவில்லை. இலங்கையின் குறுநில மன்னர்கள் அனுராதபுர ஆட்சியை ஏற்காது கிளர்ச்சி செய்கின்ற நிகழ்ச்சிகள் இலங்கை வரலாற்றில் புதியனவன்று, தென்னிலங்கையில் தீசன் கிளர்ந்தெழுந்தபோது வடக்கே ஏழு குறுநிலத் தமிழ் மன்னர்கள் போர்க்கோலம் பூண்டனர். இவர்களோடு உருகுணைத் தீசனும் சேர்ந்து கொண்டானெனத் தெரிகின்றது. இவர்கள் எண்மரும் சேர்ந்து ஆட்சியைத் தம்மிடம் ஒப்படைத்து விடுமாறு வட்டகாமினிக்கு ஓலையனுப்பினர்.

வட்டகாமினி, உருகுணைத் தீசனோடு சமாதானம் செய்து கொண்டான்.ஏழு தமிழ்க் குறுநில மன்னர்களின் படைகளைத் தடுத்து நிறுத்தி வெற்றிகொள்ளில், அனுராதபுர ஆட்சியைத் தீசனிடம் ஒப்படைப்பதாக ஒப்புக் கொண்டான். இதனையேற்ற தீசன் தமிழ்ப்படையோடு மோதி தோல்வியடைய நேர்ந்தது.

உருகுணைப் படையை வெற்றிகொண்ட ஏழு தமிழ்க் குறுநில மன்னரின் படை அனுராதபுரத்தை நோக்கி விரைந்தது.

கொலம்பலாகா என்றவிடத்தில் இரு படைகளும் சந்தித்து மோதிக்கொண்டன. வட்டகாமினி தோல்வியைத் தழுவி, பின் வாங்கி அரண்மனைக்கோடித் தன்னிரு மனைவியரையும் புதல்வனையும் ஒரு தேரில் ஏற்றிக்கொண்டு வேகமாகத் தப்பியோடினான். தமிழர்படை துரத்தியதால் தேரின் வேகத்தைக் கூட்டும் பொருட்டுப் பாரத்தைக் குறைப்பதற்காக, அவன் தனது இரண்டாவது மனைவி சோமாதேவியைத் தேரினின்றும் இறக்கிவிட்டுத் த்தப்பி ஓடிவிட நேர்ந்தது.

ஏழு குறுநிலத் தமிழ் மன்னரில் ஒருவர் சோமாதேவியைத் தன்னுடைமையாக்கிக் கொண்டான். மற்றொருவன் புத்தரின் ஐயக் கலத்தைத் தனதாக்கிக்கொண்டான். இந்த இருவரும் தமது பிரதேசங்களுக்கு மீண்டும் சென்றனர் எனவும், மிகுதி ஐந்து தமிழரும் அனுராதபுரத்தை 14ஆண்டுகளும் 7 மாதங்களும் அரசாண்டனர் எனவும் அறியக் கிடைக்கின்றது. இந்த ஐந்து தமிழ் மன்னர்களாக புலகத்தன், பாகியன்,பனையமாறன், பினையமாறன்,தாடிகன் என்போர் குறிப்பிடப்படுகின்றனர். இவர்கள் ஒருவர் மாறி ஒருவர் அனுராதபுரத்திலிருந்து அரசாண்டனர் என அறியப்படுகின்றது. இவர்கள் ஒருவரையொருவர் கொன்றே ஆட்சிபுரிந்தனரென மகாவம்சம் குறிப்பிடுகின்ற போதிலும், இக்குறுநில மன்னர்கள் முறைவைத்து தமக்குள் அனுராதபுர சிம்மாசனத்தை அலங்கரித்தனரெனக் கொள்ளலாம்.

தாடிகன் அனுராதபுரத்தை ஆண்ட போது வட்டகாமினி மீண்டும் அனுராதபுரத்தைக் கைப்பற்றி மன்னனானான். தமிழ்க் குறுநில மன்னனால் கவர்ந்து செல்லப்பட்ட சோமாதேவியை மீளப்பெற்றுத் தனது ராணியாக்கிக்' கொண்டான். வட்டகாமினி யின் ஆட்சி கி.மு17 வரை நிலவியது. அதன் பின்னர் கி.பி 9 ஆம் ஆண்டு வரை சிங்கள ஆட்சி இலங்கையில் நிலவியதாக அறிய முடிகிறது. சோரநாகன் என்ற மன்னன் ஆட்சியிலிருந்தபோது, அவனது மனைவியான அனுலாதேவியின் விபரீதக் காம ஆசையால் ஆட்சி அதிகாரம் பகிர்ந்து கொள்ளப்பட்டது.அனுலாதேவி தனது கணவனை நஞ்சூட்டிக்கொன்றபின், திசர என்பவனை மணந்து அவனை அரசனாக்கினான். அதன் பின்னர் சிவா, வாதுகன், தீசன், நீலியன் என ஒவ்வொருவராக மணந்து மன்னனாக்கிப் பின்னர் நஞ்சூட்டிக் கொன்று இறுதியில் தானே நாட்டின் தலைமையை ஏற்றுக்கொண்டாள்.



வட்டகாமினி மன்னன்

அவளது ஆசைக்கும் விருப்பத்திற்கும் 32 அரண்மனைக்காவலர் உட்பட்டனரென வரலாறு கூறுகிறது. வாது கன்,நீலியன் ஆகிய இருவர் தமிழராவர். இவர்கள் அனுலாவுடன் அனுராதபுரச் சிம் மாசனத்தில் அமர்ந்து ஆட்சி புரிந்துள்ளனர்.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது கிறிஸ்து தச ாப்தத்திற்கு முந்திய வரலாற்றுக் காலத்தினை உள்ளடக்கிய 250 ஆண்டுகளில் மூன்றிலொரு பகுதியில் தமிழரின் ஆட்சி நடைபெற்றதைப் பாளி நூல்கள் கூறுகின்றன எனலாம். (தொடரும்)

**ஈழத்தவர் வரலாறு என்னும் தலைப்பில் கலாநிதி க.குணராசா (செங்கையாழியான் ) எழுதிய தொடரில் நாளை முதல் சிங்கைநகர் அரசு என்னும் தொடர் பிரசுரமாகும்.**

# சங்க - மன்யோசு அகப்பாடல்களில் கூற்றுநிலை-ஓர் ஒப்பீடு

01

### செம்மொழி மாநாட்டு ஆய்வுக்கட்டுரை

செல்வி. செல்வ அம்பிகை நடராஜா
விரிவுரையாளர், தமிழ்த்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

### தமிழ் ஜப்பானிய ஒப்பீட்டாய்வின் அறிமுகம்

உலக மொழிகளில் இலக்கிய வளம் பெற்ற மொழிகளுள் ஒன்றாகத் தமிழ் மொழி விளங்குகின்றது. தமிழ்மொழியைப் பிற மொழிகளோடு ஒப்பிட்டு ஆராய்கின்ற தன்மை நீண்டகாலமாகவே நடைபெற்று வருகின்றது.

திராவிடத்துடன் ஜப்பானிய மொழியை ஒப்பிட்டு நோக்கும் முயற்சி எழுபதுகளில் தொடங்கியது. முதன்முதலில் கோல்ட்வெல் தன்னுடைய திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் நூலில் தமிழ் -ஜப்பானிய மொழிகளுக்கிடையில் ஒலியாலும் பொருளாலும் ஒற்றுமையான சொற்கள் இருப்பதை இனங்கண்டு அவற்றை வகை மாதிரிக்காக எடுத்துக் காட்டியுள்ளார்.

கோல்ட்டுவெல்லுக்குப் பின்னர் 1970 களில் ஜப்பானிய மொழியுடன் திராவிட மொழியைத் தொடர்புபடுத்தி நோக்கும் ஆய்வுகள் நடைபெற்றன. சுசுமு ஷிபா, அகிர புஜிவர, மினரு கொ போன்றவர்கள் தமிழ் ஜப்பானிய மொழித்தொடர்புகளை ஆராய முற்பட்டனர். தில்லி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பாலாம்பாள் எழுதிய ஜப்பானிய - தமிழ்மொழிகளின் வேற்றுமையுருபுகள் இடைநிலைகள் இடையேயான ஒற்றுமை பற்றிய கட்டுரையைப் படித்த கக்சுயின் பல்கலைக்கழக மொழியியற் பேராசிரியர் சுசுமு ஒனே ஜப்பானிய மொழியைத் தமிழ் மொழியுடன் ஒப்பிட்டு ஆராயத் தொடங்கினார்.

இவருடன் இணைந்து ஈழத்து அறிஞர்களான பேராசிரியர் சண்முகதாஸ், முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் இருவரும் இணைந்து ஒப்பீட்டாய்வில் ஈடுபட்டனர். இவர்களோடு முனைவர் ரகுபதி, பேராசிரியர் குமரன், பேராசிரியர் பொன். கோதண்டராமன், பேராசிரியர் குருராஜராவ், பேராசிரியர் கே. இராஜன் போன்றவர்களும் இணைந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. இவர்களுடைய ஆய்வு ஒலிநிலை, பொருள் நிலை,இலக்கண நிலை, இலக்கியப் பொருள் வடிவ நிலை , பண்பாட்டுநிலை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டது.

அக இலக்கியங்களில் கூற்றுநிலை முக்கிய பங்கு வகிக்கிறது. அக மாந்தர்களின் மன உணர்வுகள் கூறுவோரின் மனநிலைக் கேற்பவும் கேட்போரின் மனநிலைக்கேற்பவும் மாறுபட்டு ஒலிக்கின்றன. அக மாந்தர்கள் தம் கூற்றுக்களை வெளிப்படுத்த் பல்வேறு உத்திகளைக் கையாளுகின்றனர். சங்க- மன்யோசுப் பாடல்களில் வெளிப்படும் விதம் பற்றி ஒப்பிட்டு ஆராய்வதே இந்த ஆய்வுக்கட்டுரையின் நோக்கமாகும்.

### ஆய்வுத்தரவுகள்

அகப்பொருள் மரபினைத் தெளிவுபடுத்தத் தொல்காப்பிய அகப்பொருள் இலக்கணம் துணையாகக் கொள்ளப்பட்டது. தமிழ் மொழி இலக்கியங்களில் சங்க அகப்பாடல்கள் தரவுகளாக அமைகின்றன. பாடல்களின் தோற்ற கால அடிப்படையில் சங்க இலக்கியங்களின் தோற்ற காலம் கி.மு 300 தொடக்கம் கி.பி 300 வரை எனக் கருதப்படுகின்றது. ஜப்பானிய மொழி இலக்கியங்களில் மன்யோசு காதற்பாடல் பத்தாம் தொகுதியின் தமிழ் மொழிபெயர்ப்புத் தரவாக அமைகின்றது. மன்யோசுவின் காலம் கி.பி.7 ஆம் நூற்றாண்டாகும். இவ்விரு இலக்கியங்களுமே வாய்மொழியாகப் பேணப்பட்டு பின்னர் தொகுக்கப்பட்ட தொகுப்பு நூல்களாகும். எட்டுத்தொகை நூல்கள் குறும் பாடல்களாகவும் பத்துப் பாட்டு நூல்கள் நெடும் பாடல்களாகவும் காணப்படுகின்றன. இவை ஆசிரியம், வஞ்சி, கலி, பரிபாட்டு என்னும் பாக்களால் ஆக்கப்பட்டவை. ஜப்பானிய பழைய பாடல்களினுடைய தொகுப்பே மன்யோசுவாகும். மன் -யோ-சு என்ற பெயரை நேரடியாக மொழிபெயர்த்தால் " பத்தாயிரம் இலைத்தொகுப்பு" என அமையும் .

பல்வேறு காலங்களில் பல்வேறு புலவர்களால் பாடப்பெற்ற பல ஆயிரம் பாடல்களின் தொகுப்பாக அமைகின்றது. இன்று இவை இருபது தொகுதிகளாக 4 ஆயிரத்து 516 பாடல்களை உள்ளடக்கியுள்ளன. மன்யோசுப் பாடல்களுக்கு முன்னர் கொஜிகி நிகொன் சொகி போன்ற தொகுப்பு நூல்களும் ஜப்பானிய மொழியில் எழுந்துள்ளன. எனினும் காதற் பாடல்களின் தொகுப் பில் மன்யோசுவே பழைமையானது.

மன்யோசுப் பாடல்கள் வாய்மொழி மரபில் பேணப்பட்டன. பின்னர் சீன மொழி வரிவடிவத்தில் படியாக்கம் செய்யப்பட்டன. ஜப்பானியர்கள் சீனமொழி வரிவடிவத்தின் உச்சரிப்புநிலையை மட்டுமே எழுத்துப் படியாக்கத்தில் பயன்படுத்தினர்.பொருள் நிலையில் ஜப்பானிய மொழியின் பொருளமைதியே பேணப்பட்டது. மன்யோசுப் பாடல்கள் எழுதப்பட்ட சீன மொழி வரிவடிவம் மன்யோகந என அழைக்கப்பட்டது. இன்று ஜப்பானிய மொழிக்கென வடிவமைக்கப்பட்ட வரிவடி வமான கிரகநவில் மன்யோசுப் பாடல்கள் படியாக்கப்பட்டு தொகுப்புக்களாக வெளிவந்துள்ளன. ஜப்பானிய இலக்கியங்களில் தங்க (Thanka) , சோக(Choka), கத உத (Kata Uta) , செதொக்க (Sedoka) , புஸ்ஸொகு செகிக்க (Bussokusekika) என ஐந்து வகையான பா வடிவங்கள் கையாளப்பட்டுள்ளன.

ஜப்பானிய பா வடிவத்தின் அடிப்படையாக அமைவது அதன் 5தொடக்கம் 7 அசைகள் கொண்ட அடியாகும். எழுத்துக்களின் எண்ணிக்கை, ஒழுங்கமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் பா வடிவங் கள் வேறுபடுகின்றன. (தொடரும்)

# கிளிவெட்டி நலன்புரி நிலையத்திலுள்ள மக்கள் விரைவில் மீள்குடியமர்த்தப்படுவர்

## மீள்குடியேற்றப் பிரதியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து தொடர்ந்தும்கிளிவெட்டி நலன் புரி நிலையத்தில் வாழும் மக்களை விரைவில் மீள்குடியேற்றவுள்ளதாக மீள்குடியேற்றப் பிர தியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மழைக்காலத்திற்கு முன்னர் அவர்களை மீள்குடியேற்றவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இடம்பெயர்ந்த 500க்கும் அதிகமான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மூதூர், கிளிவெட்டி முகாமில் தொடர்ந்தும் வாழ்ந்து வருகின்றனர்.

கிளிவெட்டி முகாமிற்கு வந்து 5 வருடமாகியும் தங்களை மீள்குடியேற்றவில்லையெனக் கூறும் மக்கள்,தாம் பல கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருவதாகத் தெரிவித்தனர்.

அடிப்படை வசதிகள் இல்லையெனவும் மலசலகூடங்கள் இல்லையெனவும் எனவே தம்மை விரைவாக மீள்குடியேற்றுமாறும் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் நேற்று முன் தினம் கிளிவெட்டி முகாமுக்குச் சென்றார்.

சம்பூர், கூனித்தீவு,கடற்கரைச்சேனை, நவரட்ணபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களை விரைவாக மீள்குடியமர்த்தும் பொருட்டுச் சொந்த இடங்களுக்குப்பதிலாக மாற்றுக் காணிகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக பிரதியமைச்சர் இதன்போது குறிப்பிட்டுள்ளார். (6)

# மனித உரிமைகள் ஆணைக்குழுவில் 5,500 முறைப்பாடுகள் நிலுவையில்!

(கொழும்பு)

இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவுக்கான ஆணையாளர் நீண்டகாலமாக நியமிக்கப்படாததால் 5ஆயிரத்து 500 முறைப்பாடுகள் விசாரிக்கப்படாது நிலுவையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் இயங்கிவரும் மனித உரிமைகள் ஆணைக்குழுவை இலங்கை அரசு முற்றாகவே புறக்கணித்துள்ளது. கடந்த 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குப் பின்னர் அதற்கான ஆணையாளர் நியமிக்கப்படவில்லை.

இதனைத் தொடர்ந்து கொழும்பிலும் அதன் பிராந்திய அலுவலகங்களிலும் மேற்கொள்ளப்பட்ட 5ஆயிரத்து 500 முறைப்பாடுகள் விசாரணை செய்யப்படாது நிலுவையில் உள்ளன.

மேலும் இந்த வருடம் ஜனவரி மாதத்தில் இருந்து தாம் 7ஆயிரத்து 500 இற்கு மேற்பட்ட முறைப்பாடுகளை பெற்றுள்ளதாக அதன் செயலாளர் சந்திரா எலாவல தெரிவித்துள்ளார்.

தற்போது தாம் முதற்கட்ட விசாரணைகளை மட்டுமே மேற்கொள்வதாகவும், ஆணையாளர் இன்றி தம்மால் எந்தபரிந்துரைகளையும் மேற்கொள்ள முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6-2)

# யாழ்ப்பாண வாக்காளர் பதிவுகள் உரிய முறையில் நடைபெறும்

## தேர்தல் செயலகம் அறிவிப்பு

யாழ்ப்பாண வாக்காளர் பதிவு நடவடிக்கைகள் உரிய முறையில் நடைபெறும் எனத் தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

கிராம சேவகர் பிரிவு வாரியாக வாக்காளர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

உரிய காலத்தில் இந்த நடவடிக்கைகள் பூர்த்தியாகும் எனத் தேர்தல் செயலத்தின் சிரேஸ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் 438 கிராமசேவகர் பிரிவுகளில் வாக்காளர் பதிவு நடத்தப்பட வேண்டிய போதிலும் இதுவரையில் 30 கிராம சேவகர் பிரிவுகளில் மட்டுமே பதிவு நடைபெற்றுள்ளதாக கபே தேர்தல் கண்காணிப்புக்குழு அறிவித்துள்ளது.

மேலும் கிராம சேவகர்களுக்கு நிலவும் பற்றாக்குறை மற்றும் மக்கள் கிராமங்களில் மீள் குடியேற்றப்பட்டுள்ள கட்டமைப்பு ஆகியன காரணமாக உரிய முறையில் வாக்காளர்களை பதிவு செய்ய முடியவில்லை எனத் தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது. (6-2)



சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலைப் பொது நூலகத்தில் இடம்பெற்ற நூலக வார நிகழ்வினை மட்டுவில் ஸ்ரீ கணேச வித்தியாலயப் பிரதி அதிபர் சத்தியவதி ரவிக்குமார் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும் நூலகர் இ.தர்மலிங்கம் தலைமையுரையாற்றுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் மற்றும் பிரதேச சபைப் பொறுப்பதிகாரி மாலதி தங்கராசா, சரசாலைக் கிராம அலுவலர் செல்வி ந.தங்கராசா ஆகியோரையும் படத்தில் காணலாம்.

# 28.08.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

## நிகழ்வுகள்

- ✠1349 -கொள்ளை நோயைக் காரணம் காட்டி ஜெர்மனியின் மாயின்ஸ் நகரில் 6 ஆயிரம் யூதர்கள் படுகொலை செய்யப் பட்டனர்.
- ✠1511 -போர்த்துக்கீசர்கள் மலாக்காவைக் கைப்பற்றினர்.
- ✠1521- ஒட்டோமான் துருக்கியர் பெல்கிரேட் நகரைக் கைப் பற்றினர்.
- ✠1619 -ஜெர்மனியின் இரண்டாம் பேர்டினண்ட் புனித ரோமப் பேரரசன் ஆனான்.
- ✠1789 -வில்லியம் ஹேர்ச்செல் சனிக்கோளின் புதிய சந்திரனைக் கண்டுபிடித்தார்.
- ✠1844- பிரெட்ரிக் எங்கெல்ஸ் மற்றும் கார்ள் மார்க்ஸ் இருவரும் பாரிசில் சந்தித்தனர்.
- ✠1845- சயன்டிஃபிக் அமெரிக்கன் முதலாவது இதழ் வெளிவந்தது.
- ✠1849- ஒரு மாதகால முற்றுகையின் பின்னர் வெனிஸ் நகரம் ஆஸ்திரியாவிடம் வீழ்ந்தது.
- ✠1867- ஐக்கிய அமெரிக்கா மிட்வே தீவைப் பிடித்தது.
- ✠1879- சூளுக்களின் கடைசி மன்னன் செட்ஸ்வாயோ பிரித்தானியர்களினால் சிறைபிடிக்கப்பட்டான்.
- ✠1898- காலெப் பிராடம் தான் கண்டுபிடித்த மென்பானத்திற்கு பெப்சிகோலா எனப் பெயரிட்டார்.
- ✠1913- நெதர்லாந்தின் அரசி வில்ஹெல்மினா , ஹேக் நகரில் அமைதி அரண்மனையைத் திறந்தார்.
- ✠1916- முதலாம் உலகப் போர்: ஜெர்மனி ருமேனியா மீதும், இத்தாலி ஜெர்மனி மீதும் போரை அறிவித்தன.
- ✠1922- ஜப்பான் சைபீரியாவில் இருந்து தனது படைகளை விலக்கச் சம்மதித்தது.
- ✠1924- சோவியத் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக ஜோர்ஜியர்கள் கிளர்ச்சியை ஆரம்பித்தனர்.
- ✠1931- பிரான்சும் சோவியத் ஒன்றியமும் போர் தவிர்ப்பு ஒப்பந்தத்தை ஏற்படுத்தின.
- ✠1943- நாசி ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக டென்மார்க்கில் பொது வேலை நிறுத்தம் ஆரம்பமானது.
- ✠1964- பிலடெல்பியாவில் இனக்கலவரம் ஆரம்பித்தது.
- ✠1979- ஐ.ஆர்.ஏயின் குண்டு ஒன்று பிரசல்ஸில் வெடித்தது.
- ✠1988- ஜெர்மனியில் வான வேடிக்கை விழா ஒன்றின் போது மூன்று விமானங்கள் மோதி பார்வையாளர்கள் மீது வீழ்ந்ததில் 75 பேர் கொல்லப்பட்டு 346 பேர் படுகாயமடைந்தனர்.
- ✠1991 -சோவியத்திடம் இருந்து உக்ரைன் விடுதலை பெற்றது.
- ✠1991- மிக்கைல் கொர்பச் சோவ் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலர் பதவியில் இருந்து விலகினார்.
- ✠2006- திருகோணமலை , சம்பூரில் இலங்கை இராணுவம் தாக்குதல் நடத்தியதில் 20 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.
- ✠2006- இலங்கையில் பத்தாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் முடிவடைந்தன.

**பிறப்புக்கள்**

- ✠1983-லசித் மாலிங்க, இலங்கைத் துடுப்பாட்ட அணியின் அதிவேகப் பந்து வீச்சாளர்.

**இறப்புகள்**

- ✠1891- றொபர்ட் காலிடுவெல் பிரித்தானியத் தமிழறிஞர்.

**1996- வேல்ஸ் இளவரசர் சார்ள்ஸ், இளவரசி டயானா மணமுறிவு ஏற்பட்டது.**



# இருபதாம் நூற்றாண்டு இலங்கை கல்வியில் அரசியல் அழுத்தங்கள்

## இலங்கையின் கல்வி வளர்ச்சிப் போக்குகள்

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு அனுமதி அளிக்கும் பாடசாலைகளாக இவை விளங்குகின்றன. இப்பாடசாலைகள் மூலம் ஏராளமான மாணவர்கள் கல்வி வாய்ப்பை பெற்றனர். நாட்டில் காணப்படும் பாடசாலைகளின் பாகுபாடு பற்றி மேற்குறித்த அட்டவணையின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

இவ்அட்டவணையின் படி மேல் மாகாணம், மத்திய மாகாணம், தென்மாகாணங்களிலுள்ள அநேக பாடசாலைகளே உயர்தரக் கல்வியை வழங்குவனவாக காணப்படுகின்றன. வடமேல்மாகாணம், மேல்மாகாணம், மத்திய மாகாணம், தென்மாகாணங்களில் க.பொ.த (சா.தர) வரையுள்ள பாடசாலைகள் அதிகமாகவும் மேல்மாகாணம், வடமேல்மாகாணம், மத்தியமாகாணம், தென்மாகாணங்களில் 6 அல்லது 8 ஆம் ஆண்டு வரையும் உள்ள பாடசாலைகள் அதிகமாகவும் இருப்பதனை அட்டவணை காட்டுகின்றது. இவ்வாறு பாடசாலைகளின் பகுப்பு உள்ளூர்த் தேவைகளுக்கு ஏற்ப பாடசாலைகளின் தரத்தை உயர்த்துவதற்கும் பாடசாலைகளின் வளங்களை அதிகரிப்பதற்கும் சாதகமாக அமைகின்றன. பாடசாலைகளின் அமைப்பும் காலத்திற்கு காலம் அரசு மாற்றமடைய மாறிக்கொண்டே சென்றமையையும் காணலாம். மேலும் மனித வாழ்க்கை முறையும் உலகத் தொடர்புகளும் மாற்றமடைகின்றன. அத்துடன் மனித தேவைகள் பெருகின்றன. உலக அறிவுத் தொகுதியிலே பாரிய விரிவாக்கம் ஏற்படுகின்றது. இவ்வகையிலே மனித எதிர்பார்ப்புக்கள் காலத்திற்கு உகந்த கல்வியைப் பெறுவதற்காக அரசின் அழுத்தம் காரணமாக கல்விக்கொள்கைகள் மாற்றியமைக்கப்பட்டதனை அறிய முடிகின்றது. அப்பொழுது காலத்தேவையை ஒட்டி பாடசாலை அமைப்பிலும் மாற்றங்கள் படிப்படியாக இடம்பெற்றமையைக் காணலாம்.

மாணவர்கள் கல்வியில் பங்குபற்றலை ஊக்குவித்தலின் பொருட்டு மதிய உணவு வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் முதலில் வறிய குடும்பங்களில் இருந்து வரும் பிள்ளைகளின் போசாக்கினை அதிகரிக்கச் செய்யும் நோக்குடன் அமுல்படுத்தப்பட்டிருந்த வேளையிலும் 1953 ஆம் ஆண்டில் கைவிடப்பட்டு மீண்டும் 1956 ஆம் ஆண்டில் வழங்கப்படலாயிற்று. 1981 ஆம் ஆண்டில் ஆட்சியில் இருந்த அரசினால் இலவசமாக நண்பகல் உணவு வசதி இடைநிறுத்தப்பட்டது. மதிய உணவு வழங்குதல் குறித்து நிலவிய கஸ்டங்களும் நிதிநெருக்கடிகளும் இத்திட்டத்தை மீண்டும் கைவிடச் செய்தது. பின்னர் அரசினால் சமூக நலன்பேணல் என்ற அடிப்படையில் மதிய உணவு வழங்குவதன் முக்கியத்துவம் உணரப்பட்டு 1989 ஆம் ஆண்டில் இருந்து உணவு முத்திரைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. மாணவர் வரவு பதியப்பட்டு இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால் தொடர்ந்து வந்த காலப்பகுதிகளில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகள் காரணமாகவும் அரசிடம் போதிய நிதிவசதியின்மை காரணமாகவும் 1996 ஆம் ஆண்டில் பதிவியிலிருந்த அரசினால் இத்திட்டம் கைவிடப்பட்டது. இவ்வாறாக கல்வி தொடர்பான செயற்பாடுகளிலும் காலத்திற்கு காலம் அரசியல் போக்கிற்கு ஏற்ப மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருப்பதனை அவதானிக்க முடிகின்றது. எனவே காலப் போக்கில் இலவசக்கல்வி, தாய்மொழிப் போதனை, இலவசப் பாடநூல் விநியோகம், இலவச சீருடை போன்ற நடவடிக்கைகள் காரணமாக கல்வி கற்போர் வீதமும் அதிகரித்தது. எனவே இவ்வாறான கல்வி சார் நடவடிக்கைகள் யாவும் காலத்திற்கு காலம் அரசு மாற்றமடைய அதற்கேற்ப மாறுதல் அடைந்து சென்றுள்ளமையைக் காணலாம். அதாவது கல்விக் கொள்கைகள் மாற்றத்தில் அரசியல் அழுத்தங்களே பின்னணியில் இருந்தமையை கல்வி வரலாற்றின் ஊடாக அறிய முடிகின்றது. 50 ஆண்டுகளுக்கு மேலாக கல்வித் துறையில் ஏற்பட்ட அபிவிருத்திகள், கல்வியறிவு விகிதம் பள்ளிக்கூடத்தில் சேர்ந்தோர் தொகை, பள்ளிக்கூடங்களுக்கிடையிலான தூரம் குறைதல், மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையிலான விகிதம் மற்றும் பாடசாலைகளில் இருந்து விலகிச் செல்வோரின் விகிதம் போன்ற அம்சங்களில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. பள்ளிக்கூடத்தில் சேர்ந்தோர் 1948 இல் 1.2 மில்லியனாக காணப்பட்ட தொகை 1997 இல் 4.1 மில்லியனுக்கு அதிகரித்தது. பள்ளிக்கூடத்தில் சேர்ந்தோர் விகிதம் (குறிப்பிட்ட வயது தொகுதியில் பள்ளிக்கூடத்திற்கு செல்லும் சிறார்களின் சதவீதம்) 1950 - 1996 காலப்பகுதிகளிற்கு இடையில் 44 சதவீதத்தில் இருந்து 50 சதவீதத்திற்கு அதிகரித்தது. கல்வியறிவு விகிதம் (வாசிக்க, எழுத தெரிந்த குடிதொகையினரின் சதவீதம்) 1948 இல் 57.6 இலிருந்து 1994 இல் 90.1 இற்கு மேற்பட்டது. அதற்கமைய பாடசாலைகளின் எண்ணிக்கையும் மாற்றமடைந்தது. 1948 இல் 3091 இலிருந்து 1996 இல் 10ஆயிரத்து 280 இற்கு கூடுதலாக அதிகரித்தது. பாடசாலைகளிற்கு இடையிலான சராசரித் தூரம் 1948 இல் 22 சதுர கிலோமீற்றருக்கு ஒரு பள்ளிக்கூடத்தில் இருந்து 1997 இல் 6 சதுர கிலோமீற்றருக்கு ஒரு பள்ளிக்கூடம் எனக் குறுகியது. ஆசிரியர்களின் எண்ணிக்கையும் 6 மடங்காக அதிகரித்தவுடன் மாணவர், ஆசிரியர்களின் விகிதமும் (ஆசிரியர் ஒருவருக்கான மாணவர் எண்ணிக்கை) 1948 இல் 36 இலிருந்து 1996 இல் 22 இற்கு மேற்பட்டது. 1997 இல் மொத்தப் பள்ளிக்கூட அமைப்பில் 59 சதவீதமானவை க.பொ.த (உயர்தரம் ) மற்றும் சாதாரண வரையிலான கல்வியை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான மாற்றங்களின் விளைவாக கல்வி வளர்ச்சியடைந்தமைக்கு காரணம் கல்வியின் மீது காட்டப்பட்ட அரசின் நடவடிக்கைகளே ஆகும்.

நாட்டின் பிள்ளைகளின் கல்வி மிகமிக முக்கியத்துவம் வாய்ந்ததொரு பணியாகும். சிறப்பு மிக்க இப்பணி தொடர்பான மனோபாவங்களும் விழுமியங்களும் காலத்திற்கு காலம் மாறிக்கொண்டே வந்துள்ளன. கல்வியானது பொதுவானதொரு பண்பாட்டையும் தனியான பகுத்துணர்வையும் ஒழுக்க சமூக பொறுப்புரிமையையும் ஏற்படுத்த வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சாசனம் வலியுறுத்துகின்றது. எனவே தான் மாறி வரும் பொருளாதார தேவைகளுக்கு ஈடு கொடுக்கக் கூடிய நன்கமைந்த புதிய கல்வி முறைகளின் தேவை 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியளவில் வலுவாக உணரப்பட்டது. கல்வி முறைமை இலங்கை சமூகத்தின் அரசியல் கட்டமைப்பு, சனநாயகம், பொருளாதாரம், பொதுச் சுகாதாரம், பொது ஒழுக்கநெறி தேசிய சமயங்கள், பல்லினப் பண்பாடு என்பனவற்றினதும் யாவற்றிற்கும் மேலாக தனிப்பட்ட குழுக்களினதும் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டுமாயின் கல்வி முறைமையின் அடிப்படையிலும் பண்பிலும் மாற்றங்கள் செய்தல் இன்றியமையாதது. இத்தகைய சீர்திருத்தங்களை இனங்கண்டு அவற்றை ஒழுங்குபடுத்தலே ஆணைக் குழுவின் பணியாகும். இதற்கிணங்க அப்போதைய அரசாங்கம் 1991 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆம் திகதி அன்று தேசிய ஆணைக்குழுவை நிறுவியது.

தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளை அடிப்படையாகக் கொண்டே கல்வி சீர்திருத்த பிரேரணைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. தற்போது 05 - 14 வயது வரையான கட்டாயக்கல்வி பயில வேண்டிய வயதெல்லையிலுள்ள சிறார்களுள் சுமார் 14 சதவீத மாணவர்கள் கல்வி கற்பதில்லை. கட்டாய வயதெல்லைக்குள் உள்ள சிறார்களை பாடசாலைக்கு வரவழைத்துக் கொள்வதற்கான சட்டங்கள் விதிப்பது மட்டுமன்றி ஊக்குவிப்புக்களை வழங்குவதன் மூலமாகவும் சிறார்களை பாடசாலைக்கு வரவழைத்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**நாகேஸ்வரி விஜயகாந்தன்**

குழந்தையின் கல்விக்கான அடித்தளம் இடப்படுகின்ற இப் பருவத்தின் பிள்ளைகளுக்கு கொடுக்கப்படுகின்ற கல்வியானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். எனினும் இப்பருவத்தில் நிலவுகின்ற குறைபாடுகளின் காரணமாகப் பிள்ளைகள் பாடசாலையை விட்டுவிலகிச் செல்லல் போன்ற நிலைமைகள் காணப்பட்டது. இதற்கிணங்க ஆரம்பக்கல்வியின் வளர்ச்சிக்காக முதலாம் தரம் முதல் ஐந்தாம் தரம் வரையான ஆரம்பக் கட்டத்திலான பிள்ளைகளுக்குச் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட கல்வி முறை அறிமுகம் செய்யப்பட்டது. கனிஷ்ட இடைநிலைக் கல்வி 6 ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரையுள்ள பருவமாகும். (தொடரும்)

---

# புலிகளின் கப்பல் பொறியியலாளருக்கு நியூசிலாந்தில் புகலிடம் வழங்க முடியும்

## அந்நாட்டு உயர் நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் கப்பல் பொறியியலாருக்கு புகலிடம் வழங்க முடியும் என நியூசிலாந்து உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

குறித்த நபர் தமிழீழ விடுதலைப் புலிகளின் கப்பல் பொறியியலாளர் என கண்டு பிடிக்கப்பட்டதன் பின்னரும் அவருக்கு புகலிடம் வழங்க முடியும் என அந்நாட்டு உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதோடு 2001 ஆம் ஆண்டு குறித்த நபர் நியூசிலாந்தில் அடைக்கலம் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கடத்துவதற்கு பயன்படுத்திய கப்பலின் பிரதான பொறியியலாளராக குறித்த நபர் கடமையாற்றியுள்ளதோடு இவருக்கு புகலிடம் வழங்கப்பட முடியாதென முதலில் தீர்ப்பளிக்கப்பட்டது.

பின்னர் செய்யப்பட்ட மேன் முறையீட்டை விசாரணை செய்த உயர் நீதிமன்றம் புகலிடம் வழங்க முடியும் என அறிவித்துள்ளது. (6-2)

---

# புலம்பெயர் தமிழர்களை சந்திக்க டேவிட் மில்லி பான்ட் திட்டம்



பிரித்தானியாவின் முன்னாள் வெளி விவகார அமைச்சர் டேவிட் மில்லி பான்ட் தமிழ் புலம் பெயர் மக்களை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்த உள்ளதாகத் தெரி விக்கப் படுகிறது.

அடுத்த வாரமளவில் லண்டனில் இச் சந்திப்பு நடைபெற உள்ளதாகவும் இதில் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களும் ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்களும் பங்கேற்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தொழிற் கட்சிக்கான தமிழர் அமைப்பு என்ற குழுவினால் இந்த சந்திப்பிற்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

டேவிட் மில்லிபான்டுடனான சந்திப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததென அந்த அழைப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

டேவிட் மில்லிபான்ட் தொழிற்கட்சியின் தலைவராகவும் எதிர்கால பிரதமராகவும் வரக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 4 ஆம் திகதி இந்த சந்திப்பு நடைபெறவுள்ளது. கடந்த பெப்ரவரி மாதம் க்ளோபல் தமிழ் போரம் அமைப்புடன் மில்லிபான்ட் சந்திப்பு ஒன்றை நடத்தியதனால் இரு நாடுகளுக்கும் இடையில் பெரும் சர்ச்சை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. (6-2)

---

# தயா மற்றும் ஜோர்ஜ் மாஸ்டர் குறித்து சட்டமா அதிபரிடமிருந்து ஆலோசனை

## புலனாய்வுப் பிரிவு அறிவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடகப் பேச்சாளர் தயா மாஸ்டர் மற்றும் மொழி பெயர்ப்பாளர் ஜோர்ஜ் மாஸ்டர் ஆகியோர் தொடர்பில் சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெற்றுக் கொள்ளப்பட உள்ளதாக புலனாய்வுப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

தயா மாஸ்டர் மற்றும் ஜோர்ஜ் மாஸ்டர் ஆகியோர் தற்போது பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இருவருக்கும் எவ்வாறான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய செயற்பட உள்ளதாக இவர்களுக்கு எதிரான மனு நீதிமன்றில் பரிசீலனை செய்யப்பட்ட போது புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ச-5)

---

# மரமுந்திரிகை தொழிலை மீண்டும் மேற்கொள்ள நடவடிக்கை

(கொழும்பு)

யுத்தம் காரணமாகக் கைவிடப்பட்டிருந்த மரமுந்திரிகை கைத்தொழிலை வடபகுதியில் மீண்டும் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாக விவசாயக் கைத்தொழில் மற்றும் இயற்கை வள பிரதி அமைச்சர் சரத் குமார குணரத்ன தெரிவித்துள்ளார்.

வடபகுதியில் அதிக இடங்களில் மரமுந்திரிகைச் செய்கை கைவிடப்பட்டுள்ள போதிலும் மாந்தை என்னும் இடத்தில் 600 ஏக்கரிலும் ஜயபுரம் என்னும் இடத்தில் 1000 ஏக்கரிலும் மீள் நடுகை செய்யவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நாட்டின் மொத்த மரமுந்திரிகை உற்பத்தியில் 70 சதவீதம் அன்று வடபகுதியிலிருந்தே மேற்கொள்ளப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (6-2)

# வெங்காயத்தில் பீடைகளும் அவற்றினது முகாமைத்துவமும்




**கலாநிதி கு.மிகுந்தன்**
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்


## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

11-XI

**மிளகாய்ப்பயிரில் பீடைகளும் அவற்றின் முகாமைத்துவமும்**

***வாருங்கள் எமது இனிய உறவுகளே!***

வெங்காயப் பயிரில் சேதத்தையேற்படுத்துகின்ற பீடைகளைப் பற்றியும் அவற்றினை முகாமைத்துவப்படுத்துவது பற்றியும் விரிவாக கடந்த பல கிழமைகளாக ஆராய்ந்தோம். தொடர்ந்து மிளகாய்ச் செய்கையாளர்களது பிரச்சனைகளாக உள்ள பீடைகளை ஒவ்வொன்றாக விலாவாரியாக பார்ப்போம்.

மிளகாய்ச் செய்கையாளர்களே! இக்கட்டுரைகளை வலம்புரியில் தொடர்ந்து வாசியுங்கள். உங்கள் கருத்துக்கள், சந்தேகங்களை வலம்புரிக்கு எழுதுங்கள். முடிந்தவரை எனக்குத் தெரிந்த, அறிந்த அறிவுப் புலமையின் அனுவபத்தை உங்களுடன பகிர்ந்து கொள்கிறேன்.

பணப்பயிரென்பதால் மிளகாய்க்கும் கேள்வி அதிகம். எங்களூர் பயிர்ச்செய்கை முறைகளுக்குள் மிளகாய் பயிருக்கு முக்கியத்துவமும் அதிகம். கவனிப்பு அதிகமானால் பிரச்சனையும் அதிகமாமே. மிளகாய் பயிரில் சேதத்தை ஏற்படுத்தும் பீடைகளை சரியாக இனங்கண்டு முகாமைத்துவப்படுத்துதல் அவசியம். மிளகாயின் விதையினை நாற்று மேடையிலிட்ட நாள் முதல் பழத்தை அறுவடை செய்து களஞ்சியப்படுத்துவது வரை மிளகாய்ப் பயிரை, பீடைகளின் சேதத்திலிருந்து காப்பாற்ற வேண்டியிருக்கின்றது. இந்த பயிர்ச் செய்கைக்குள் பீடைகளின் சேதங்களையும், அவற்றை இயன்றவரை இனங்காணுவது பற்றியும் அவற்றை எவ்வாறு முகாமைத்துவப்படுத்துவது பற்றியும் அலசப் போகின்றோம்.

**மிளகாய்ப் பயிரிலுள்ள பீடைகள்**

1) பூச்சிப் பீடைகள்
2) பூச்சிகளல்லாதன-சிற்றுண்ணிகள்
3) நோய்கள்

இந்த வகைகளுக்குள் வரும் பீடைகளை இனங்கண்டு கொள்வோமா? வாருங்கள்.

1) பூச்சிப் பீடைகள்
அ) பனிப்பூச்சி
ஆ) காய் துளைப்பான்
இ) வெள்ளை ஈ
ஈ) அழுக்கணவன்
உ) மாகுப் பூச்சி


2) நோய்கள்.
அ) நாற்றழுகல்
ஆ) இலைச்சுருள்
இ) கொப்பழுகல்
ஈ) கழுத்தழுகல்
உ) வாடல்
ஊ) இலைப் புள்ளி மற்றும் வெண்செத்தல்
எ) வேரழுகல்.

3) பூச்சியல்லாதவை
அ) சிற்றுண்ணி
ஆ) விலாங்குப் புழுக்கள்

**நாற்றுமேடையில் நாற்றழுகல் முகாமைத்துவம்.**

மிளகாய் போன்ற பயிர்களை நாற்று மேடையிலேயே ஏறக்குறைய ஒரு மாதமளவில் விதை விதைத்து வீரியமான நாற்றுக்களைப் பெற வழியுண்டு. இம் மாத காலத்தில் விளைநிலத்தை பண்படுத்தி நாற்று நடுவதற்காக தயார்படுத்திக் கொள்ளுவர்.

நாற்று மேடையென்னும் சிறிய இடத்தில் விதைகள் தூவப்பட்டு நாற்றுக்களை சிறந்த முறையில் பராமரித்துக் கொள்ளலாம். வெறுமனே விளைநிலத்தில் நேரடியாக விதைக்கும் போது விதையினுடைய முளை திறனைப் பொறுத்து,




வகை1
முளை நிலத்தின் மேல் எழும்தலுக்கு முன்னதான அழுகல்

வகை 2
முளை நிலத்தின் மேலெழும்பிய பின்னரான அழுகல்

நாற்று மேடையென்னும் சிறிய இடத்தில் விதைகள் தூவப்பட்டு நாற்றுக்களை சிறந்த முறையில் பராமரித்துக் கொள்ளலாம். வெறுமனே விளைநிலத்தில் நேரடியாக விதைக்கும் போது விதையினுடைய முளை திறனைப் பொறுத்து, விளைநிலம் பண்படுத்தப்பட்டதைப் பொறுத்து பயிரினடர்த்தியிருக்கும். விளைநிலம் விசாலமானது என்பதால் விதை முளைத்தலையோ அன்றி வளரும் நாற்றையோ வீரியமானதாக அருகிருந்து கண்காணிக்க முடியாது. அத்துடன் விளைநிலத்திலுள்ள மண்ணின் தன்மை, ஈரலிப்பு இவற்றுடன் அதிலிருக்கும் நோய்க் காரணிகள் மற்றும் பூச்சிகளினால் விதைத்த விதை பாதிப்புறவும் சாத்தியக்கூறு அதிகமுண்டு.

இவையெல்லாவற்றையும் கவனத்திற் கொண்டே நாற்றுமேடையில் மிளகாய் போன்றவை முளைக்க விடப்பட்டு அதிலிருந்து வெளிவரும் நாற்றுக்களைப் பரா பராமரித்து வீரியமான நாற்றுக்களை தெரிந்து பிடுங்கி விளைநிலத்திலே நடுவர்.

ஆக மொத்தத்தில் நாற்றுமேடையிலிருந்து நடுகைக்குத் தேவையான சிறந்த நாற்றுக்களைப் பெறலாம். முன்பே குறிப்பிட்டதைப் போன்று வளரும் நாற்றுக்களைப் பெறலாம். முன்பே குறிப்பிட்டதைப் போன்று வளரும் நாற்றுக்களை அருகிருந்து கவனிப்பதற்கான வாய்ப்பு மிக அதிகம்.குறிப்பாக நாற்றினது தண்டு வீரியமானதாக அதற்கேற்றவாறான தடிப்பினைக் (girth) கொண்டிருக்க வேண்டும். அதற்கும் மேலாக நாற்றினை நாற்றுமேடையிலிருந்து பிடுங்கி விளைநிலத்தில் நடுகை செய்யும் போது அதனது வேர்ப்பகுதிக்கு இவ்வாறு பிடுங்கி நடுதல் செயன்முறையில் கொடுக்கப்படும் அதிர்ச்சி (Transplanting shock) மூலமாக நடப்படும் நாற்று புதியதொரு உத்வேகத்தில்தொடர்ந்து வளரும்.இந்த அதிர்ச்சி வைத்தியம் நாற்றுக்களுக்கு சிறந்தது என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அதன் வேர்கள் புதிது புதிதாக வேர்மயிர்களை உருவாக்கி நாற்றுக்கு தேவையான நீர் மற்றும் நுண்ணூட்டச் சத்துக்களை உறிஞ்சிக் கொடுக்கும். இது நாற்றுக்களாக மிளகாய்ப் பயிரை வளர்ப்பதிலுள்ள இன்னொரு சிறப்பு.

நாற்றுமேடை தயாரிப்பு மிகுந்த கவனத்துடன் செய்யப்படல் வேண்டும். நல்ல நாற்று வீரியமுள்ள நாற்று உற்பத்திக்கான அனைத்தும் நாற்று மேடையில் / பாத்தியில் இருத்தல் வேண்டும். குறிப்பாக நோய்த் தாக்கத்திற் உட்படும் வகையில் நாற்று மேடை அமைக்கப்படலாகாது.

நாற்று மேடையில் நாற்றழுகல் நோய் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம். நாற்றழுகலை Damping off என ஆங்கிலத்தில் அழைப்பர். இது இரண்டு வகைப்படும்.

வகை 1- விதைத்த மிளகாய் விதையில் பூஞ்சண தொற்று ஏற்படுவதனால் விதையில் சேதமேற்பட விதை முளைக்காது விடும். மாறாக முளைத்த விதையில் நோய்த் தொற்று ஏற்பட்டு முளைத்தண்டு மண்ணின் மேற்பரப்பிற்கு வளர்ந்து வரமுன்பே அழுகல் ஏற்பட்டு இறந்துவிடும். இதனை முளைத்தெழும்புவதற்கு முன்னரான அழுகல் (Pre-emergence damping off) என அழைப்பர்.

வகை 2- இதிலே வித்து முளைத்து முளைதண்டும் வேரும் வளர்ந்து செல்லும். முளைதண்டு மண்ணின் மேற்பரப்பினூடாக வெளிவந்து வித்திலைகளை உருவாக்கி பின் உண்மையான இலைகளைத் தோற்றுவிக்கும். இரு வித்திலை பருவமதில் நிலத்தின் மட்டத்தில் இளம் நாற்றின் தண்டின் கழுத்துப் பகுதியில் பூஞ்சணத் தொற்று ஏற்படுவதனால் கழுத்தளவில் அழுகல் ஏற்பட்டு தலை பாரம் தாங்க முடியாது கழுத்தளவில் சாய்ந்து இறந்து விடும். இதனை முளைத்தெழும்பிய பின்னரான அழுகல் (Postemergence damping off) என அழைக்கின்றனர்.

முதலாவது வகையில் விதையில் முளைக்க முன்பு அழுகலேற்பட்டதையோ அல்லது முளைத்தபின்பு அழுகல் ஏற்பட்டதையோ கண்டுபிடிக்க முடியாது. ஏனெனில் எக்காரணங்கொண்டும் முளைத்த விதை நிலத்தின் மேற்பரப்பை விட்டு வெளியே வரமாட்டாது. ஆகவே குறிப்பிட்ட காலத்தின் பின்னர் முளைக்காத விதைபற்றி அறிய முடியும்.

ஆனால் இரண்டாவது வகையில் நாற்று நிலத்தின் மேற்பரப்பினூடாக வெளித் தெரிவதாலும் தண்டினது கழுத்துப் பகுதியில் முறிந்து சரிவதும் கண்களால் பார்த்தறி யலாம். விவசாயப் பெருமக்கள் இவ் விரு வகையான அழுகல் இருக்கின்றதென்பதை இலகுவில் வேறுபிரித்தறியவே இவ்வளவு விபரணமும்.

**நாற்றழுகலைத் தோற்றுவிக்கும் பூஞ்சணங்கள்.**

மேலே குறிப்பிட்ட நாற்றழுகலைத் தோற்றுவிக்கும் பூஞ்சணங்கள் பல உண்டு. ஆனால் எங்களூர் மிளகாய் விதைகளில் மற்றும் முளைத்து வரும் இளம் நாற்றில் <u>பித்தியம் அபானிடமேற்றம் (Pythium aphani dermatum)</u> மற்றும் <u>றைசோக்ரோனியா (Rhizoctonia)</u> ஆகிய பூஞ்சணங்கள் அழுகலுக்கு காரணமாக இருக்கின்றன. இவை மண்ணில் வாழ்ந்து தாவர சேதன பொருட்களில் அழுகல் வளரிகளாக வாழுகின்றன.

அழுகல் வளரியாக வாழுவதனால் மண்ணில் எப்போதுமே இப் பூஞ்சணங்கள் வாழுகின்றன. தகுந்த தாவரபாகம் கிடைக்கும் போது அதனையே தூண்டியாக வைத்து பூஞ்சணங்கள் தம்மை விருத்தி செய்து கொள்கின்றன. இவ்வகைப் பூஞ்சணங் களை நாற்றுமேடையை சரிவர அமைப்பதிலும் மிளகாய் விதைகளை விதைப் பரிகரணஞ் செய்வதிலிருந்தும் தவிர்க் கலாம்.

1) இதற்கு முன்பு விதை நேர்த்தி செய்வது பற்றி விரிவாகவே ஆராய்ந்திருக்கின்றோம். விதை நேர்த்தியில் பூஞ்சண - நாசினிகளான கப்டான், திராம் ஆகியனவற்றைப் பயன்படுத்தலாம். நன்மைதரும் பூஞ்சணமான ரைக்கோடேர்மாவையும் பயன்படுத்தலாம்.

2) நாற்று மேடையை நல்ல இடத்தில் அமைத்தல் அவசியம் .நல்ல இடமென்பது இங்கே நீர் தேங்காத மேடான இடம், அதிலே நாற்றுமேடைக்குரிய பரிகரணங்களை மேற்கொள்ளல் வேண்டும். (தொடரும்)

---

# இந்தியா - இலங்கை பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்திக் கொள்வது குறித்து பேச்சுவார்த்தை

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்திக்கொள்வது குறித்து பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ள இலங்கை இராஜதந்திரிகளுடன் இந்திய உயர் அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு விவகாரங்களை வலுப்படுத்திக் கொள்வது தொடர்பில் இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச ஆகியோர் இலங்கையின் சார்பில் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டுள்ளனர்.

இந்திய வெளிவிவகாரச் செயலாளர் நிருபமா ராவ், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன்,பாதுகாப்புச் செயலாளர் பிரதீப் குமார் ஆகியோர் இந்தியாவின் சார்பில் இந்தப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டனர். (6-2)

---

# அமைச்சர்கள் மக்களின் சேவகர்கள் என்பதனை நினைவில் நிறுத்தவேண்டும்


## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

அமைச்சர்கள் மக்களின் சேவகர்கள் என்பதனை நினைவில் நிறுத்திக்கொள்ள வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அமைச்சர்கள், ஆளுநர்கள், அரசாங்க அதிபர்கள்,மாகாணத் தலைவர்கள் , பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவரும் தங்களை அரசர்களாகவோ அல்லது அரசிகளாகவோ கருதக்கூடாது எனவும், அவர்கள் அனைவரும் மக்களின் சேவகர்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கண்டியில் தியவதன நிலமேகளுடன் நடைபெற்ற சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.அரசாங்க அதிகாரிகள் நாட்டு மக்களுக்கு முன் மாதிரியாக செயற்பட வேண்டுமென்று அவர்குறிப்பிட்டுள்ளதுடன் விஹாரை மற்றும் தேவாலயங்களின் சொத்துக்கள் உரிய முறையில் பேணப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார். (6-2)





ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான ஆக்கம் மற்றும் அழகியல் பாட செயலமர்வு நேற்று கோப்பாய் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. இதில் யாழ். கல்வி வலய சங்கீத பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி கே.மயில்வாகனம் செயலமர்வு நிகழ்த்துவதையும் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் மற்றும் ஆசிரிய ஆலோசகர்களான திருமதி பி.செல்வேந்திரகுமார் மற்றும் செல்வி ரி.யோகேஸ்வரி ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் இச் செயலமர்வில் கலந்துகொண்ட ஆசிரியர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

# குடிவரவு தொடர்பில் தமிழ் அகதிகளின் கண்ணியத்தை மனதில் கொள்ளவேண்டும்

## வான்கூவர் பேராயர் தெரிவிப்பு



குடிவரவு தொடர்பில் தமிழ் அகதிகளின் கண்ணியத்தை மனதில்கொள்ள வேண்டியது அவசியம் என்று வான்கூவர் பேராயர் ஜே. மைக்கல் மில்லர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் ,

492 இலங்கைத் தமிழ் அகதிகளின் வருகை கனடாவின் குடிவரவுக் கொள்கை தொடர்பாகவும் அண்மையில் கப்பலில் வந்த ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளை எவ்வாறு நடாத்துதல் என்பது தொடர்பாகவும் வலுவான கருத்தாடல்களைகத் தோற்றுவித்துள்ளது.

தங்களின் தாய்நிலங்களில் தங்களுக்கு இழைக்கப்பட்ட பல இன்னல்களில் இருந்து தப்புவதற்காக எங்களின் கரைகளை வந்தடைந்துள்ள இவர்கள் தொடர்பாகவும் சில கருத்துக்கள் ஏவி விடப்படுகின்றன. அவர்கள் உரியகாலம் காத்திருக்கவில்லை எனவும் எங்களின் குடிவரவு வழிமுறைகளை பிழையான வழியில் பயன்படுத்துவதாகவும் மேலும் அகதிகளினால் கனடாவுக்கு பங்கம் ஏற்படாமல் தடுக்க வேண்டிய தேவை தொடர்பாகவும் பெரும் பரபரப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நேரத்தில் ஒவ்வொரு மனிதனுக்கும் உரிய குறிப்பாக புதிதாக வந்திறங்கியுள்ளவர்களுக்குரிய, அடிப்படை கண்ணியத்தை மனதில் கொள்ளவேண்டியது மிகவும் அவசியமானதாகின்றது.

கத்தோலிக்க சமூக கல்வி என்பது அகதிகளின் உரிமைகளில் எந்தவிதமான விட்டுக் கொடுப்புக்களையும் மேற்கொண்டது கிடையாது.அத்தோடு, குடிவரவுக்கொள்கை, சட்ட வலுவாக்கல் மற்றும் மேம்பாடு என்பவை தொடர்பான விவாதங்களில் இந்த ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் பலிக்கடாக்கள் ஆகிவிடக்கூடாது.

ஏற்படக்கூடிய பாதுகாப்பு சீர்கேடுகளில் இருந்து பாதுகாத்துக்கொள்ளக் கூடியவாறு புதிய குடிவரவாளர்களின் அடையாளங்களை உறுதிப்படுத்துதல் எந்த ஒரு பொறுப்பான அரசாங்கத்துக்கு முக்கியமான விடயமாகும்.

இருப்பினும், ஆயதந்தாங்கிய மோதல்கள், முறையற்ற பொருளாதாரக் கொள்கைகள், இயற்கை அனர்த்தங்கள் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களும் தங்கள் சொந்த நாட்டில் இடம்பெயர்ந்திருந்த மக்களும் அகதிகளாக அங்கீகரிக்கப்பட்டு பன்னாட்டு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்பதில் கத்தோலிக்க திருச்சபை உறுதியாகவுள்ளது.

குடிவரவாளர்கள் மற்றும் அகதிகளின் தேசமாகவும், அநீதியில் இருந்து தப்பி வருவோரை வரவேற்பதிலும் நீண்ட வரலாற்றைக் கொண்டதுமாகவும் கனேடிய தேசம் உள்ளது.

தொழிற்துறை மயமாக்கப்பட்ட நாடுகள் தேவைக்கதிகமாக கட்டுப்படுத்தப்பட்ட குடிவரவு மற்றும் அகதிகள் தொடர்பான கொள்கைகளை வகுப்பதன் விளைவாக வேறு வழிகளில் ஆட்கள், குறிப்பாக பெண்களும் குழந்தைகளும் கடத்தப்பட்டுக் கொண்டு வரப்படுவது உலகம் முழுவதும் அதிகரித்துள்ளது என்பது வெளிப்படை.

மிகவும் அதிவேகமாக வளர்ந்துவரும் நாடுகடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களின் வரிசையில் முன்னணியில் ஆட்கடத்தல் உள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை அறை கூவல் விடுத்துள்ளது.

தங்களின் உயிர்களைக் காத்துக் கொள்வதற்காக தமது தாய்நாட்டில் இருந்து தப்பி வந்து தற்போது தடுப்பில் இருக்கும் ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளை மனதில் நிறுத்தி இந்த நாட்டின் குடிவரவாளர் கொள்கையை ஆராய வேண்டியது நீதியானதாக இருக்கும். (6-2)

# பார்வையற்றோருக்கு செயற்கை கருவிழிகள் மூலம் கண்பார்வை

## விஞ்ஞானி சாதனை

கண்பார்வை பறிபோனவர்கள் வேறு ஒருவரிடம் தானமாகப் பெற்ற கருவிழிகள் மூலம் மீண்டும் பார்வை பெற்று வருகின்றனர். தற்போது செயற்கை கருவிழிகள் மூலம் பார்வை பெறச் செய்து ஒரு பெண் விஞ்ஞானி சாதனை படைத்துள்ளார்.

அவரது பெயர் மேகிரிப்த்.இவர் சுவீடனில் உள்ள லிங் கோபிங் பல்கலைக்கழகத்தில் இதற்கான ஆய்வு ஒன்றை மேற்கொண்டார்.

இவர் மனித திசுக்களை இல்லது இணைப்பு திசுவின் வெண் புரதம் (கலோஜென்) போன்றவற்றை ஆய்வகத்தில் செயற்கையாக வளரச்செய்து அதனை கண்களில் பொருந்தும் காண்டேக்ட் லென்ஸ் போன்று வடிவமைத்தார்.பின்னர் பார்வை இல்லாதவர்களுக்கு அதை பொருத்தி பார்வைபெறச் செய்தார். இது மருத்துவ உலகின் மிகப் பெரும் சாத னையாகக் கருதப்படுகிறது.

தற்போது கருவிழி பாதிப்பினால் உலகில் சுமார் 1கோடி மக்கள் பார்வை இழந்து இருளில் தவிக்கின்றனர். இந்த கண்டுபிடிப்பின் மூலம் அவர்களின் வாழ்வில் மீண்டும் ஒளிபரவும் என்பதில் சந்தேகமில்லை. (6-2)

# முருங்கன் பிரதேசத்தில் 23 இலட்சம் ரூபாய் கொள்ளை

## பொலிஸ் அதிகாரி உட்பட மூவர் கைது

மன்னார் மாவட்டம், முருங்கன் பிரதேசத்தில் 23 இலட்சம் ரூபாய் கொள்ளையிடப்பட்டுள்ளதாகவும், இந்த சம்பவத்துடன் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு தொடர்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முருங்கன் பொலிஸ் வலயத்திற்கு உட்பட்ட சூரிய கட்டக்காடு என்ற பிரதேசத்தில் இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் சுமார் 23 இலட்சம் ரூபாய் பெறுமதியான பணம் மற்றும் தங்க ஆபரணங்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

பொலிஸ் பரிசோதகர், கான்ஸ்டபிள் ஒருவர் மற்றும் புளொட் கட்சி உறுப்பினர் ஆகியோர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார். (6)

# அரசியல் சாசன திருத்தம் தொடர்பில் ஐ.தே.கவின் நடவடிக்கையில் அதிருப்தி

## ரில்வின் சில்வா தெரிவிப்பு



(கொழும்பு)

அரசியல் சாசனத் திருத்தம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் நடவடிக்கைகள் அதிருப்தி அளிப்பதாக ஜே.வி.பி.கட்சி அறிவித்துள்ளது.

அரசாங்கம் அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ளும் நோக்கில் அரசியல் சாசனத்தில் திருத்தங்களை மேற்கொள் வதாக தமது கட்சி பிரச்சாரங்களை மேற்கொண்டு வரும் வேளையில், நாட்டின் பிரதான எதிர்க்கட்சி அரசாங்கத்துடன் இணைந்து பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக கட்சியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அரசியல் சாசனத் திருத்தம் மிகவும் முக்கியமான ஓர் விடயமாகும் என்றும் ; சகல தரப்பினரிடமும் கருத்துக்களை கோர வேண்டியது மிகவும் அவசியமானதெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி இந்தப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்ட காரணத்தினால் மக்களின் கவனம் திசை திருப்பப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அரசியல் சாசனத்திருத்தம் தொடர்பில் நாட்டில் ஏற்பட்டுள்ள குழப்பநிலைமைகளுக்கு ஐக்கிய தேசியக்கட்சி தலைமைத்துவமும் பொறுப்பு சொல்லவேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடளாவிய ரீதியில், பாரிய எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தி அதன்மூலம் அரசியல் சாசனத் திருத்தங்கள் மேற்கொள்வதனைத் தடுக்க தமது கட்சி உத்தேசித்துள்ளதாகவும் இவ்வாறு பாரிய மக்கள் எதிர்ப்புக் கிளம்பினால் கட்சி தாவி மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு ஆதரவளிக்க உத்தேசித்துள்ளவர்கள் கூட சற்றுப் பின்வாங்குவர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

விரிவான எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்குவது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி ஊடகங்களில் கருத்து வெளியிட்ட போதிலும், இதுவரையில் தமக்கு உத்தியோகபூர்வமாக எவ்வித அழைப்பினையும் விடுக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.(6-2)




தேசிய கல்வி நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்படவுள்ள பாடசாலை மட்ட இருமொழிக் கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான செயலமர்வு நேற்று யாழ்.கல்வி வலயத்தில் நடைபெற்றது. இதில் திருகோணமலை மாவட்ட கல்வி வலய மாகாணக் கல்வித் திணைக்கள உதவிக் கல்விப் பணிப்பாளர் க.அ.சிவனருள்ராஜா செயலமர்வை நிகழ்த்து வதையும் அருகில் இருமொழிக் கல்வி தேசிய கல்வி நிறுவனப் பொறுப்பாளர் திருமதி எஸ்.அசோக்கா மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா ஆகியோர் அமர்ந்திருப்பதையும் இதில் கலந்துகொண்ட வடமாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் ஆசிரியர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

# இனந்தெரியாத விசமிகள் அட்டகாசம்

(கொழும்புத்துறை)

கோண்டாவில் நாராயணன் சனசமூக நிலைய சுற்றாடலில் உள்ள வீடுகளுக்கு இரவு, பகல் வேளைகளில் சில விசமிகள் கல் எறிவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேலும் இவ் விசமச் செயலை யார் செய்கிறார்கள், எதற்கு செய்கிறார்கள் என்று தெரியாத நிலையில் கல் எறிவது இரவு பகலாக நடப்பதாகவும் இதனால் சில வீட்டுக் கூரைகளில் ஓட்டை ஏற்பட்டு மழைக்கு ஒழுகு வதாகவும் மக்கள் கவலை தெரிவிக்கின் றனர். (6-51)

# இலவச கண்சிகிச்சையும் —மருத்துவ முகாமும்—

(சாவகச்சேரி)

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஏற் பாட்டில் மாபெரும் இலவச கண்சிகிச்சை மற்றும் மருத்துவமுகாம் நாளை ஞாயிற் றுக்கிழமை காலை 6 மணி முதல் மாலை 5 மணிவரை கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இம்முகாமில் யாழ்.போதனா வைத்திய சாலை நிபுணர்களுடன் ஹெந்தலை லயன்ஸ் கண் வைத்தியசாலையின் வைத் திய நிபுணர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் இதில் இலவச கண் பரிசோதனை, இரத்தஅழுத்த பரிசோதனை, நீரிழிவு, இலவச மூக்குக் கண்ணாடி, மருந்து விநியோகம், சத்திர சிகிச்சை ஒழுங்குகளை மேற்கொள்ளல், கண் வில்லைகளைப் பெற்றுக் கொடுத்தல் போன்ற விடயங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதால் மக்கள் அனைவரும் கலந்துகொண்டு பயன் பெறுமாறு லயன்ஸ் கழக நிர்வாகத்தினர் கேட்டுக் கொள்கின்றனர். (6-4-29)

# 5 ஆயிரம் ரூபாய் தாள் அறிமுகப்படுத்தப்படவுள்ளது

(கொழும்பு)

வரலாற்றில் முதல் தடவையாக இலங் கையில் 5000 ரூபா தாள் ஒன்றை அறி முகப்படுத்த இலங்கை மத்திய வங்கி உத்தே சித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை மத்திய வங்கியின் அறுப தாண்டு பூர்த்தியை முன்னிட்டு வெளியிடப்பட வுள்ள புதிய நோட்டுக்களில் ஐயாயிரம் ரூபா நோட்டுக்களும் வெளியிடப்படவுள்ளன.

எதிர்வரும் 2011 ஆண்டு முதல் பகுதியில் இந்த புதிய நோட்டுக்களும் வெளியிடப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த புதிய ஐயாயிரம் ரூபா நோட்டின் மூலம் இலங்கையின் அபிவிருத்தி வெளிப் படுத்தப்படும் எனக் குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை நாட்டின் பணவீக்க வீதம் உயர்வாகக் காணப்பட்டாலே பெறுமதியான பண நோட்டுக்களை அச்சிட நேரிடும் என சில பொருளியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட் டியுள்ளனர். (6)

# மறவன்புலோ மக்களுக்கு வாழ்வாதார பயிற்சிகள்

(தனங்கிளப்பு)

கெயார் நிறுவனத்தினால் வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் மறவன்புலோ கிராமப்புற மக்களுக்கு மறவன்புலோ கிராம சேவையா ளர் அலுவலகத்தில் வாழ்வாதாரப் பயிற்சிகள் வழங்கப்பட்டுவருகின்றன.

இப்பயிற்சிகள் நேற்று ஆரம்பமாகி இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது. இதில் ஆடுவளர்ப்பு பற்றிய பயிற்சிகள் வழங் கப்படவுள்ளன.

இம்மக்கள் பயிற்சியை பெற்றுக்கொள்வ துடன் ஆடுவளர்ப்பை மேற்கொள்வதற்கான திட்டங்களை பதிவு செய்து கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் மேலும் பல பயிற்சிகள் வழங்கப்படவுள் ளதாகவும் குறிப்பிடப்படுகிறது. (6-4-37)

# கடந்த இரு மாதங்களில் ரூ. 2 மில். வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது

## விமான நிலைய சுங்கப்பிரிவு தெரிவிப்பு

(கொழும்பு)

சுற்றி வளைப்புக்கள் மூலம் கடந்த 2 மாதங்களில் 2 மில்லியனுக்கு மேற்பட்ட தொகை ஈட்டப்பட்டுள்ளதாக விமான நிலைய சுங்கப்பிரிவு தெரிவித்துள்ளது.

போதைப்பொருள், இரத்தினக்கல், தங்கம், புராதனப் பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு சுற்றிவளைப்புக்கள் மூலம் இந்தத் தொகை ஈட்டப்பட்டுள்ளதாக சுங்க அத்தியட்சகர் பராக் கிரம பஸ்நாயக்க குறிப்பிட்டார்.

குறிப்பாக வெளிநாட்டவர்களிடமிருந்து 90 கோடி ரூபா பெறுமதியுடைய போதைப் பொருளை கைப்பற்றியமையே குறிப்பிட முடியும் என அவர் கூறினார். (6-4)

# கெஞ்சிக் கூத்தாடியவர் கே.பி. பதிலடி கொடுத்தார் நெடுமாறன்



நெடுமாறன்

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் 'வீர மரணம்' பற்றி முதலில் நெடுமாறனிடம் பேசியதாக வும், "இதை விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மத்திய குழு உறுப்பி னர்கள் மூலம் தீர்மானமாக வெளி யிடச் சொல்லி" தன்னை நெடுமாறன் வற்புறுத்தியதாகவும்... ஆனால், பின்னர் பிரபாகரன் உயிரோடு இருப் பதாக அவரும் வைகோவும் அறிக்கை விட்டு திகைப்படைய வைத்தார்கள் என்றும் டி.பி.எஸ்.ஜெயராஜுக்கு அளித்த பேட்டியில் கே.பி. தெரிவித்துள் ளார்.

இதுபற்றி உலகத் தமிழர் பேர மைப்புத் தலைவர் பழ.நெடுமாறனி டம் பேசினோம். விபரங்களைக் கேட் டுக் கொண்ட அவர், மிகவும் நிதான மாக பதிலளித்தார்.

"இந்த மனிதர் சொல்லும் வார்த் தைகளில் எதுவும் உண்மை இல்லை. கடந்த ஆண்டு, எங்கேயோ வெளி நாடு ஒன்றில் இருந்து, இவர் திடீ ரெனத் தொலைபேசியில் என்னிடம் பேசினார். "தமிழீழத் தேசியத் தலை வர் பிரபாகரன் வீர மரணம் அடைந்து விட்டார். அவருக்கு ஒரு வாரம் துக்கம் கடைப்பிடிக்க வேண்டும்" என்று அவர்தான் சொன்னார். பிரபாகரன் வீர மரணம் அடைந்தாரா, இல்லையா என்பதை அவருடன் களத்தில் இருந்த மூத்த தளபதிகள் மட்டுமே சொல்ல முடியும். கே.பி-யோ இன்டர்போலுக் குப் பயந்து வெளிநாடுகளில் வாழ்ந்து கொண்டு இருக்கிறார். அது அவருக்கு ஏற்பட்ட நிலை... இப்படி இருக்கும் நிலையில் என்னிடம் பேசிய அவரி டம், "பிரபாகரன் வீர மரணம் அடைந்து விட்டதாகக் கூற நீங்கள் யார்? பிரபா கரனுடன் போரின் இறுதிவரை களமாடிய தளபதிகள் இதைச் சொல்லட்டும் அல்லது தமிழீழ விடுதலைப் புலிகளின் பொலிட்பீரோ அறிவிக்கட்டும். வெளிநாட்டில் இருந்து கொண்டு நீங்கள் எதையாவது சொல்லக் கூடாது.உண்மையிலேயே பிரபாகரன் மீது நீங்கள் மரியாதை வைத்திருந்தால், இது அவரை அவ மரியாதை செய்யும் காரியம். இந்தத் தகவலை அறிவிக்குமாறு தமிழீழ விடு தலைப் புலிகள் இயக்கத் தலைமை உங்களிடம் சொன்னதா?" என்று கேட் டேன்.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் அவர், தொலைபேசி இணைப்பைத் துண்டித்துவிட்டார். நான்கு நாட்களுக் குப் பின்னர், பிரபாகரன் வீர மரணம் அடைந்துவிட்டதாக கே.பி.பரபரப் பான அறிக்கையை வெளியிட்டார். இவர் கேட்டுக்கொண்டபடி எந்த நாட் டிலும், 'வீர மரண'த்துக்காக ஈழத் தமிழ் மக்கள் ஒரு நிகழ்ச்சிகூட நடத் தவில்லை.

இதில் இருந்தே இவரின் யோக் கியத்தை உலகம் தெரிந்து கொண் டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக் கத்தில் கே.பி.2003-வரை தான் ஆயுதக் கொள்முதல் பொறுப்பாளராக இருந் தார். மறைந்த சு.ப.தமிழ்ச் செல்வன் வெளிநாடுகளுக்குச் சென்று வந்தபோது, கே.பி-யின் ஊழல்களைக் கேள்விப் பட்டு, அதற்கான ஆதாரங்களைத் தலை மையிடம் அளித்தார். அதையடுத்து, தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதக் கொள்முதல் பொறுப்பாளர் பதவியில் இருந்து கே.பி. நீக்கப்பட்டார். சில ஆண்டுகளுக்குப் பின்னர் கெஞ்சிக் கூத்தா டியதைக் அடுத்து சர்வதேச செயலகப் பிரிவுத் தலைவர் கேஸ்ட்ரோவுக்கு கட்டுப்பட்ட பணியில் நியமிக்கப்பட் டார். அப்போதும் கே.பி-க்கு முக்கியப் பொறுப்பு ஏதும் தரப்பட வில்லை!" என விபரித்த நெடுமாறன்,

**ஜூனியர் விகடன்**

"இப்போது கே.பி. 'றோ'உளவுப் பிரி வின் பிடியிலோ, சிங்கள அரசின் பிடியிலோ இருந்து கொண்டு இது போலப் பேசலாம்" என்றார் அழுத்தமாக!

இரா.தமிழ்க்கனல்

# காங்கிரசுடன் கூட்டணி அமைப்பாரா விஜயகாந்த்

## அரசியல் வட்டாரத்தில் பரபரப்பு



தமிழக சட்டசபை தேர்தலுக்கு இன்னும் 9 மாதங்களே உள்ளன. எனவே தேர்தல் கூட்டணியில் மாற்றம் வருமா? எந்தெந்த அணியில் எந்த கட்சிகள் சேரப் போகிறது என்ற பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த தேர்தலில் காங்கிரஸ் தி.மு.க. கூட்டணி அமைத்து தேர்தலை சந்தித்தன. அந்தக் கூட்டணி நீடித்து வருகிறது. கூட்டணிக்கு எதிராக பேசுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழக காங்கிரஸ் பொறுப்பாளர் குலாம் நபி ஆசாத் எச்சரித்துள்ளார்.

இதனால் சட்டசபை தேர்தலிலும் இதே கூட்டணி நீடிக்கும் என்ற கருத்து நிலவி வருகிறது.

தனித்து போட்டி என்று கூறிவந்த விஜயகாந்த் தற்போது அதை கைவிட்டு ஏதாவது ஒரு கட்சியுடன் கூட்டணி அமைத்து வருகிற தேர்தலை சந்திக்க திட்டமிட்டுள்ளார்.

தி.மு.க.- அ.தி.மு.க ஆகிய இரு கட்சிகளுடனும் கூட்டணி இல்லை என்று அறிவித்துள்ளதுடன் கரங்கிரஸ் கட்சியை அவர் விமர்ச்சிக்கவில்லையெனவும் இந்த நிலையில் காங்கிரஸ் மூத்த தலைவரும் முன்னாள் மத்திய மந்திரியுமான ஈ.வி.கே.எஸ் இளங்கோவன் நேற்று முன்தினம் விஜயகாந்த் வீட்டுக்கு நேரில் சென்று அவருக்கு பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்ததுடன் அரசியல் வட்டாரத்தில் இது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது பற்றி இளங்கோவன் தெரிவிக்கையில் , வளர்ந்து வரும் சக்தி வாய்ந்த அரசியல் தலைவர் விஜயகாந்த் அவருக்கு பிறந்த நாள் வாழ்த்து சொல்லவே வந்தேன் என்றார்.

விஜயகாந்த் காங்கிரஸ் கூட்டணிக்கு முயற்சித்து வருவதாக தே.மு.தி.க. வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்படுகிறது. ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் விஜயகாந்தை நேரில் வாழ்த்துவதற்கும் அதுதான் காரணம் என்று அவரது ஆதரவாளர்கள் கூறுகிறார்கள்.

இதுபற்றி அந்தக் கட்சியின் மூத்த நிர்வாகி ஒருவரிடம் கேட்ட போது , இப்போதைக்கு எதுவும் சொல்ல முடியாது. பல மட்டங்களில் பேச்சு நடக்கிறது. தேர்தல் நெருங்கட்டும். அதன் பின்பு தான் கூட்டணி முடிவாகும் என்றார்.

காங்கிரஸ் தரப்பில் விசாரித்த போது விஜயகாந்துக்கு கணிசமான வாக்கு வங்கி இருப்பதால் தேர்தல் நேரத்தில் ஏற்படும் சூழ்நிலைக்கு ஏற்ப அவரையும் தங்கள் பக்கம் இழுக்க காங்கிரஸ் மேலிடம் விரும்புகிறது என்று கூறினார்கள். பிறந்த நாள் விழாவுக்கு ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் வந்து சென்றதும் எல்லோரும் பலமான கூட்டணியைத் தான் விரும்புறாங்க.. என்று விஜயகாந்த் கட்சியின் மூத்த நிர்வாகிகளிடம் கலகலப்பாக கூறினார். இது தொண்டர்களிடம் பலத்த எதிர்ப்பை ஏற்படுத்தியுள்ளது. (6-2)

# மவோயிஸ்ட் இயக்கத்தின் முக்கிய தலைவன் சுட்டுக்கொலை




மேற்கு வங்கத்தில் 148 பேர்உயிரை காவு வாங்கிய புகையிரத கவிழ்ப்பு சம்பவத்திற்கு முக்கிய காரணகர்த்தாவாக இருந்த மாவோயிஸ்ட் இயக்க முக்கிய தலைவர்களில் ஒருவரான மகத்தோவை பொலிஸ் கூட்டுப்படையினர் சுட்டுக்கொன்றனர்.

மேற்கு வங்கம் மோகன்பூர் வனப் பகுதியில் மாவோ இயக்கத்தினர் பதுங்கி இருந்தது பொலிஸ் அதிரடிப் படையினருக்கு தகவல் தெரிந்தது. இதனையடுத்து அவர்கள் சுற்றி வளைக்கப்பட்டனர். பொலிஸ் படையினருக்கும் தீவிரவாத இயக்கத்தினருக்கும் இடையே கடும் துப்பாக்கிச்சண்டை நடந்தது. இதில் மாவோ முக்கிய தலைவர் உமகண்டோ மகத்தோ கொல்லப்பட்டார். (6-2)

## பாரதச் செய்திகள்

# தி.மு.க ஆட்சியில் தமிழர்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது



## வைகோ குற்றச்சாட்டு

தி.மு.க. ஆட்சியில் தமிழர்களின் உயிருக் கும் உடை மைகளுக்கும் பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக ம.தி.மு.க. பொதுச் செய லாளர் வைகோ குற்றம் சாட்டியுள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தின் பல்வேறு இடங் களில் நேற்று முன்தினம் கட்சியின் கொடி யேற்ற நிகழ்ச்சிகளில் பங்கேற்ற அவர். தி.மு.க.அரசைப் பற்றி கடுமையாக விமர்சித் துப் பேசினார். விலைவாசி உயர்வு, மின் வெட்டு, கொலை மற்றும் கொள்ளை போன்ற சம்பவங்களால் மக்கள் மத்தியில் தி.மு.க. அரசுக்கு எதிரான கொந்தளிப்பான நிலை ஏற்பட்டிருப்பதாக கூறினார்.

தமிழகத்தில் தனிப்பட்ட ஒரு குடும்ப ஆட்சி நடைபெறுவதாக கூறியதுடன் தி.மு.க. ஆட்சியில் பொது மக்களின் உயிருக்கும் உடை மைகளுக்கும் பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டிருப்பதாகவும் குற்றம் சாட்டினார். இலங் கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட் டதற்கு மத்திய அரசு தான் காரணம் என்றும் வைகோ கூறினார் . (6-2)

# இந்திய இராணுவ தளபதிக்கு சீனா விசா வழங்க மறுப்பு

## வெளியுறவு மட்டத்தில் பெரும் சர்ச்சை

(புதுடெல்லி)

இந்திய இராணுவத்தின் வடக்கு பகுதியைச் சேர்ந்த தளபதி பி.எஸ்.ஐஸ்வாலுக்கு சீனா விசா வழங்க மறுத்துள்ளது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

ஜம்மு காஷ்மீர் சர்ச்சைக்குரிய மாநிலம் என்று என்று கூறியுள்ள சீனா ஐஸ்வாலின் கட்டுப்பாட்டில் அம்மாநிலம் உள்ளதை காரணம் காட்டி விசா வழங்க மறுத்துள்ளது.

இந்தியாவும் சீனாவும் செய்துள்ள ஒப்பந்தத்தின் அடிப்படையில் அண்மை காலங்களாக இராணுவ அதிகாரிகளை இருநாடுகளும் பயிற்சிக்காக பரிமாற்றம் செய்து வருகிறது. ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கு சீனாவும் உரிமை கொண்டாடுகிறது.

இந்தியாவின் எதிர்ப்பையும் மீறி ஜம்மு காஷ்மீரை சேர்ந்தவர்களுக்கு அந்நாடு தனி விசா வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இந்திய இராணுவ உயர் அதிகாரிக்கு சீன அரசு விசா வழங்க மறுத்துள்ள விவகாரம் வெளியுறவு மட்டத்தில் சர்ச்சையை கிளப்பியுள்ளது. இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் இது குறித்து தீவிரமாக கண்காணித்து வருவதாக தெரிவித்துள்ளது.

இருப்பினும் விசா மறுக்கப்பட்டது ஏற்றுக் கொள்ள முடியாத விடயம் என்றும் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் இராணுவ உயர் அதிகாரிக்கு விசா மறுத்ததை அடுத்து சீனாவுடனான இராணுவ தொடர்புகளை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாக மத்திய பாதுகாப்பு துறை அமைச்சகம் அதிரடியாக அறிவித்துள்ளது. (6-2)

# இரட்டைக் குழந்தைகளின் பிறப்பு விகிதம் அதிகரிப்பதேன்?

## டாக்டர்கள் தகவல்



கருத்தரிப்பு மாத்திரைகளை உட்கொள்வதால் இரட்டைக் குழந்தைகள் பிறப்பு விகிதம் அதிகரிப்பதுடன் பக்கவிளைவுகளும் ஏற்படுகின்றன என மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர். சென்னை போன்ற பெருநகரங்களில் பெரும்பாலான பெண்கள் தாமமாக திருமணம் செய்து கொள்கின்றனர். இதனால் மணமான ஓரிரு ஆண்டுகளிலேயே குழந்தை பெற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகின்றனர்.

குழந்தை பெற்றுக்கொள்வதில் உடல் ரீதியாக இவர்கள் சந்திக்கும் பிரச்சனைகள் எதிர்கொள்ள கருத்தரிப்பு மாத்திரைகள், ஊசிகளை எடுத்துக் கொள்கின்றனர். இவற்றால் இயற்கை முறை கருத்தரிப் பைவிட இரட்டை குழந்தைகள் பிறப்பு விகிதம் அதிகரிப்பதுடன் பக்கவிளைவுகளும் ஏற்படுகின்றன.

இது குறித்து திருவல்லிக்கேணி அரசு கஸ்தூரிபாய் காந்தி தாய் சேய் நல மருத்துவமனை டாக்டர். ரமேஷ் கூறுகை யில்;

நகரங்களில் வாழும் பெண்களில் பெரும்பாலானோர் 25 வயதுக்கு மேல் தான் திருமணம் செய்து கொள்கின்றனர். 30 வயதிற்கு மேல் குழந்தை பெற்றுக்கொள்வதில் தான் தாய்க்கும் சேய்க்கும் மருத்துவ ரீதியான சிக்கல்கள் ஏற்பட அதிக வாய்ப்பு உள்ளது.

இதனால் இவர்களுக்கு மணமாகிய சில மாதங்களிலேயே கருத்தரித்திட வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுகிறது. சினைப் பையிலிருந்து கருமுட்டை வெளியேறுவதில் பிரச்சினை, சீரற்ற மாதவிடாய் சுழற்சி போன்றவற்றால் இவர்கள் உடனே கருத்தரிப்பதில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

இப்பிரச்சனைகளை களைய உட்கொள்ளப்படும் கருத்தரிப்பு மாத்திரைகள், ஊசிகள் இரட்டைக் குழந்தைகள் பிறப்பு விகித்தை அதிகரிக்கின்றன. எங்கள் மருத்துவமனையில் 2007 ஆம் ஆண்டு 80தும் 2008 ஆம் ஆண்டில் 131 உம் மற்றும் இந்த ஆண்டு ஜுலை வரை 49 இரட்டைக் குழந்தைகளும் பிறந்துள்ளன. அளவிற்கு அதிகமாக கருத்தரிப்பு மருந்துகளை எடுத்துக் கொள்பவர்க ளுக்கு பிரசவத்திற்கு பின் உடல் பருமன், மாதவிடாயின்போது அதிக இரத்தப் போக்கு, கல்லீரல் பாதிப்பு, சினைப்பை புற்று நோய், கண்பார்வை மங்குதல் போன்ற பக்கவிளைவுகள் ஏற்படுகின்றன.

சரியான வயதில் திருமணம், ஆரோக்கியமான உணவுமுறை, முடிந்தவரை இயற்கை முறையில் கருத்தரிக்க முயற்சிப்பது போன்வற்றால், கருத்தரிப்பு மாத்திரைகளால் ஏற்படும் பக்க விளைவுகளை தவிர்க்கலாம் என டாக்டர் கூறினார்.

தனியார் கருத்தரிப்பு மையத்தின் மருத்துவ இயக்குனர் டாக்டர்.கீதா ஹரிபிரியா கூறும்போது, இயற்கை முறையை ஒப்பிடும்போது கருத்தரிப்பு ஊசிகள் மூலம் 30சதவீதமும், மாத்திரைகள் மூலம் 8 சதவீதமும் அதிகமாக இரட்டைக் குழந்தைகள் பிறக்கின்றன.

திருமணமாகி ஓர் ஆண்டிற்குள் கருத்தரிக்காத இளம்பெண்களும் கருத்தரிப்பு மாத்திரைகளை சாப்பிடும் ஆபத்தான போக்கு தற்போது அதிகரித்து வருகிறது என்றார்.

அத்துடன் கருத்தரிப்பு பிரச்சனை உள்ளவர்களில் பெரும்பாலானோருக்கு சினைப்பையைச் சுற்றி உருவாகும் நீர்க்குமிழிகள், கருமுட்டையை கருக்குழாய் வழியாக கர்ப்பப்பைக்கு செல்லாதபடி தடுக்கின்றன. இந்த நீர்க்குமிழிகளை உடைக்க தரப்படும் கருத்தரிப்பு மாத்திரைகளால், அதிக அளவில் நீர்க்குமிழிகள் உடைந்து ஒரே நேரத்தில் இரண்டு கருமுட்டைகளில் விந்துக்கள் இணைந்து இரண்டு கருக்கள் உருவாகின்றன என்றும் தெரிவித்தார். (6-2)

# காங்கிரஸ் தலைவரை தெரிவு செய்யும் தேர்தல்

(புதுடெல்லி)

காங்கிரஸ் தலைவரை தெரிவு செய்யும் கட்சித் தேர்தல் அடுத்த மாதம் 17 ஆம் திகதி நடைபெறும். காங்கிரஸ் கட்சித் தலைவராக சோனியா இதுவரை தொடர்ந்து நான்கு முறை தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் சீதாராம் கேசரிக்கு பின் காங்கிரஸ் தலைவர் பதவியை ஏற்று சோனியா தொடர்ந்து கட்சித் தலைவராக தெரிவு செய்யப்பட்டு வருகிறார்.

ஒரே ஒரு முறை இவருக்கு போட்டி வேட்பாளராக ஜித்தேந்திர பிரசாதா தேர்தலில் நின்று தோற்று போனார்.

காங்கிரஸ் கட்சித் தேர்தலில் போட்டியிடுபவர்கள் எதிர்வரும் செம்ரெம்பர் 3 ஆம் திகதி முதல் மனு தாக்கல் செய்யலாம் என்பது குறிப்பிடத்தக்கது. (6-2)

எதிர்காலத்தைப்பற்றி கவலைப்படாதவனுக்கு நிகழ்கால வாழ்க்கை இனிக்காது.

~ ஓர் அறிஞர்.

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# மலேரியா நோயாளி இனங்காணப்படும் இடங்களிலேயே மலத்தியோன் விசிறப்படும்

## யாழ்.சுகாதார சேவைகள் பணிப்பாளர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மலேரியா நோயாளர்கள் இனங் காணப்படும் பகுதிகளில் மட்டுமே மலத்தியோன் விசிறப்படு வதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வலம்புரியில் கடந்த 24.08.2010 திகதிய நாளிதழில் வெளியான வடமராட்சி பகுதியில் நுளம்புப் பெருக்கம் என்ற செய்திதொடர்பாக விளக்கமளித்து அனுப்பிவைத்த கடிதத்தி லேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மலேரியா நோயைப் பரப்புவது அனோபிலிஸ் வகை நுளம்புகள். இவை வீடுகள் அல்லது கட்டிடங்களில் உட்பகுதி யிலேயே தங்கி ஓய்வு எடுப்பது வழக்கம். எனவே அனோபிலிஸ் வகை நுளம்புகளை அழிக்கும் கிருமி நாசினியான மலத்தி யோன் வீடுகளுக்குள் கடந்த காலங்களில் சுகாதார திணைக் களத்தால் விசிறப்பட்டு வந்தது.

தற்போது மலேரியா நோய் யாழ்.மாவட்டத்தில் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த வருடம் இதுவரை 02 நோயாளிகளே மலேரியா நோயுடன் இனங் காணப்பட்டுள்ளார்கள்.இலங்கை சுகாதார திணைக்களத்தின் தற்போதைய நிலைப்பாட்டின்படி மலேரியா நோயாளர்கள் இனங்காணப்படும் பகுதிகளில் மட்டுமே மலத்தியோன் விசிறும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

எனவேதான் யாழ்.மாவட்டத்திலும் மலேரியா நோயாளர் இனங்காணப்பட்ட பகுதிகளில் மட்டுமே மலத்தியோன் வீசப் படுகின்றது.

டெங்குநோயை ஈடீஸ் வகை நுளம்புகளே பரப்புகின்றன. இவை வீட்டிற்கு வெளியிலேயே தங்கி ஓய்வெடுப்பதுண்டு. வீட்டிற்கு வெளியிலேயே பெரும்பாலும் மனிதர்களை கடிப்ப துண்டு. எனவே இந்நுளம்புகளை ஒழிக்க வீட்டிற்குள் மலத்தி யோன் விசிறுவதனால் எந்தப் பயனும் ஏற்படாது.

டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டில் நுளம்புகளை உற்பத்தி யாக்கும் இடங்களை அழிப்பதே பிரதானமான நடவடிக்கை யாகும். அதிக டெங்குநோயாளர்கள் காணப்படும் இடங்களில் வேறு கிருமிநாசினிகளின் மூலம் புகையூட்டல் நடவடிக்கை கள் மேற்கொள்ளப்படுகின்றன. யாழ்.மாவட்டத்திலும் இனங் காணப்பட்ட பகுதிகளில் புகையூட்டல் நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றோம் என்றுள்ளது. (ச)

# வாகன நெருக்கடியைத் தவிர்க்க காத்திரமான நடவடிக்கை தேவை

யாழ்ப்பாணத்தின் போக்குவரத்து – வாகன நெரிசல் – மக்கள் கூட்டம் என்பன தொடர்பில் ஆக்கபூர்வமான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தத் தவறுவோமாயின் அதனால் ஏற்படக் கூடிய பாரதூரமான விளைவுகளுக்கு முகம்கொடுக்கவேண்டிய அபத்தம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும்.

குறிப்பாக வாகன நெரிசல் இயல்பு வாழ்க் கையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிடுகிறது. இதுபற்றி முன்னரும் இவ்விடத்தில் சுட்டிக் காட்டியிருந்தோம்.

யாழ்.குடாநாட்டு மக்களைப்பொறுத்தவரை அவர்கள் இத்தகையதொரு வாகன நெரிசலுக்கு எப்போதும் முகம் கொடுத்ததில்லை.

அதேநேரம் தென்பகுதியில் இருந்துவரும் வாகனங்களுக்கு வாகன நெரிசல் சாதாரண மான விடயமாகும்.

இந்நிலையில் முற்றுமுழுதாகப் பாதிக்கப்படு வது குடாநாட்டு மக்கள் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை.

இதற்குமேலாக வாகன நெரிசலின்போது ஏற்படக்கூடிய கருத்து முரண்பாடுகள் இனத்துவ ரீதியான முறுகல் நிலைக்கும் வழிவகுத்து விடும்.

எனவே வாகன நெரிசல் ஏற்படுவதை தடுப் பதற்கான ஒழுங்குகள் நடைமுறைப்படுத்துவது கட்டாயமானதாகும்.

இதில் வீதிச் சமிக்ஞை விளக்குகளை பொருத்துதல் முக்கியமானதாகும்.

அதே நேரம் ஒருவழிப்பாதை மற்றும் கனரக வாகனங்களை பகல் வேளையில் உள்வர அனு மதியாமை, மக்கள் கூடும் வேளையில் வாகனங் களில் இருந்து பொருட்களை இறக்குதல் மற் றும் ஏற்றுதல் ஆகியவற்றை முற்றாகத் தடை செய்தல் என்றவிடயங்களை மிகவும் இறுக் கமாக நடைமுறைப்படுத்துவது கட்டாயமான தாகும்.

அதேவேளை யாழ்ப்பாணத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்குச் செல்லும் வாகனங்களை யாழ்ப்பாணம் முற்றவெளிப்பகுதியில் அல்லது யாழ்ப்பாணக் கோட்டையின் நுழைவாயிலுக்கு முற்பட்ட பகுதியில் தரிப்பதற்கு ஏற்பாடுசெய்வ தும் அவசிய செயற்பாடாகும்.

யாழ்ப்பாண நகரப் பகுதியில் இரவு வேளை யில் கொழும்புப் பயணத்திற்கான பஸ்களின் தரிப்பிடத்தால் ஏனைய வாகனங்களின் போக் குவரத்து மிகமோசமாகப் பாதிக்கப்படுகின்றது.

ஆகவே இரவுநேரத்தில் கொழும்புசெல்லும் சாதாரண பஸ் உட்பட சொகுசு பஸ்கள் அனைத்தையும் முற்றவெளிப் பகுதிக்கு மாற் றுவதும் அதற்கேற்றவாறு அப்பகுதிக்கு மின் சார வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதும் அவசியமாகும்.

# புலிகள் அமைப்பில் வேலை செய்தவருக்கு நியூசிலாந்தில் புகலிடம் கிடைக்கும் வாய்ப்பு

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குச் சொந்த மான சரக்குக் கப்பலில் பிரதம பொறியியலாளராக வேலை பார்த்த இலங்கைத் தமிழர் ஒருவருக்கு நியூசிலாந்தில் அகதி அந்தஸ்து கிடைக்கும் வாய்ப்புக் கிட்டியுள்ளது.

புலிகளால் ஆயுதக் கடத்தல் நடவடிக்கைக்குப் பயன் படுத்தப்பட்ட கப்பலில் வேலை பார்த்திருந்த இவர் 2001 ஆம் ஆண்டு நியூசிலாந்தை வந்தடைந்தார். அங்கு அகதி அந் தஸ்துக் கோரினார். நியூசிலாந்தில் அகதி அந்தஸ்துக்கான பரிசீலனைகள் சபை இவர் தொடர்பாக விசாரணை நடத்தியது.

கப்பலின் ஆயுதக் கடத்தல் நடவடிக்கைகள் குறித்தும் புலிகள் இயக்கத்தின் செயற்பாடுகள் குறித்தும் நன்றாக தெரிந்துகொண்ட இவர் இவ்வேலையில் சேர்ந்திருக்கிறார் என்று சபை கண்டுபிடித்தது. இதன்அடிப்படையில் இவரது அகதி அந்தஸ்துக் கோரிக்கையை நிராகரித்துவிட்டது.

ஆனால் இவர் இத்தீர்ப்பை ஆட்சேபித்து நியூசிலாந்து உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடுசெய்தார். அகதி அந்தஸ் துக்கான பரிசீலனை சபையின் தீர்ப்பு தவறானது என இம் மேன் முறையீடு மீதான தீர்ப்பில் உயர்நீதிமன்றம் பிரகடனப் படுத்தியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு சொந்தமான கப்பலில் இந்நபர் வேலை பார்த்திருந்தாலும் கூட தனிப்பட்ட ரீதியில் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்ற மைக்கான ஆதாரங்கள் இல்லை என்று சுட்டிக் காட்டியிருக் கும் உயர்நீதிமன்றம் இந்நிலையில் இவர் அகதி அந்தஸ் துக்கு விண்ணப்பிக்க அருகதை உடையவரே என்று தீர்ப் பளித்துள்ளது. (ச–5)

# தவறவிட்ட உறவுகளைக் கண்டுபிடிக்க தமிழர்களுக்கு கனேடிய செ.ச.குழு உதவி

(ரொரன்டோ)

கடந்தகால யுத்த நடவடிக்கைகளால் தவறவிட்ட உறவுகளைக் கண்டு பிடிக்கின்றமைக்கு ஈழத் தமிழர்களுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவின் கனேடிய கிளை மூலம் வாய்ப்பு ஒன்று கிடைத்துள்ளது.

யுத்த நடவடிக்கைகள் காரணமாக இடம்பெற்றிருக்கும் இடப்பெயர்வுகள், இயற்கை அனர்த்தங்கள் மற்றும் ஏனைய மனிதாபிமான நெருக்கடிகள் போன்றவற்றால் அன்புக் குரிய உறவுகள் பிரிய நேர்ந்திருந்தால் அவர்களுக்கு இடையில் மீண்டும் இணைப்பை ஏற்படுத்தும் மனிதாபிமான இணை யத்தள சேவை ஒன்றை இக்கனேடிய கிளை நேற்று முதல் ஆரம்பித்துள்ளது.

உலகில் எந்தப் பாகத்தில் இருக்கின்றவர்களும் பிரிந்து சென்ற உறவினர் சம்பந்தமாக இந்த இணையச் சேவையில் முறைப்பாடுகளைப் பதிந்துகொள்ளலாம். அவரைக் கண்டு பிடித்துக்கொடுக்க அல்லது அவருடன் தொடர்பை ஏற்படுத்திக் கொடுக்க இக் கனேடிய கிளையினர் உரிய நடவடிக்கைகளை செய்து கொடுப்பார்கள். (ச–5)

# சரத் பொன்சேகாவுக்கு எதிரான சாட்சியங்களின் பட்டியல் சமர்ப்பிப்பு

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு எதி ரான இரண்டாவது இராணுவ நீதிமன்றத்தில் சரத் பொன் சேகா தரப்பில் சாட்சியமளிக்க உள்ளவர்களின் பட்டியல் நேற்று நீதிமன்றில் சமர்பிக்கப்பட்டது.

இவ்வழக்கின் அடுத்த விசாரணை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாக பதவி வகித்த காலத் தில் ஆயுதக்கொள்வனவில் இடம்பெற்றதாக கூறப்படும் முறை கேடுகள் தொடர்பாக இரண்டாவது இராணுவ நீதிமன்ற விசா ரணை நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச–5)

# பொலிஸார் துப்பாக்கிச் சூடு சந்தேக நபர் உயிரிழப்பு

(கொழும்பு)

பொலிஸார் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் சந்தேக நபர் ஒரு வர் உயிரிழந்துள்ளார். பிட்டிகல பிரதேசத்தில் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவரை கைதுசெய்ய முற்பட்டபோது இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சந்தேக நபர் கைக்குண்டொன்றை எறிய முற்பட்டபோது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகத் தெரி விக்கப்படுகிறது. உயிரிழந்த சந்தேகநபர் பெண் ஒருவரை பாலியல் வன்முறைக்கு உட்படுத்தியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ச–5)

# சுவாமி விவேகானந்தரின் அருள்வாக்கு



பிறரைக் கண்டிப்பதெல்லாம் தன்னைத் தானே கண்டித்துக் கொள்வதாகும்.

தொட்டதையெல்லாம் பொன்னாக்கும் பரிசவேதியைப் போன்றவர் இறைவன். தொட்டால் அந்த பொருளின் வடிவம் மாறாது.ஆனால் அதன் இயல்பு மாறும். நமது மனித வடிவம் அப்படியே இருக்கும். ஆனால் பிறருக்கு தீங்கோ பாவமோ செய்யும் எண்ணம் நமக்கு இருக்காது என்று என் குருதேவர் கூறுவதுண்டு.

பக்தி என்னும் சூரியன் நமது இதயத்தில் உதயமாகத் தொடங்கியதும், நமது செயல்கள் அனைத்தையுமே இறைவனிடம் அர்ப்பணித்து விட வேண்டும் என்ற விருப்பம் நமக்கு ஏற்பட்டு விடுகிறது.ஒருகணம் இறைவனை நாம் மறக்க நேர்ந்தால், அது நமக்கு அளவில்லாத வேதனையைத் தருகிறது.


# ஐரோப்பா- ஆசிய நாடுகளை இணைக்க புதிய கடற்பாதை

(மாஸ்கோ)

ஐரோப்பா கண்டத்தையும் ஆசியாக்கண்டத்தையும் கடல்வழியாக இணைக்கும் வகையில் ஆர்டிக் கடலில் புதிய கடல் பாதையினை ரஷ்யா அமைக்கவுள்ளது. இந்தக் கடல்பாதையானது சூயஸ் கால்வாய் வழியாக செல்லும் நேரத்தினை காட்டிலும் குறுகிய தூரம் ஆசிய நாடுகளுக்கு சென்றுவிடலாம். எரிபொருள் செலவும் மிச்சமாகும் என கூறப்படுகிறது.

இதற்காக ரஷ்யாவிற்கு சொந்தமான கப்பல் கட்டும் நிறுவனமாக சோன்கோம்பிளட் எஸ்.சி.எம்.பால்டிகா எனும் கப்பல் மூலம் கடல் பாதை அமைக்கப்படுகிறது. இந்த கப்பல் ஆர்டிக் கடலில் பல பனிப்பாறைகளை உடைக்கும் திறன் கொண்ட வகையில் ஒரு இலட்சத்து 14 564 தொன் எடை கொண்டதாக உள்ளது.

இந்தக் கடல்பாதை வழியாக 14000 தொன் எடையுள்ள சரக்கு கப்பல்கள் செல்லலாம். இத்திட்டம் முழுமை பெற்றால் ரஷ்ய பொருளாதாரம் மேலும் முன்னேறும். இது குறித்து பால்டிகா கப்பல் போக்குவரத்து அதிகாரியும் ரஷ்ய இயற்கை எரிவாயு நிறுவன தலைவருமான லியோனிட்மைக் கேல்சன் தெரிவிக்கையில், இந்த புதிய கடல்பாதை சூயஸ் கால்வாய் செல்லும் பாதையை விட இருமடங்கு விரைவாக செல்லக்கூடியதெனவும் 15 சதவீத சரக்கு போக்குவரத்து கட்டணமும் குறையும் என்றார். (6-2)



தென்கொரியாவின் தலைநகர் சியோல் நகரில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் நடந்த வரவேற்பு விழாவில் பொலிவியா ஜனாதிபதி இவோ மொராலெஸை அந்நாட்டு ஜனாதிபதி லீ மியுங்-பேக்(வலது) வரவேற்றார்.

# ரஷ்யாவுக்காக அமெரிக்காவில் உளவு பார்த்த விஞ்ஞானி

(லண்டன்)

இங்கிலாந்தை சேர்ந்த மயுரிஷ்வில் இன்ஸ் கடந்த 1962 ஆம் ஆண்டு நோபல் பரிசு பெற்றார். இவர் டி.என்.ஏ.மூலக்கூற்றில் இரட்டை சுருள் இருப்பதை கண்டுபிடித்து சாதனை படைத்தார்.

அதற்காக இவருடன் சேர்ந்து விஞ்ஞானிகள் ஜேம்ஸ்வாட்சன், பிரான்சிங் கிரிக் உள்ளிட்டோரும் மருத்துவத்துறையில் சாதனை படைத்ததற்காக இப் பரிசை பெற்றனர்.

கடந்த 1945 ஆம் ஆண்டு அமெரிக்காவில் பணிபுரிந்த போது அவுஸ்திரேலிய அணு விஞ்ஞானியுடன் இவருக்கு தொடர்பு ஏற்பட்டது. அவர் அமெரிக்காவில் நியூயோர்க்கிலுள்ள புரூக்களின் அணு உற்பத்தி நிலையத்தில் வேலை பார்த்தார்.

கடந்த 1950 ஆம் ஆண்டு அவருடன் சேர்ந்து இவர் அமெரிக்காவின் அணு உற்பத்தி இரகசியங்களை ரஷ்யாவுக்கு உளவு பார்த்து தகவல் தெரிவித்ததாக கைது செய்யப்பட்டார்.

இதைத் தொடர்ந்து இவர் இங்கிலாந்து உளவுத்துறையான எம்.15 இல் ஒப்படைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டார். இந்த நிலையில் இவர் குற்றவாளி என்றும் ரஷ்யாவுக்காக அமெரிக்காவில் உளவு பார்த்ததாகவும் இங்கிலாந்து உளவுத்துறை தற்போது அறிவித்துள்ளது.

இதற்காக அவர் பல வருடங்கள் தீவிர கண்காணிப்பில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-2)




# பிலிப்பைன்ஸ் நாட்டில் 4 பயணிகள் சுட்டுக்கொலை

(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டின் தெற்குப் பகுதியில் பேருந்தை நிறுத்திய தீவிரவாதிகள் பயணிகளை சரமாரியாக சுட்டதில் 2 பொலிஸார் உட்பட 4 பேர் உயிரிழந்தனர்.

ககாயான் டி ஓரா நகரிலிருந்து ஜாம் போன்காவுக்கு பயணிகள் பேருந்து நேற்று முன்தினம் சென்றது. அப்போது அப் பகுதி சோதனை சாவடியில் பொலிஸ் உடையணிந்த தீவிரவாதிகள் பேருந்தை நிறுத்தினர்.

பயணிகள் அனைவரையும் கீழே இறங்கச் செய்து 2 பொலிஸார் உட்பட 4 பேரை சுட்டுக் கொன்றனர். முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் அப் பகுதியில் பல்வேறு தீவிரவாத குழுக்கள் செயல்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அந்த வழியாகச் செல்லும் பேருந்துகளை நிறுத்தி பயணிகளை கொள்ளையடிப்பது தீவிரவாதிகளின் அன்றாட வழக்கமாக உள்ளது.

தலைநகர் மணிலாவில் சில நாட்களுக்கு முன்பு முன்னாள் பொலிஸார் ஒருவர் சுற்றுலாப் பயணிகள் பேருந்தைக் கடத்திய சம்பவத்தில் 8 பேர் உயிரிழந்தனர். (6-2)

# இந்திய வெள்ள நிவாரண உதவி ; தயக்கம் காட்டும் பாகிஸ்தான்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் ஏற்பட்டிருக்கும் வரலாறு காணாத வெள்ளச் சேதத்திலிருந்து மக்களை மீட்க இந்தியா தரும் சுமார் 2ஆயிரத்து 500 கோடி ரூபாய் உதவியை வாங்கிக் கொள்வதென்று முடிவுசெய்துவிட்டது. பாகிஸ்தான் அந்த உதவியை எந்த வடிவில் பெறுவது, எங்கே பெறுவது, எப்படிப்பெறுவது என்பதை எல்லாம் இன்னமும் தீர்மானிக் காமல் இருக்கிறது.

பாகிஸ்தானுக்குவந்து வெள்ள சேதமீட்பு, நிவாரண உதவிகளைச் செய்ய விரும்பும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கும் பிற நாடுகளைச் சேர்ந்த தொண்டர்களுக்கும் தாராளமாக விசா அளிக்குமாறு வெளிநாடுகளில் உள்ள தன்னுடைய தூதரகங்களுக்கு தகவல் அனுப்பியிருக்கும் பாகிஸ்தான் அதிலும் ஒரு விசமம் செய்திருக்கிறது. இந்தியா, இஸ்ரேல் ஆகிய நாடுகளைச் சேர்ந்த தனி நபர்களுக்கும் அமைப்புக்களுக்கும் விசா தரவேண்டாமென்று கூறியிருக்கிறது.

இஸ்ரேலையும் இந்தியாவையும் ஒரே தட்டில் வைத்ததன் மூலம் இந்தியாவை எதிரியாகவே பாகிஸ்தான் கருதுவதை புரிந்து கொள்ள முடிகிறது.இருந்தும் நெருக்கடியான இந்தத் தருணத்தில் பகைமையைப் பாராட்டக் கூடாது என்ற விவேகம் கூட பாகிஸ்தான் ஆட்சியாளர் களிடம் இல்லையென்பதையே இந்த விசா உத்தரவு காட்டுகிறது.

பாகிஸ்தானில் இப்போது நேரிட்டுள்ள வெள்ள அழிவை சர்வதேச அமைப்புக்கள் மதிப்பிட்டு வருகின்றன. என்ன சேதம் ஏற்பட்டது, என்னென்ன தேவைப்படுகிறது என்ற பட்டியல் தயாரானதும் இந்தியாவால் எந்த வகையில் உதவமுடியும் என்று பார்த்து உதவிகள் கேட்கப்படும் என்று பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அதிகாரி அப்துல் பாசித் இஸ்லாமாபாத்தில் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

பாகிஸ்தானில் வெள்ளம், நிலச்சரிவு ஆகியவற்றால் ஆயிரக்கணக்கான மக்கள் தங்களுடைய வீடுகளைவிட்டு வெளியேற நேர்ந்திருக்கிறது. சுமார் 2கோடிபேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்ற தகவல் வந்தவுடனேயே பிரதமர் மன்மோகன்சிங், பாகிஸ்தான் பிரதமர் யூசிப் ரசா கிலானியைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு இந்தியாவின் கவலையை தெரிவித்ததுடன் என்ன உதவிகள் தேவை என்றாலும் உடனே அளிக்கத் தயார் என்றார்.

ஆனால் பாகிஸ்தான் இன்னமும் தயக்கத்தை விட்டு உதவிகளைப் பெற முன்வரவில்லை.

இதற்கிடையே பாகிஸ்தான் பத்திரிகைகளில் சில ஜீலம், சீனாப் ஆறுகளில் இந்தியா திடீரென தண்ணீர் திறந்துவிட்டதால் தான் வெள்ளப்பெருக்கும்நிலச்சரிவும் ஏற்பட்டது என்று கூட அபாண்டமாக செய்திகளை வெளியிட்டன. (6-2)

# நாட்டிற்குள்ளேயே வளரும் தீவிரவாதத்தால் பிரித்தானியாவிற்கு பேராபத்து -நிபுணர்கள் எச்சரிக்கை

பிரித்தானியாவிற்கு ஆபத்து வெளியில் எங்கும் இருப்பதை விட அதிகமாக உள்நாட்டிலேயே வளர்ந்து வருகிறது என நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.


இது தொடர்பாக ராயல் யுனைட்டெட் செர்விசெஸ் இன்ஸ்டிடியூட் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் சமீப காலமாக பிரித்தானிய சிறைகளில் இருக்கும் முஸ்லிம்களின் எண்ணிக்கை அதிகமாகி வருவதை குறிப்பிட்டுள்ளதுடன் அவர்கள் அனைவரும் புனித போராளிகள் என்ற பெயரில் ஒன்றிணைந்து தாக்குவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகமாக உள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

இதற்காக அவர்கள் கம்பிகளுக்குப் பின்னால் மோசமான பயிற்சியாளர்கள் மூலம் தயார் செய்யப்படுகிறார்கள் என்பதையும் இந்த தாக்குதல்களில் ஒன்றில்லா விட்டாலும் மற்றொன்று உறுதியாக வெற்றி பெறும் என்ற நம்பிக்கை அவர்களிடையே விதைக்கப்படுகிறது எனவும் கூறப்படுகிறது.

மற்ற மேற்கத்திய நாடுகளைக் காட்டிலும் உள்நாட்டுப் பயங்கரவாதத்தால் நிகழவிருக்கும் பேராபத்து பிரித்தானியாவிற்கே அதிகம் உள்ளது என்பதை பாதுகாப்பு தொடர்பான அமைப்புக்களும் வலியுறுத்தியுள்ளன. இந்தத் தாக்குதல்கள் எந்த நேரமும் நடக்கலாம் எனவும் மேலும் கூறப்பட்டுள்ளது.

மதிப்பீட்டின் படி பார்த்தால் தற்போது பிரித்தானிய சிறைகளில் இருக்கும் 8 ஆயிரம் முஸ்லிம்களில் பத்தில் ஒருவர் இங்கிலாந்திலும் வேல்சிலும் உள்ள உச்ச கட்ட பாதுகாப்புடன் கூடிய நிறுவனங்களை புனித போராளிகள் என்ற பெயரில் தாக்க தயார் செய்யப்பட்டு வருகின்றனர் என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அதாவது தற்போது சிறையிலிருக்கும் 800 பேர் தீவிரவாத நடவடிக்கைகளுக்காக கைது செய்யப்பட்டும் அவர்கள் அதை குற்றமாக உணரவில்லை என்பதோடு இன்னும் 10 ஆண்டுகளுக்குள் அவர்கள் மீண்டும் சமுதாயத்துடன் கலந்து தங்கள் பணிகளை தொடருவார்கள் எனவும் கூறப்பட்டுள்ளது. (6-2)



கனமழை பாதிப்பு பாகிஸ்தானில் இன்னும் நீங்கவில்லை. ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்து முகாம்களில் தங்க வைக்கப்பட் டுள்ளனர். சிந்து மாகாணம் சுக்கார் பகுதியில் உள்ள தற்காலிக முகாமில் உணவுக்காக நீண்ட வரிசையில் காத்திருந்த மக்கள்.

# திரோட், பிரோட் சதமடித்தனர் சரிவிலிருந்து மீண்டது இங்கிலாந்து


திரோட்

(லண்டன்)

திரோட், பிரோட் சதமடித்து அசத்த இங்கிலாந்து அணி சரிவிலிருந்து மீண்டு எழுந்தது.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இதில் நடைபெற்று முடிந்த மூன்று போட்டிகளில் இரண்டில் இங்கிலாந்து அணியும், ஒரு போட்டியில் பாகிஸ்தான் அணியும் வெற்றி பெற்றன.

இந்நிலையில் நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் நேற்று முன்தினம் லண்டன் லோட்ஸ் மைதானத்தில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணித்தலைவர் சல்மான் பட் முதலில் களத்தடுப்பை தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி நேற்று முன்தினம் முதல் நாள் ஆட்டம் மழை காரணமாக 12.3 ஓவர்கள் மட்டும் வீசப்பட்ட நிலையில் நிறுத்தப்பட்டபோது முதலாவது இன்னிங்ஸில் ஒரு விக்கெட்டை இழந்து 39 ஓட்டங்களை எடுத்தது.

இந்நிலையில் இரண்டாம் நாளாகத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணியின் முன்னணித் துடுப்பாட்ட வீரர்களான குக் 10 ஓட்டங்களுடனும் பீற்றர்சன், கொலின்வுட், மோர்கன் ஆகியோர் பூச்சியத்துடன் ஆட்டமிழந்து வெளியேறினர்.

அடுத்துவந்த பிறிர் 22 ஓட்டங்களுடனும், சுவான் பூச்சியத்துடனும் அமீரின் பந்தில் ஆட்டமிழந்தனர்.

எனினும் அடுத்து 8 ஆவது விக்கெட்டுக்காக இணைந்த திரோட், பிரோட் ஜோடி பிரிக்கமுடியாத இணைப்பாட்டத்தை வழங்கினர்.

இதில் திரோட் (195 பந்துகளில்) தனது நான்காவது சதத்தையும் மறுமுனையில் பிரோட் (159 பந்துகளில்) தனது முதலாவது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்தனர்.

இந்நிலையில் இங்கிலாந்து அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேரமுடிவில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 9 விக்கெட்டுக்களை இழந்து 346 ஓட்டங்களை எடுத்தது.

இதில் திரோட் 302 பந்துகளில் (15 பவுண்டரிகள் உட்பட) 149 ஓட்டங்களையும் பிரோட் 220 பந்துகளில் (11 பவுண்டரிகள், ஒரு


பிரோட்

சிக்ஸ்சர் உட்பட)125 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் மொகமட் அமீர் 6 விக்கெட்டுகளையும் ஆசிப் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# ஐ.பி.எல். வீரர்கள் ஏலத்தில் சர்ச்சை; சிக்கலில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி



(புதுடில்லி)

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) அரங்கில் மீண்டும் சர்ச்சை எழுந்துள்ளது. கடந்த 2009ஆம் ஆண்டு நடந்த வீரர்கள் ஏலத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக பிளின்டொப் தேர்வு செய்யப்பட்டதில் முறைகேடு நடந்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இதில் முன்னாள் ஐ.பி.எல். தலைவர் லலித் மோடி மற்றும் பி.சி.சி.ஐ. செயலாளர் சீனிவாசன் ஆகியோருக்கு தொடர்பு இருப்பதாக கூறப்படுகிறது.

இந்தியன் பிரிமியர் லீக் இருபது-20 கிரிக்கெட் தொடர் கடந்த 2008ஆம் ஆண்டு முதல் நடந்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் வீரர்கள் ஏலம் நடந்து வருகிறது. கடந்த 2009 ஆம் ஆண்டு நடந்த ஏலத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி இங்கிலாந்து அணி வீரர் அன்ரூ பிளின்டொப்பை ரூபாய் 7.25 கோடிக்கு எடுத்தது. இவரை ஏலத்தில் எடுப்பதில் ராஜஸ்தான் றோயல்ஸ் மற்றும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிகளிடையே கடும் போட்டி நிலவியது.

இப் பிரச்சினை அப்போதைய ஐ.பி.எல். தலைவர் லலித் மோடி, சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு சாதகமாக செயற்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது.

ஏலம் நடப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன் லலித் மோடி சென்னை சுப்பர் கிங்ஸ் அணி உரிமையாளர் சீனிவாசகனுக்கு இ-மெயில் ஒன்றை அனுப்பியுள்ளார். அதை தனியார் ரீ.வி. ஒன்று வெளியிட்டுள்ளது.

இதில் பாகிஸ்தான் வீரர் தான்வீரை அணியிலிருந்து நீக்கவேண்டாம். பிளிடொப்பை ஏலத்தில் எடுப்பதில் போட்டி வேண்டாம் என்று ராஜஸ்தான் அணியை சமாதானப்படுத்துவதில் நான்மிகவும் சிரமப்பட்டுவிட்டேன்.

ராஜஸ்தான் அணியின் தலைவர் வோர்னையும் சமாதானப்படுத்திவிட்டேன் என செய்தி அனுப்பியிருந்தார். இதற்கு சீனிவாசன் தங்கள் உதவிக்கு நன்றியென பதிலளித்துள்ளார்.

### அதிரடி மறுப்பு

-தற்போது இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே கடந்த மூன்று ஐ.பி.எல். தொடர்களில் சுமார் 2000 கோடி ரூபாய்வரை ஊழல் செய்துள்ளதாக லலித் மோடி குற்றச்சாட்டப்பட்டு தலைவர் பதவியிலிருந்து அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார்.

தற்போது இவர் மீது பி.சி.சி.ஐ. குழுவொன்றை அமைத்து விசாரித்துவருகிறது. இந் நிலையில் சென்னை சுப்பர்கிங்ஸ் அணி உரிமையாளரும் பி.சி.சி.ஐ. செயலாளருமான சீனிவாசனும் சர்ச்சையில் சிக்கியுள்ளார். இதனை அதிரடியாக மறுத்துள்ளார் சீனிவாசன்.

இது குறித்து அவர் கூறியதாவது,

சென்னை அணி பிளின்டொப்பை நேர்மையான முறையில்தான் ஏலத்தில் எடுத்தது. ராஜஸ்தான் அணி பிளின்டொப்பை ரூபாய் 5 கோடிக்கு ஏலம் கேட்டது. ஆனால் நாங்கள் 7.25 கோடி ரூபாய்க்கு கேட்டதால் ஏலத்தில் வெற்றிபெற்றோம். இதில் எந்த ஒளிவுமறைவும் இல்லை.

இப்படியிருக்கும் போது லலித் மோடி ஷேன்வோர்னை சமாதானப்படுத்த வேண்டிய அவசியம் என்ன? வோர்ன் என்ன ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் உரிமையாளரா? ஏலத்தில் நாங்கள் எந்தத்தவறும் செய்யவில்லை என்பது 100 சதவீதம் உண்மை. ஏலத்தின் போது எங்களிடம் மட்டுமே 10 கோடி ரூபாய் வரை பணம் இருந்தது. மற்ற அணிகளிடம் இதைவிட குறைவாகவே இருந்தது. அதனால் பிளின்டொப்பை ஏலத்தில் எடுக்க எங்களுக்கு எந்த சிக்கலும் இல்லை என்பதே உண்மை. இவ்வாறு சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

### வோர்ன் அதிர்ச்சி

இந்த விவகாரம் குறித்து ராஜஸ்தான் றோயல்ஸ் அணித்தலைவர் ஷேன்வோர்ன் கூறுகையில்,

இப்பிரச்சினைகுறித்து எனக்கு எதுவும் தெரியாது. ராஜஸ்தான் றோயல்ஸ் அணி நிர்வாகம் இது போன்ற செயல்களில் எப்போதும் செயல்படாது. எனக்கு இதில் எந்தவித தொடர்பும் இல்லையென்றார்.

## வீ.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக்கிண்ணம் கால் இறுதி, அரையிறுதி, இறுதிப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் 50 பந்து பரிமாற்றங்கள் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் நான்காவது காலிறுதிப் போட்டி வல்வெட்டித்துறை ஈகிள்ஸ் கழக அணிக்கும், ஜொலிஸ்ரார்ஸ் கழக அணிக்கும் இடையில் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

இரண்டாவது காலிறுதிப்போட்டி யாழ். சென்றல் விளையாட்டுக்கழக அணிக்கும், தெல்லிப்பழை கிறாஸ்கொப்பர்ஸ் அணிக்கும் இடையில் செப்ரம்பர் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, இரண்டாவது அரையிறுதிப் போட்டி நாளை வெற்றிபெறும் அணியினருக்கும் செப்ரம்பர் 5 ஆம் திகதி வெற்றி பெறும் அணியினருக்கும் இடையில் செப்ரம்பர் 12 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இறுதிப் போட்டி ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட யாழ்.பல்கலைக்கழக அணியினருக்கும் 12ஆம் திகதி வெற்றிபெறும் அணியினருக்கும் இடையே வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

## சொற்பொழிவு

(வதிரி)

வதிரி உல்லியனொல்லை கண்ணகி அம்மன் ஆலய மகோற்சவத்தில் இன்று பிற்பகல் 6.15-7.15 மணிவரையும் தமிழருவி த.சிவகுமாரனின் தன்னை நினையத்தருவான் எனும் தலைப்பில் சொற்பொழிவு இடம் பெறும். (ச-3)

# மட்டக்களப்பில் மீன் பிடிக்குச் சென்ற மூவரைக்காணவில்லை என முறைப்பாடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனை கல்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலிருந்து மீன் பிடிப்பதற்காக கடலுக்குச் சென்ற மூவரைக்காணவில்லை என கல்குடா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 19ஆம் திகதி மீன் பிடிக்கச்சென்ற 53 வயதுடைய கணபதிப்பிள்ளை சிவராஜ் 20 வயதுடைய சிவராஜ் ஜீவராஜ், 41 வயதுடைய செல்லப்பா மனோகரன் ஆகியோரே காணாமல் போயுள்ளதாக தெரியவருகிறது.

இது தொடர்பாக குடும்ப உறுப்பினர்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரனிடம் முறையிட்டுள்ளனர்.

அவர் மட்டக்களப்பு மாவட்ட பிரதிப்பொலிஸ் மா அதிபர் விஜய குணவர்த்தனாவுடன் தொடர்பு கொண்டு பேசியுள்ளார். அத்துடன் மீன்பிடி அபிவிருத்தி அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கும் இக் காணாமல் போயுள்ளமை குறித்து கடிதம் அனுப்பியுள்ளார்.

மட்டக்களப்பில் கடந்த திங்கட்கிழமை மாநகரசபை உறுப்பினரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினருமான பி.சகாயமணி காணாமல் போயிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ச-5)

# மகளை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய தந்தை கைது!

(செட்டிக்குளம்)

செட்டிக்குளம் இடம் பெயர்ந்த முகாமில் நபர் ஒருவர் தமது மகளை பாலியல் வல்லுறவுக்க உட்படுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

45 வயதான குறித்த நபர் இள வயது மகளை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியுள்ளதாகவும் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

செட்டிக்குளம் ஆனந்தகுமாரசுவாமி இடம் பெயர் முகாமில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் இந்த சம்பவம் இடம் பெற்றதாகவும் சம்பவம் குறித்து பாதிக்கப்பட்ட சிறுமியின் உறவினர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

17 வயது சிறுமி ஒருவரே இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டுள்ளார். குற்றம் சுமத்தப்பட்ட நபரிடம் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இதேவேளை அரலங்கவில பிரதேசத்தில் 33 வயது திருமணமான நபர் ஒருவர் 12 வயது சிறுமியை வல்லுறவுக்குட்படுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது. நெல்வயல் ஒன்றில் இந்தச் சம்பவம் இடம் பெற்றதாகவும் பொலிஸார் குறித்த சந்தேக நபரை கைது செய்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது. (ச-5)

# இலங்கையில் விசா வழங்கும் நடைமுறையில் மாற்றம்

இலங்கையில் விசா வழங்கும் நடைமுறையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இனிவரும் காலங்களில் இலங்கைக்கு வந்து இறங்கி விசாக்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வசதி இருக்காது எனக் குறிப்பிடப்படுகின்றது.

சகல நாடுகளுக்குமான ஒன் எரைவல் விசாக்களை ரத்துச் செய்வதென இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சிங்கப்பூர் மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளைத் தவிர்ந்த ஏனைய நாடுகளுக்கு விசா வழங்கும் நடைமுறையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதியுடன் இலங்கைக்கு வந்து இறங்கிய பின்னர் (ஒன் எரைவல்) வழங்கப்படும் விசாக்கள் ரத்துச் செய்யப்படவுள்ளது.

இந்தப் புதிய திட்டத்தின் அடிப்படையில் 70க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்குச் செல்ல விசா விண்ணப்பிக்கக் கோரிக்கை முன்வைக்க வேண்டும் என குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டு அதிகாரி டபிள்யூ.ஏ.சீ.பெரேரா தெரிவித்துள்ளார்.

இதன்படி குறித்த நாடுகளுக்கான இலங்கைத் தூதரகத்தில் விசா விண்ணப்பித்து அதன் பின்னரே இலங்கைக்குப் பயணங்களை மேற்கொள்ள முடியும்.

எனினும் இலங்கைப் பிரஜைகளுக்கு ஒன் எரைவல் விசா வழங்கும் நாடுகளினது பிரஜைகளுக்கு இலங்கை ஒன் எரைவல் விசா வழங்கத் தயார் என அறிவித்துள்ளது.

சிங்கப்பூர் மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளைத் தவிர்ந்த வேறு நாடுகளில் இலங்கைப் பிரஜைகளுக்கு ஒன் எரைவல் விசா வழங்கப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

## மர்மப்...

துச் சிதறியது. இதில் படுகாயமடைந்த அவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகிறார்.

இது குறித்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-5)

# தமிழக மீனவர் மீதான தாக்குதலை இலங்கைக் கடற்படை நிறுத்தியுள்ளது

## இந்திய வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு

(புதுடில்லி)

தமிழக மீனவர்கள் மீதான இலங்கை இராணுவத் தாக்குதல் நிறுத்தப்பட்டுள்ளது என்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் உறுப்பினர்களின் கேள்விக்குப் பதிலளித்து அவர் கூறியது, கடந்த 2008 ஆம் ஆண்டில் இலங்கை இராணுவம் தமிழக மீனவர்கள் மீது நடத்திய தாக்குதல் குறித்து 15 வெவ்வேறு சம்பவங்கள் பற்றிய தகவல்கள் வந்தது.

இதில் 6 மீனவர்கள் கொல்லப்பட்டதாகவும் 17 மீனவர்கள் படுகாயமடைந்ததாகவும் தெரிய வந்தது.

சமீபத்தில் நடந்த ஒரு தாக்குதலிலும் தமிழக மீனவர் ஒருவர் கொல்லப்பட்டதாகத் தெரிய வந்தது. இதைத் தொடர்ந்து இலங்கை இராணுவத்திடம் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றது.

தமிழக மீனவர்களின் பாதுகாப்பும் வலியுறுத்தப்படுகின்றது. தற்போது இலங்கை இராணுவம் தமிழக மீனவர்கள் மீதான தாக்குதலை நிறுத்தியுள்ளதாகத் தெரிய வந்துள்ளது என்றார். (ச-5)

## அமைச்சர்கள் பலர் அடுத்த...

செயலகத்தில் அனர்த்த சேவைகள் மாநாட்டை நடத்தவுள்ளார்.

இதேவேளை எதிர்வரும் 6 ஆம், 7 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள அரச அதிபர்களின் மாநாட்டினை முன்னிட்டு பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் சரத் அமுனுகம மற்றும் பிரதி அமைச்சர் டிலான் பெரேரா ஆகியோர் வருகை தரவுள்ளனர்.

இந் நிலையில் முக்கிய அமைச்சர்கள் பலர் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளதாகத் தகவல்கள் தெரிவித்தன.

ஜனாதிபதியின் விசேட பணிப்பின் பேரில் அமைச்சர்கள் பலர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## அரசியல் அமைப்புத் திருத்த...

செய்தியாளர் மாநாட்டில் மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதற்காக அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பதன் காரணமாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் எதிர்க் கட்சிகளின் கூட்டமைப்புக்குமிடையிலான உறவில் எந்தவித பாதிப்பும் ஏற்படாது.

அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் அனைத்து அபிவிருத்தித் திட்டங்களுக்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பூரண ஆதரவையும் ஆலோசனையையும் வழங்கவுள்ளது. அத்துடன் ஜனாதிபதியின் பதவிக் காலத்தை மூன்றாவது தடவையாகவும் அதிகரிப்ப தனால் முஸ்லிம் சமூகத்திற்கு எந்தவிதப் பிரச்சினையும் இல்லை.

அவ்வாறு ஏதாவது பிரச்சினைகள் ஏற்படும் பட்சத்தில் கலந்துரையாடி தீர்த்துக் கொள்ள முடியும். அரசாங்கம் 17-வது திருத்தச் சட்டத்திற்கு மாற்றீடாக கொண்டு வரவுள்ள சட்டத்திற்கும் எமது கட்சி ஆதரவு வழங்கவுள்ளது.

தொடர்ந்தும் அரசாங்கத்திற்கு எமது கட்சியின் உதவி தேவைப்படும் பட்சத்தில் எமது கட்சியின் உயர் பீடம் கூடி தீர்மானம் எடுக்கும். நாங்கள் தொடர்ந்தும் எதிர்க்கட்சி வரிசையிலேயே இருப்போம் என அவர் குறிப்பிட்டார். இதேவேளை நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை ஒருவர் மூன்று தடவைகள் வகிப்பதற்கேற்ப அரசியல் அமைப்புத் திருத் தம் செய்யப்படுவதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு அளிக்கும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவூவ் ஹக்கீம் தெரிவித்தார். (ச-3,5)

## வெளிநாட்டிலிருந்து குவியும்...

தங்கியிருந்த ஒருவரிடம் கப்பம் கோரிய சம்பவம் மற்றும் கொக்குவில் பகுதியில் தங்கியிருந்தவருக்கு மிரட்டல் விடுத்த சம்பவங்கள் போன்றனவே வெளிநாட்டவர்களை அச்சம் கொள்ள வைத்துள்ளதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கடந்த வாரம் லண்டனிலிருந்து வந்து வடமராட்சியில் தங்கியிருந்த ஒருவர் கப்பம் கேட்டுக் கடந்த 25 ஆம் திகதி மிரட்டப்பட்டதுடன் அவரின் கடவுச் சீட்டு, அடையாள அட்டை மற்றும் ஆவணங்கள் என்பன மிரட்டல்காரர்களால் பறித்துச் செல்லப்பட்டன.

தம்மை இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் என அறிமுகப்படுத்திய சிலரே இச் சம்பவத்தில் ஈடுபட்டதாக பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டிருந்தது.

இதேவேளை நேற்று முன்தினம் இரவு இவ்வாறான மிரட்டல் சம்பவம் ஒன்று கொக்குவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது. திருமண நிகழ்வு நேற்று நடைபெறவிருந்த நிலையில் நேற்று முன்தினம் அவ்வீட்டுக்குச் சென்ற சிலர் துப்பாக்கியைக் காட்டி மிரட்டியதுடன் கப்பமும் கோரியுள்ளனர்.

இதேவேளை வெளிநாட்டிலிருந்து வரும் தமிழ் மக்களிடம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்தும் பணம் பறிக்கும் நிகழ்வுகள் இடம்பெற்று வரும் நிலையில் அதனைக் கட்டுப்படுத்த எவரும் முன்வரவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டது. (எ-1)




## அசைக்க முடியாத பலத்துடன்...

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இலங்கையின் அரசியல் அமைப்பு மாற்றத்திற்கு ஆதரவு வழங்குவதாகத் தீர்மானித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற அரசியல் உயர் பீடத்தின் கூட்டத்தில் இது தொடர்பாக இறுதி முடிபு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி ஜனாதிபதி ஒருவர் மூன்று முறை ஜனாதிபதிப் பதவி வகிப்பதற்கு புதிய அரசியல் அமைப்பு வழி செய்யவுள்ளது.

எனவே அரசியல் அமைப்பு மாற்றத்திற்கு 5 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே பற்றாக் குறையாக இருந்த நிலையில் 6 ஆசனங்களை நாடாளுமன்றத்தில் கொண்டுள்ள சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத் திற்கு வழங்கும்ஆதரவுடன்அரசாங்கம்அசைக்க முடியாதபலத்தைப்பெற்றுள்ளது.

இதேவேளை முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்துடன் இணைந்து செல்ல வேண்டும் என கட்சியின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொடுத்த கடுமையான நெருக்கு தல்களில் தாக்குப் பிடிக்க முடியாத கட்சியின் தலைவர், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அவசரமாகச் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின்போது இரண்டு விடயங் களில் பேரம் பேசல்கள் இடம்பெற்றதாக உள்ளகத் தகவல்கள் தெரிவித்ததாக இணையத்தளம் ஒன்று தெரிவித்தது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசாங் கத்தின் பொதுஜன ஐக்கிய முன்னணியில் இணைவது. இதற்கு அமைச்சரவை அந்தஸ் துள்ள அமைச்சுடன் மூன்று பிரதி அமைச்சர் பதவிகள் வழங்குவது.

எதிர்க்கட்சியாகவேயிருந்து கொண்டு அரசியல் அமைப்புத் திருத்தத்தின்போது நாடாளுமன்றத்தில் அரசாங்கத்துக்கு ஆதரவாக வாக்களிப்பது.

இதற்காக முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் பகுதிகளின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு முப்பது மில்லியன் ரூபாயிலிருந்து ஐம்பது மில்லியன் ரூபாய் வரை அரசாங்கம் ஒதுக்குவது.

இதில் முதலாவது திட்டத்தை நிராகரித்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இரண்டாவது திட்டத்திற்கு இணங்கியதுடன் கட்சியிலிருந்து தனியாக நாடாளுமன்ற உறுப்பினர்களை உள்வாங்குவதில்லை எனவும் கட்சியை உடைப்பதில்லை எனவும் உறுதியளித்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

இந்த இரு தரப்பு உடன்பாட்டின் மூலம் ஏற்கனவே அரசாங்கத்துடன் உள்ள முஸ்லிம் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் முரண்படாத அதே நேரம் முஸ்லிம் காங்கிரஸையும் உள் வாங்கும் தந்திரத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பயன்படுத் தியுள்ளதாக முஸ்லிம் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (ச-5)

## வடக்கில் நலன்புரித் திட்ட...

மேற்கொள்ளப்படுகின்றன. அவர்களுக்கான வீடமைப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் உள்நாட்டு மற்றும் சர்வதேச அமைப்புக்கள் செயற்பட்டு வருகின்றன.

எனினும் அவை யாவும் அரசாங்கத்தின் ஊடாகச் செயற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந் நிலையில் வெளிநாட்டு அமைப்புக்களை இணைத்துக் கொண்டு வடக்கு மக்களுக்கான நலன்புரி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமாகவிருந்தால் அந்த மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியல் பிரதிநிதிகளை ஏன் இணைத்துக் கொள்ள முடியாது? என அவர் கேள்வி எழுப்பியுள் ளார்.

வடக்கில் குடியேற்றம் செய்யப்பட்டுள்ள மக்கள் தற்போது பல்வேறு தேவைகளை எதிர்கொண்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

இந் நிலையில் தம்மையும் இணைத்துக்கொண்டுநடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது அவர்களின் தேவைகளைப்புரிந்து கொண்டு செயற்பட முடியும் என்றார். எனினும் இது அரசியல் தீர்வு குறித்த அர சாங்கத்துடனான பேச்சுவார்த்தைக்கும் இதற்கும் தொடர்பில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

**Walk In Interview**

PRE-SCHOOL ENGLISH TEACHER (Full Time)

Dates: 28,29/08/2010

Time : From 10.00am – 04.00pm

British College of Higher Studies

No.15 2/1, Sirambiyadi Lane (Off Stanley Rd,

(Closer to Ariyakulam Junction), Jaffna.

Tel:021-2224550 Email:info@bchs.lk

(C-947)

**விற்பனைக்கு உண்டு**

கல்வி நிறுவனங்களுக்கு தேவையான கொட்டில் (20 அடி நீளம் 15 அடி அகலம்), வாங்கு, மேசை, கரும்பலகை யாவும் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
0776696976, 0774593247

(2268)

**இன்று வெளிவருகிறது!**

A/L பொருளியல் நூல்

இலங்கை மத்திய வங்கி

ஆசிரியர்:வே.கருணாகரன்

இலங்கை மத்திய வங்கியின் வைரவிழா நாள்

வெளியீடு: 28.08.1950 - 28.08.2010

(2266)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.08.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.